சந்தமிழ்ச்
சல்வி

23




கப்பலோட்டிய தமிழர்


# .உ. சிதம்பரனர்
# ாற்ருண்டு விழா மலர்

பு-சஎ] வள்ளுவர் ஆண்டு உ௦௦௩, ஆவணி (Sep. '72) [பரல் க


# வ. உ. சி. நூற்றாண்டு விழா - தூத்துக்குடி (5-9-'72)



இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார்
தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் தலைமையில் வ. உ. சி. சிலையைத்
திறந்து வைத்தல்.



தமிழக ஆளுநர் மாண்பமை கே. கே. ஷா அவர்கள்
வ. உ. சி. நூற்ருண்டு விழா மலரை வெளியிடல்.




வ. உ. சி. நூற்ருண்டு விழா நினைவு
அஞ்சல் தலையை இந்திரா காந்தி அம்மையார்
கலைஞரிடம் வழங்குதல்.

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

| சிலம்பு ௪௭ | திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௩, ஆவணி<br>செப்டம்பர் 1972 | பரல் ௧ |
|---|---|---|


## நம் செல்வியின் புத்தாண்டு

செந்தமிழ் வளர்க்கும் நம் செந்தமிழ்ச் செல்வி தனது நாற்பத்தாறு ஆண்டு நிரம்பப்பெற்று நாற்பத்தேழாவது ஆண்டு எய்துகின்றது. இவ்வாண்டு தொடங்குகிறபோது நாட்டு விடுதலைக் குழைத்த செம்மல் வீர சிதம்பரனரின் நூற்ருண்டு விழா மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப் பெறுவது பேருவகை தருவதொன்ருகும். இந்தியப் பேரரசு தலைமை யமைச்சர் இந்திராகாந்தியம்மையார் தூத்துக்குடியில் கப்பலோட்டிய வீரப்பெருமகனர் திருப்பெயரை அந்நகரிற் புதிதாக அமைக்கப் பெற்றுவரும் துறைமுகத்திற்குச் சூட்டியதும், அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்ததும், அவர்களின் திருவுருவம் பொறிக்கப்பெற்ற அஞ்சற்றலையினை வெளியிட்டதும், வ. உ. சி. கல்லூரியின் வெள்ளிவிழாவிலே தலைமை தாங்கியதும் பொதுவாக இந்திய மக்களுக்கும் சிறப்பாகத் தமிழ் மக்களுக்கும் எல்லையில்லா இன்பம் தருகின்றன. எனவே நாற்பத்தேழாஞ் சிலம்பின் முதற் பரல் வ. உ. சிதம்பரனர் நூற்ருண்டு விழா மலராகவே வெளியிடப்பெறுவது பெறுதற்கரிய பெரும்பேறேயாகும்.

தமிழ்நாட்டின் தலைநகரின் துறைமுகத்தை யொட்டிய சியார்சு டவுண் (George Town) என்ற பகுதிக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதியவர்கள் 'சிதம்பரனர் நகர்' எனப் பெயர் சூட்டியதும் பாராட்டுதற்குரியதாகும்.

1961இல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 1008 ஆவது வெளியீட்டுவிழா, 1969 இல் திருவள்ளுவர் பெருவிழா, 1970 இல் கழகப் பொன்விழா ஆகிய மூன்று பெருவிழாக்களையும் மிகவுஞ் சிறப்பாக நடத்தி மலர்கள் வெளியிட்ட கழக ஆட்சியாளர் தாமரைத்திரு வ. சுப்பையா பிள்ளை அவர்கள் 22—9—1972இல் 75 ஆவது அகவை நிறைவெய்தப் பெறுகின்றனர். இவ்வாண்டு திசம்பர்த் திங்களில் அவர்கள் இதுகாறும் கழகவழி ஆற்றிவந்த ஆக்கப்பணிகளை உலகறியும் பொருட்டுச் சென்னையிலே பெருவிழாக் கொண்டாடவும், விழா மலர் ஒன்று வெளியிடவும், விழாவை யொட்டிக் கலை, நூற் காட்சி அமைக்கவும் திட்டமிட்டுப் பெருமக்கள் முப்பத்தறுவர் அடங்கிய விழாக்குழு அமைக்கப் பெற்றுள்ளது. தமிழ்நாடு நலத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் விழாக்குழுத் தலைவராவார்கள்.

நூற்பதிப்புக்கெனவே 1920இல் நிறுவப்பெற்ற கூட்டுப் பங்கு நிறுவனமாகிய இக் கழகம் பல துறைகளில் தமிழிலும் ஆங்கிலத்திலும் 1470க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுப் பல பாராட்டுக்களைப் பெற்றிருப்பதோடு மறைமலையடிகள் நூல் நிலையம், மறைமலையடிகள் கலைமன்றம், சிவஞானமுனிவர் நூல் நிலையம், திருவள்ளுவர் செந்தமிழ்ப் புலவர் கல்லூரி, குமர குருபரர் குழந்தைப் பள்ளி, திரு நீலாம்பிகையார் தையற் கலைப் பயிற்சிப் பள்ளி ஆகிய நிறுவனங்களைச் சீரும் சிறப்புமாக நடத்தி வருகின்றது.

மேலும் ஒரு நூற்பதிப்புக் கழகம் தமிழ் வளர்ச்சி, தமிழ் இன உணர்ச்சி, தமிழ்நாட்டு மறுமலர்ச்சி ஆகிய மூன்றையும் தனது சிறந்த குறிக்கோளாகக் கொண்டு ஐம்பதாறாண்டுகளாக இடையறவு படாமல் நடத்தி வரும் செந்தமிழ்ச் செல்வி என்னும் திங்களிதழைத் தமிழறிஞர் பெருமக்கள் வாங்கியும் வாங்குவித்தும் போற்ற வேண்டாவா!

தொடக்க காலத்தில் 1200 உறுப்பினர்கட்கு மேல் இருந்தது வரவர 600க்குக் குறைந்துவிட்டது. இதனை நிறுத்தினால் எத்தனையோ வரலாற்றுக் குறிப்புக்களையும் அறிவுச் செல்வங்களையும் தாம் இழந்தவர்களாவோம்.

எனவே தமிழாசிரியர்களும், தமிழ்ப் பேராசிரியர்களும் தாங்கள் அதனை வாங்குவதோடு தங்களுடைய பள்ளிகள் கல்லூரிகளை வாங்கச் செய்தும், தங்களுடைய மாணவர்களில் ஒரு சிலரை வாங்குமாறு செய்தும் இதனை வாழ்விப்பார்களாக!

# கப்பலோட்டிய தமிழர்— வாழ்வும் வாக்கும்

செஞ்சொற்கொண்டல், புலவர்-சொ. சிங்காரவேலன்
எம். ஏ., டிப். லிங்.,
[அ. வ. அ. கல்லூரி, மயூரம்]

## அறப்போர் முரசு

உரிமை பெற்ற வாழ்வே வாழ்வு; அடிமைப்பட்டு அஞ்சி வாழ்வது வாழ்வாகாது. அடிமைப்பட்ட உள்ளத்தில் அச்சமே மண்டிக் கிடக்கும்; சிறுமைக் குணங்கள் மலிந்திருக்கும்; குழப்பம் செழித்திருக்கும்; தெளிவின்மை பெருக்கெடுக்கும்: எங்கு உரிமை தலை தூக்குகின்றதோ அங்கேயே இன்பம் செறிந்திருக்கும். நாட்டு விடுதலை பெறுமுன்பு இந்தியப் பெருநாடு அடிமைத்தளைப் பட்டு, அந்நியர்க்குக் கடனாற்றி அச்சமுற்றுக் கிடந்தது. மாற்றார் வருகைக்கு முன் மலர்ந்திருந்த உள்ளங்கள், வணிகத்தின்பொருட்டு வந்து நாட்டைப் பிடித்து ஆண்ட வெள்ளையர்க்கு அடிமைப்பட்டுச் சோர்ந்து கிடந்தன. அந்நிலைகண்டு கவிஞர் பாரதி, 'நெஞ்சு பொறுக்குதிலையே' என்று மனமுருகிப் பாடினார். அந்நிலையில் தான் விடுதலைப் போராட்டம் வீறு கொண்டு எழுந்தது. இமய முதல் குமரி வரை ஒருணர்வு கொண்டு எழுந்தனர் இந்தியப் பெருங்குடிமக்கள். அன்னையின் அடிமை விலங்கினை ஒடித்தெறிய எண்ணற்ற இளைஞர்கள் எழுந்தனர். அண்ணல் காந்தியடிகளின் அறப்போர் முரசு கேட்டுத் திரளாக இந்தியக் காளையர் எழுந்தோடி வந்தனர். அவர்களுக்கு முன்னோடியாகத் தமிழகத்தில் திகழ்ந்தவர் நம் வீர சிதம்பரனார்.

## பிறப்பு

செந்தமிழ் வளர்க்கும் நெல்லை மாவட்டத்தில், ஒட்டப்பிடாரம் என்னும் சிற்றூரில், எட்டையபுரம் சிற்றரசின் வழக்கறிஞராக இருந்த உலகநாத பிள்ளை யவர்களின் திருமகனாராக, பரமாயி அம்மாளின் மணிவயிற்றில், செந்தமிழ்த் தாய் செய்த தவப்பயனாகச் சிதம்பரனார் பிறந்தார். பிறந்த ஆண்டு கி. பி. 1872; செப்டம்பர் ஐந்தாம் நாள்.

**கல்வியும் தொழிலும்**

பிறந்த ஊரிலே தொடக்கக் கல்வி கொண்ட நம் தோன்றலார், திருநெல்வேலி மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த பள்ளியிலும், இறுதியில் தூத்துக் குடியில் சேவியர் உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி கற்றார். பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெற்றார். பின்னர்த் திருச்சி சென்று சட்டக் கல்வி கற்றார். தம்முடைய இருபத்து மூன்றாம் அகவையில் வழக்கறிஞராயினர்.

> "கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
> வேட்ப மொழிவதாம் சொல்"

> "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
> வெல்லுஞ்சொ லின்மை யறிந்து"

என்ற குறட்பாக்களுக்கு இலக்கியமாக இருந்தது பிள்ளையவர் களின் வழக்கறிஞர்ப் பணி.

**சட்டப் பணி**

ஏழை எளியவர் மாட்டுப் பேரிரக்கம் கொண்டவர் பிள்ளை யவர்கள். அவர்கட்குரிய வழக்கு ஆயின் பொருள் வாங்காது வாதிடுவார். எத்துணை இரக்கம் உடையாரேனும் கைம்மாறு கருதாது ஏழைகட்குச் சட்டமன்றத்தே வாதிடுவோர் என்னும் அரியவர் ஆவர். பிள்ளையவர்களிடம் காணப்பட்ட இப்பண்பு அவர்களின் நெஞ்சம் தமிழ்தழுவியதாக இருந்தமைக்கு இனிய சான்றாகும். ஒருகால், தந்தையாரும் இவரும் இருவேறு கட்சிகளுக்காகப் பரிந்து வாதாடும் சமயமும் வந்தது. வெற்றி கண்டவர் சொல்வீரராகிய மகனார்தாம். தந்தையார் திரு. உலகநாத பிள்ளை அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையும் உண்டோ?

> "தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
> மன்னுயிர்க் கெல்லா மினிது"

என்ற பொதுமறைக் கிலக்கியமாகப் பொலிந்தது இந்நிகழ்ச்சி. கி. பி. 1900 ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து தூத்துக் குடியில் பிள்ளையவர்களது நீதிமன்றப் பணி தொடரலாயிற்று.

**வங்காளப் பிரிவினை**

இக்காலத்தே, இந்தியப் பெருநாட்டின் வடக்கே வங்காளம் பிரிவினை செய்யப்பட்டது. இது கி. பி. 1905 ல்

நிகழ்ந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகத்தான், நாடு முழுவதும் விடுதலைப் போராட்டம் கிளர்ந் தெழலாயிற்று. வங்காளத்தில் விபினசந்திர பாலரும், அரவிந்தரும், பாஞ்சாலத்தில் லசபதிராயும், மகாராட்டிரத்தில் திலகரும், தென்னாட்டில் பிள்ளையவர்களும் இப் போராட்டத்தின் தலைவர்களாக விளங்கினர். வெளிநாட்டுப் பொருள்களை வெறுத்து ஒதுக்குதலும், நம்நாட்டுப் பொருள்களுக்கு ஆதரவு நல்குதலும் மக்களிடையே பெருகலாயின. தூத்துக்குடியில் தரும சங்க நெசவுச் சாலையும், சுதேசிப் பண்டக சாலையும் வ. உ. சி. யால் தோற்றுவிக்கப்பட்டன. பிள்ளையவர்களது உரிமை முழக்கம் நெல்லை மாவட்டத்தின் சிற்றூர், பேரூர்தோறும் ஒலிக்கலாயிற்று. விடுதலை வெறி மக்களிடை முறுகி விளைதற்கு இவருடைய வீரக்கனல் செறிந்த விரிவுரைகள் தூண்டுகோலாயின. 'நம்நாட்டை ஆளும் மாற்றாரின் இன, நிற வெறித்தனங்கள் நம்மவரால் எத்துணை நாள்கள் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்' என்று முழங்கினர் பிள்ளையவர்கள். 'நம்நாடு நம்முடையதே' என்ற உணர்வு மக்கள் மன்றத்தில் மெல்ல மெல்ல உறுதிப்பட்டு வரலாயிற்று.

## கப்பலோட்டிய தமிழர்

தென்னாட்டுத் திலகராக விளங்கிய பிள்ளை அவர்கள் வெள்ளையனை எதிர்த்து, ''சுதேசிக் கப்பற் கம்பெனி'' தொடங்கிய பெருஞ்சிறப்புடையவர். ஆங்கிலேய வாணிகத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாலேயே நம்நாட்டு வாணிகம் செழிக்கும் என்று நம் செம்மலார் நம்பினர். கப்பல் தொழில் வழியே ஆங்கிலேயர் பெரும்பொருளைப் பெறுவதைத் தம் ஊராகிய தூத்துக்குடியிலேயே இவர் கண்டார். அவர்கள் கப்பலில் இந்தியர் படும் இன்னல்களை உணர்ந்தார். பலரிடம் பங்கு சேர்த்துப் பெரும் பொருள் சேர்த்துக் கூட்டுறவு அடிப்படையில் ''கப்பல் கம்பெனி'' ஒன்றை அயரா முயற்சியுடன் அவர் தொடங்கினர். லாலோ, காலியா என்ற கப்பல்களை வாங்கினர். இடையூறுகள் பல எதிர்ப்பட்டன. மனம் தளராமல் பம்பாய் சென்று குத்தகைக்குப் பல கப்பல்களை எடுத்தார். தம் மகன் இறந்துவிட்ட போதும், தாம் ''கப்பல் கம்பெனி'' அலுவல் தொடர்பாக வெளியூர் சென்றிருந்த பிள்ளை யவர்கள் அலுவலை முடித்துக்கொண்டே திரும்பினர். தாம் உயர் குறிக்கோளைக் கொண்டிருந்தமையால் - மன உறுதி அவரது கோட்பாட்டிற்கு எந்த அளவிற்குத் துணைநின்றது என்பதனை இதனால் அறியலாம். கப்பலோட்டிய தமிழர் என்ற பெருஞ்சிறப்புப் பிள்ளையவர்களை வந்தடைந்தது.

"களியிரு முக்கீர் காவா யோட்டி
வளிதொழி லாண்ட உரவோன் மருக"

என்ற புறநானூற்று வரிகளால் இப் பெருந்தகையாரை அழைத்தல் பெரிதும் பொருத்துவதாகும்.

## நாமக்கல் கவிஞர் நற்கவிதை

பிள்ளையவர்கள் கப்பல் ஓட்டும் துணிவான முயற்சியே அவர்க்குச் சிறையிருக்கும் வாழ்வைத் தந்தது; தேசபக்திக் கனலைப் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் இதயத்தில் மூட்டியது; நாமக்கல் கவிஞரை இவ்வாறு மனமுருகப் பாடிட வைத்தது;

"எல்லாரும் தேசபக்தர் இந்த நாளில்;
எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க் காண்போர்
சொல்லாலும் எழுத்தாலும் விளக்க வொண்ணுத்
துன்பமெல்லாம் சிறைவாசம் அந்த நாளில்;
வல்லாளன் சிதம்பரனுர் சிறையிற் பட்ட
வருத்தமெல்லாம் விரித்துரைத்தால் வாய்விட் டேங்கிக்
கல்லான மனத்தவர்க்கும் கண்ணீர் கொட்டக்
கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும்"

## சிறையிருந்த செம்மல்

தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்யத் துணைநின்று அவர்களது நல்வாழ்விற்கு வாதிட்டார் நம் செம்மலார். திரு. வி. க. போன்றோர் பிற்காலத்தே தமிழ்நாட்டுத் தேசிய இயக்கத்தை வளர்த்தற்கு இவ்வாறு வழிகாட்டியாக விளங்கினார். தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்கியதற்காகச் சிறைத் தண்டனை பெற்றார். அந்தமான் தீவில் நாற்பதாண்டுக் காலம் சிறையில் வாழ்தல் வேண்டும் என்று பின்கேஃ என்ற தீர்ப்பு நீதிமன்ற நடுவரால் நம் செம்மலார்க்கு வழங்கப் பெற்றது. இமய முதல் குமரி வரை இந்தத் தீர்ப்பு ஒரு பெரும் பரபரப்பை உண்டாக்கிற்று. இங்கிலாந்துப் பாராளு மன்றத்திலும் கண்டனம் எழுந்தது; சிறைத்தண்டனை இவற்றால் குறைக்கப் பெற்றது. மூன்றாம் வகுப்புக் கைதியாகச் சிறையில் சொல்லொணாத துன்பங்களை ஏற்றார்.

## சிறையில் ஏற்ற இன்னல்கள்

மாடுபோல் செக்கிழுத்தார் மாண்புடை அண்ணலார்; கல்லுடைத்தார் இச் சொல் வீரர். எந்த வகையான உணவுப் பற்றுக்குறை இல்லாமலிருந்தும் கேழ்வரகுக் கூழே தரப்

பட்டது. அன்னையின் அடிமைத்தளையறுக்க அனைத்தையும் ஏற்று, செந்நாப் போதரின் திருவாக்கிற்கு இலக்கியமாக இலங்கினார். 'இடுக்கணழியாமை' என்ற அதிகாரத்திற்கு எடுத்துக்காட்டாகப் பிறங்கிற்றுப் பிள்ளையவர்கள் பெருவாழ்வு.

> " மடுத்த வாயெல்லாம் பகடன்னான் உற்ற
> இடுக்கண் இடர்ப்பா டுடைத்து "

அன்றோ ? நாட்டு விடுதலை என்னும் திருத்தேரினை—இந்தியத் தாய் இவர்ந்து வரும் எழில் இரதத்தினை—ஈர்த்துச் சென்ற 'செந்தமிழ் வீரப்பகடு' ஆகவே செம்மலார் விளங்கினார்.

## கவிமணியின் கண்ணீர்ப்பாட்டு

கவிமணியவர்கள், சிறையிருந்த தம் செந்தமிழ்ச் செல்வர் பட்ட இன்னல்கள் அனைத்தையும் இனிய பாட்டொன்றில் எழுதிக் காட்டியுள்ளார்கள் ; இன்று நாடு பெற்றுள்ள உரிமை வாழ்விற்கு அடிப்படையே இதுதான் என்கின்றது கவிமணியின் திருப்பாட்டு :

> " கைநோவக் கால்நோவக் கல்லுடைத்துச் செக்கிழுத்து
> மெய்சோர்ந்தும் ஊக்கம் விடாதுநின்ற—ஐயன்
> சிதம்பரம் அன்றுசிறை சென்றிலனேல் இன்று
> சுதந்திரம் காண்பாயோ சொல்."

## செம்மலார் செந்தமிழ்ப்பணி

நம் செந்தமிழ்ச் செல்வரின் அரிய படைப்புக்கள் தமிழிற்குப் பெருமை தருபவை. சேம்சு ஆலன் எழுதிய வற்றை " மனம்போல வாழ்வு," " அகமே புறம் " என்னும் பெயர்களுடன் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். மொழி பெயர்ப்பு வகையிலும் மற்றோர்க்கு முன்னோடியாகத் திகழக் கூடிய முதன்மை பிள்ளையவர்கட்கு இருந்தமை இவற்றால் இனிது புலப்படுகின்றது. " மனம்போல வாழ்வு " என்னும் மொழிபெயர்ப்பு நூலை உரிமைப்படுத்தும்போது, " தேசத்திற்கு உழைப்பவர்க்குச் சமர்ப்பணம் " என்று எழுதியுள்ளமை நோக்கத்தக்கது. அஞ்சாமையும் துணிவும் கொண்டவராய், அடக்குமுறைக்கு அடிபணியாதவராய் நம் செம்மலார் விளங்கிய மைக்கு அச்சில் வெளிவந்துள்ள இச்சொற்களே சான்று பகரும்.

தொல்காப்பியத்தை இளம்பூரணர் உரையோடும் பதிப்பித் தார் ; திருக்குறளுக்கும் இன்னிலைக்கும் சிவஞான போதத்

திற்கும் உரை கண்டார்; திருக்குறளைப் பின்பற்றி "மெய்யறம்" என்ற செய்யுள் நூலைக் கண்ணனூர்ச் சிறைச்சாலையில் இருந்த போது எழுதினர். "வலிமைக்கு மார்க்கம்", "சாந்திக்கு மார்க்கம்" என்ற சேம்சு ஆலன் நூல்களும் மொழிபெயர்த்து எழுதப்பட்டவை. "மெய்யறிவு"—தனிப்பாடற்றிரட்டாக வெளியிடப் பெற்றது. திருக்குறள் மணக்குடவர் உரை பிள்ளையவர்களது பெருமுயற்சியால் வெளிவந்துள்ளது. "விவேகபானு", "இந்துநேசன்" என்ற இதழ்கட்கு ஆசிரியராக இருந்து பல்வேறு கட்டுரைகளை எழுதி உதவினர். இவ்வாறு தேசீய இயக்கத்தின் இடையேயும், தாய்மொழித் தொண்டும் புரிந்த தன்னளியாளர் அவர். தமிழ் தன் உரிய பெருமை அனைத்தையும் பெற்று அரியணை ஏறி அரசு ஓச்சுதல் வேண்டும் என்று கனவு கண்டவர் அவர். இன்று தமிழகம் தமிழ்மணம் கமழத் திகழ்ந்து வருதலை, இருந்து காணும் வாய்ப்புப் பிள்ளையவர்கட்கு இருந்திருக்குமாயின் அவர்கள் அடையும் மகிழ்ச்சி அளவற்றதாக இருக்கும் என்பது ஒருதலை.

## வாழ்வியற் பண்புநலன்கள்

அஞ்சாமை, நேர்மை, செய்ந்நன்றி மறவாமை, எளிமை, சொல்லுக்குத்தக்க செயல், இறையன்பு, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சீரிய நட்பு, முறையான இல்வாழ்க்கை, இன்முகம், இன்சொல், விருந்துபேணல், எளியோர்க்கிரங்கல், விடாமுயற்சி முதலிய பல்வேறு பண்பு நலங்கள் நம் செம்மலார்க்கு இயல்பாக அமைந்திருந்தன. "விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்" என்றபடி அவையனைத்தும் அமைவன என்று கூறலாம். தீண்டாமை ஒழிப்பில் பேரார்வம் கொண்டவர் நம் செம்மலார்; விதவைமணம், கலப்புமணம் ஆகியவற்றை ஆதரித்தார்; சமூகச் சீர்திருத்தவாதியாகவும் இவ்வகையில் இலங்கினர். கப்பல் கம்பெனியைத் தொடங்கும்போது துணை நின்ற ஆறுமுகம் பிள்ளை என்பாரின் பெயரைத் தம் பிள்ளைகளுள் ஒருவர்க்கு இட்டுத் தம் நன்றியறிதற் பண்பை நாட்டினர். கோவைச் சிறைச்சாலையில் இருந்தபோது உதவிய கோவை சிவக்கவிமணி சுப்பிரமணியம் என்ற பெயர் மற்றொரு மைந்தர்க்கு இடப்பட்டது. தென்னாப்பிரிக்கா வேதியம் பிள்ளை நினைவாகத் தம் பெண்ணுக்கு வேதவல்லி என்று பெயரிட்டு மகிழ்ந்தார். உயர்நீதிமன்ற நடுவர் வாலேசு என்பாரின் உதவியைப் போற்றித் தம் மைந்தருள் ஒருவர்க்கு 'வாலேசுவரன்' என்று பெயரிட்டு உவகை எய்தினர். செய்ந்நன்றி மறவாச் செம்மையினர் செம்மலார் என்பதற்கு இவை சான்று பகர்கின்றன. இவ்வாறு பண்புநலங்களின் உறைவிடமாக

விளங்கிய சிதம்பரனார் அவர்களுடைய வாழ்வும் வாக்கும் அவர்களைத் 'தக்கார்' என்று உலகறியக் காட்டின. 'தம் எச்சத்தாற் காணப்படும்' என்றபடி அறிவு நலமும் அன்புநலமும் வாய்த்த மக்கட்பேறு உடையவராய் விளங்கினார் செம்மலார். 'நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியபடி தூத்துக்குடியில் இப்பெருந்தகவினர் குடும்பம் ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகமாகவே விளங்கி வந்திருக்கின்றது. பல தமிழ்ப்புலவர்கள் செம்மலார்க்கு நண்பர்களாக விளங்கியிருக்கின்றார்கள். எப்போதும் அறிஞர் கூட்டத்திடையே விளங்கி, "இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ, நகலின் இனிதாயிற் காண்பாம், அகல்வானத்து உம்பர் உறைவார் பதி" என்று கூறி மகிழும் செந்தமிழ்ச் செல்வராகவே இறுதி வரை நம் செம்மலார் வாழ்ந்தனர். 1936ஆம் ஆண்டு, நவம்பர் 18ஆம் நாள் தம் புகழுடம்பை நிலைநாட்டி, செம்மலார் விண்ணுலகு எய்தினார்.

### தென்னாட்டுத் திலகர்க்கு அஞ்சலி

'தென்னாட்டுத் திலகர்' என்று விடுதலைப் போராட்டக் காலத்தில் எடுத்தேத்தப்பட்டவர் பிள்ளையவர்கள். இவர்களைத் தந்ததனால் நெல்லை மாவட்டம் எல்லையில் சீரும் சிறப்பும் எய்தியது. தூத்துக்குடி அறிஞர் பலரும் 'ஏத்தும்குடி'யாகி ஏற்றம் பெற்றது. கப்பலோட்டிய தமிழர் என்ற பெருஞ் சிறப்புப் பெற்ற பிள்ளையவர்களுடைய வாழ்வு, தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கத்தக்க உருக்கமும், உயர்வும் உடையதாகும். சுப்பிரமணிய சிவா, சுப்பிரமணிய பாரதியார் துணையுடன் நாட்டுத் தொண்டை நலமுற ஆற்றி, அழியாத அமரவாழ்வு பெற்றுவிட்டார் நம் செம்மலார்; நாமக்கல் கவிஞரின் இனிய கவிதை இச்செம்மலார் தோற்றத்தை எடுத்துக்காட்டும் எழிலோடு கூடியது; அதனைப் பாடி மகிழ்வது கப்பலோட்டிய தமிழர்க்கு இப்பெரு விழா— நூற்றாண்டு விழா எடுக்கும் வேளையில் அவர்க்குச் செலுத்தும் கவிதை அஞ்சலியாக அமையும்:

"கள்ளமற்றக் கலகலத்த பேச்சுக் கேட்கும்;
 கறுப்பெனினும் சிரித்தமுகம் இனிமைகாட்டும்;
குள்ளமெனும் ஒருவடிவம் இருகை கூப்பிக்
 குன்றெடுத்துக் கடைந்ததெனக் குலுங்கசிற்கும்;
வெள்ளையன்றி வேறுநிறம் அறியா ஆடை
 வேதாந்த சித்தாந்த மணமே வீசும்:
கொள்ளை கொள்ளை நிறைபிருந்த குறிகள்தோன்றும்;
 குலவுபிள்ளைச் சிதம்பரத்தை நினைவு கூர்வாம்."

———

# சிதம்பரனாரின் செந்தமிழ்ப் பணிகள்

திரு. எழில்முதல்வன்

*தமிழ்த் துணைப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை-5.*

I

'கப்பலோட்டிய தமிழர்' என்று சிறப்பித்துப் போற்றப்படும் வ. உ. சிதம்பரனார் அரசியல் துறையிலும் இலக்கியத் துறையிலும் ஆற்றிய பணிகள் பலப்பல. அரசியலில் அவர் செய்த தொண்டுகள் வெளியே தெரிந்த அளவுக்கு, இலக்கியத் தொண்டுகள் பலராலும் அறியப்படவில்லை. அவருடைய இலக்கிய வாழ்க்கையை மூடி மறைக்கும் அளவுக்கு அரசியல் வாழ்க்கை பகட்டும் ஒளியும் மிக்கதாக இருந்ததே அதற்குக் காரணமாகும். சிதம்பரனாரின் செந்தமிழ்ப் பணிகளை நினைவு கூர்வதே இக்கட்டுரையின் நோக்கம் என்க.

II

சிதம்பரனாரின் செந்தமிழ் நெஞ்சம் பண்டைய அறநூல் களில் தோய்ந்து படித்த நெஞ்சமாகும். எனவேதான் அவர் வெறும் அரசியல்வாதியாக மட்டுமில்லாமல் சிறந்த அறவோராகவும் வாழ்ந்தார். அறத்தின் ஆற்றலையும் ஆணையையும் உணர்ந்த அவர் காலத்துக்கேற்ற ஒரு புதிய அறநூலைச் செய்ய வேண்டும் என்று விழைந்தார். அதன் விளைவாக எழுந்ததே "மெய்யறிவு."

ஆங்கிலேயப் பேரரசின் அடக்குமுறைக்கு ஆளாகி, கண்ணனூர்ச் சிறையில் அவர் கைதியாக வாழ்ந்தபோது "மெய்யறிவு" எழுதப்பட்டது. அறத்தைச் செய்ய அவாவி நிற்கின்ற ஓர் ஆண்மகனை நோக்கி அவனுடைய ஆசிரியர் கூறுவதுபோல் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலின் கண் நூறு வெண்பாக்கள் அடங்கியுள்ளன. தன்னை அறிதல், விதியியல் அறிதல், உடம்பை வளர்த்தல், மனத்தை ஆளுதல் முதலிய பல்வேறு தலைப்புக்களில் தம் கருத்துகளை வகுத்தும் பகுத்தும் திட்ப நுட்பத்தோடு ஆசிரியர் கூறியுள்ளார்.

காலையில் எழுந்ததும் ஒருவன் செய்யவேண்டிய கடமைகள் என்னென்ன என்பதை ஒரு வெண்பா உணர்த்துகிறது.

*வைகறையிற் கண்விழித்து மாசொழித்து மெய்யறங்கள்*
*கைவருதற் கேவருள் கண்ணிமைப்பின்—மையல்*
*அறுத்தற்கா நானன்காய்த்து பாலேடூர மெய்யிற்*
*செறுத்தற்கா கற்சிலம்பம் செய்.*

ஞாயிறு எழுவதற்கு ஒரு நாழிகை நேரத்திற்கு முன்னரே துயில் நீத்து எழுந்திருந்து, காலைக் கடன்களை முடித்து, அறங்களைச் செய்யவேண்டும் பேற்றினை அளிக்கவேண்டு மென்று எல்லாம்வல்ல இறைவனை இரந்து வேண்டி, கற்பன கற்று, சிலம்பப் பயிற்சியும் செய்ய வேண்டும் என்பதே இப் பாட்டின் பொருளாகும்.

இந்நூலில் வருகிற மற்ருெரு பாட்டு தாம்பூலம் தரிக்கும் முறையை எடுத்துரைக்கிறது. வெற்றிலை, பாக்கு முதலிய வற்றைச் சுவைத்து, அவற்றில் ஊறிவருகிற நீரில் முதல் இரண்டுமுறை உமிழ்ந்துவிட்டு, மூன்ரும் முறை உட்கொண்டு, மற்றையவற்றை உமிழ்ந்துவிடவேண்டும் என்று அப்பாடல் கூறுகிறது.

''மெய்யறிவு'' நூலின் முதற்பதிப்பிற்கு அட்டாவதானம் கலியாண சுந்தர யதீந்திரர் சிறப்புப் பாயிரம் அளித்துள்ளார். காலத்துக்கேற்ற பல புதிய சிந்தனைகளையும், பண்டைய அற நூல்களோடு முரண்பட்ட சில கருத்துக்களையும் இந்நூலில் காணலாம்.

சிதம்பரனுர் சிறந்த மெய்யறிவாளராக இருந்த காரணத் தால் மேலைநாட்டு மெய்யறிவாளர் ஜேம்ஸ் ஆலனின் கருத்துக் களில் பேரீடுபாடு கொண்டார். ஆலனின் சிந்தனைகள் சிதம்பரனுரை ஆட்கொண்டன. அச் சிந்தனையொளியில் மூழ்கிக் குளித்த அவர் 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்னும் பெருநோக்கோடு, அக்கருத்துக்களைத் தமிழ்மக்களுக்கு வழங்க முன்வந்தார். ''சாந்திக்கு மார்க்கம்'', ''மனம்போல வாழ்வு'', ''வலிமைக்கு மார்க்கம்'' முதலிய நூல்கள் ஆலனின் சிந்தனைகளை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்க்கப் படவேண்டிய இன்றியமையாமையைச் சிதம்பரனுர் உணர்ந் திருந்தார் என்பதற்கு இந்நூல்கள் சான்ருக அமைகின்றன.

## III

கால இருளில் மறையுண்டு கிடந்த பழந்தமிழ் நூல்களைத் தேடித் துருவி, அவற்றை வெளிப்படுத்தும் திருப்பணியிலும்

சிதம்பரனுர் நாட்டம் செலுத்தினுர். தம் பரபரப்பான அரசியல் வாழ்க்கையில் ஓய்வு கிடைத்தபோதெல்லாம் அந்நேரத்தைத் தமிழ்ப் பணிக்கே செலவிட்டார். சிதம்பரனுர் பதிப்பித்த ''தொல்காப்பியப் பொருளதிகாரம்'' அறிஞர்களுக்கும், ஆராய்ச்சி யாளர்களுக்கும் கிடைத்த பெறற்கரிய கருவூலமாகும்.

## IV

பதிப்பாளராக மட்டுமில்லாமல் சிறந்த உரையாசிரிய ராகவும் சிதம்பரனுர் திகழ்ந்துள்ளார். ''இன்னிலை''க்கு அவர் எழுதியிருக்கும் உரை கற்ருேர் போற்றும் பெற்றியதாகும்.

பதினெண் கீழ்க்கணக்கு வரிசையில் ''இன்னிலை''யும் ஒன்று என்பதும், அதை எழுதிய ஆசிரியர் பொய்கையார் என்பதும் தமிழ் கூறும் நல்லுலகிற்கு முதன் முதலில் சிதம்பரனுர் மூலமே தெரியவந்தது. ''இன்னிலை'' நூலின் முதற்பதிப்பு தில்லையாடி, த. வேதியப் பிள்ளை என்பாரால் பதிப்பிக்கப்பட்டது.

''இன்னிலை'' விருத்தியுரையில் ஒவ்வொரு பாட்டுக்கும் அநுவயம், பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரை என்ற பாகுபாட்டின் அடிப்படையில் விளக்கம் தந்துள்ளார். விசேடவுரை என்ற பகுதி ஆசிரியரின் அஃகியகன்ற பேரறிவையும், நுண்மாண் நுழைபுலத்தையும் பொள்ளெனப் புலப்படுத்த வல்லது. ஆசிரியர் காட்டும் ஒப்புமை மேற் கோள்கள் அவரது அளக்கலாகாப் புலமையினைச் சான்று கூறி நிறுவுகின்றன. சசிவர்ண போதம், பிரபோத சந்திரோதயம், பிரமோத்தர காண்டம், சாங்கியம் முதலியவற்றிலிருந்தும் அவர் மேற்கோள் காட்டியுள்ளார்.

திருக்குறள் அறப்பாலுக்குச் சிதம்பரனுர் செய்திருக்கும் உரைவிளக்கம் மிகச் சிறந்த ஒன்ருகும். அறப்பாலில் நாற்பத்து நான்கு புதிய மூல பாடங்களை அவர் கண்டு பிடித் துள்ளார். ஏறத்தாழ எழுபத்தாறு குறட்பாக்களுக்குப் பரிமேலழகர் உரையினின்று முற்றிலும் வேறுபட்டுப் பொருள் உரைக்கிருர். 'பெண்ணிற் பெறுந்தக்க யாவுள,' 'இயல்புடைய மூவர்', 'விருந்து புறத்ததாத் தானுண்டல்' முதலிய தொடர் களுக்கு அவர் உரைகூறும் திறன் ஆழ்ந்து உணரத்தக்கது.

மற்றவர்களின் கருத்துக்களைக் கண்டிக்க வேண்டிய வழி உறுதியோடு கண்டிப்பதையும் இவ்வுரை நூலில் காணலாம்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்ற குறளின் அகலவுரையில் சிதம்பரனார் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

"'இன்' என்றமையால், தன் மகனைச் சான்றோனாகத் தான் கண்டபொழுது உளதாம் உவப்புத் தான் அவனை ஈன்ற பொழுது அடைந்த, உவப்பினும் பெரிதென்பதும், பெரிது என்றமையால் அதனினும் தன் மகனைச் சான்றோன் எனப் பிறர் கூறக் கேட்டபொழுது உளதாம் உவப்பு பெரிதென்பதும் பெறப்பட்டன. உவகை—உள்ளக் களிப்பு. 'பெண்ணியல் பால் தானாக அறியாமையின் கேட்ட தாயெனக் கூறினர்' என்று உரைப்பாரும் உளர். பெண்ணின் இயல்பு தானாக அறியாமை என்பது அறிவிலார் கூற்றென அவ்வுரையை மறுக்க."

திருக்குறளில் உள்ள முதல் மூன்று அதிகாரங்கள் திருவள்ளுவரால் எழுதப்பட்டிருக்க முடியாது என்பது சிதம்பரனார் கருத்து. அவர் இதற்கான காரணங்களையும் நுட்பமாக விரித்துக் காட்டியுள்ளார்.

V

சிதம்பரனாரின் மனம் அழகிலே தோய்ந்து, அழகையே சுவைக்கும் மனம். முருகியல் உணர்வு கொண்ட அவர், உள்ளம் குளிர்ந்த போதெல்லாம் உவந்து உவந்து பல பாட்டுக்களைப் பாடியிருக்கிறார். "சிதம்பரனார் பாடல் திரட்டு" அவர் கவிஞருமாவர் என்பதை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

சிதம்பரனாரின் செய்யுட்டிறத்துக்குச் சான்றாகக் கீழ்வரும் பகுதியைக் காட்டலாம்.

மனமெனும் வினைப்பெ ருமையாக் கியது;
வினைப்பால் நாம்கம் நிலைமையை உற்றனம்
ஒருவன் வினைப்புக் கருமறம் பற்றிடின்,
எருதுபின் உருளைபோல் வரும்கனி துன்பமே;
ஒருவன் வினைப்புத் திருஅறம் பற்றிடின்
தன்னிழல் போல மன்னும் இன்பமே.

தம் வாழ்க்கை வரலாற்றையும் சிதம்பரனார் செய்யுளாகவே பாடியுள்ளார். தமிழில் எழுந்த முதல் வாழ்க்கை வரலாற்று நூல்—செய்யுளால் அமைந்த முழுமைபெற்ற தன் வரலாற்று நூல்—

இதுவே எனலாம். தம் மனைவியார் வள்ளியம்மையைப் பற்றி ஆசிரியர் அறிமுகப்படுத்தும் பகுதி இது :

மகராசி என்னும் வள்ளி யம்மையை
நன்மனை அறங்களை நன்கு வளர்த்திட
முன்மனை யாக மொய்ம்பொடு கொண்டேன்.
... ... ... ...
... ... ... ...
எனதொரு வடிவும் எனக்குறு தொண்டுமே
கனவினும் நனவினும் கண்டவள் நின்றனள்
என்னைப் பெற்றோர், என்னொடு பிறந்தோர்
என்னை சுட்டோர் யாவரும் தன்னுடை
உயிரெனக் கருதி ஊழியம் புரிந்த
செயிரிலா மனத்தள்; தெய்வமே அனையள்.

ஆற்றொழுக்காகச் செல்லும் சிதம்பரனாரின் செய்யுள் புனையும் திறத்துக்கு இதனினும் பிறிதோர் சான்றும் வேண்டுமோ?

## VI

சிதம்பரனார் தாளிகையாசிரியராகவும் திகழ்ந்திருக்கிறார். "விவேக பாநு" என்ற தமிழ் மாத இதழையும் சில காலம் தொடர்ந்து நடத்தினார்.

" விவேக பாநு விளங்குற எங்கும்
'விவேக பாநு'வை வெளிவரச் செய்தேன் "

என்று அவரே சுயசரிதையில் பாடியுள்ளார். இத்தாளிகையின் மூலம் சிதம்பரனார் எழுதிய கட்டுரைகள் பல. இக்கட்டுரைகளைப் படிக்கும்போது சிதம்பரனார் தமிழ் உரைநடையை எவ்வளவு செறிவோடும் வேகத்தோடும் கையாண்டிருக்கிறார் என்பது புலனாகிறது.

## VII

இங்ஙனம் சிறந்த அறவோராகவும், பதிப்பாசிரியராகவும், மொழிபெயர்ப்பாளராகவும், உரைகாரராகவும், கவிஞராகவும், உரைநடை வல்லாளராகவும் வாழ்ந்த சிதம்பரனார் தமிழ் மக்களால் நன்றியோடு போற்றப்படவேண்டியவர். வாழ்க சிதம்பரனார்! வளர்க அவர்தம் திருப்புகழ்!

———

# வ. உ. சி. யின் இலக்கணப் பதிப்புப் பணி

**புலவர் க. ப. அறவாணன், எம்.ஏ.,பி.ஓ.எல்.,**

*தமிழ்த் தமிழ்ப் பேராசிரியர்,*
*பச்சையப்பன் கல்லூரி, சென்னை.*

0.0. ஒரு துறையில் மட்டும் சாதித்தல் எளிது. எல்லாத் துறைகளிலும் சாதித்தல் அரிது. அரியன, பெரியன சாதித்தல் அரிதினும் அரிது. வ. உ. சிதம்பரம் பிள்ளை பலவேறு துறை களிலும் உழைத்து அரியன சாதித்துள்ளார். 1. அரசியல் தொண்டு, 2. மொழி பெயர்ப்புத் தொண்டு, 3. படைப் பிலக்கியத் தொண்டு, 4. கட்டுரைத் தொண்டு, 5. உரை இயற்றும் தொண்டு, 6. பதிப்புத் தொண்டு, என இவருடைய பணிகள், தனித்துப் பிரித்து எடுத்து ஆயும் அளவுக்கு அகன்றவை; ஆழ்ந்தவை. இவற்றுள் பதிப்புத் தொண்டு இவரது தமிழிலக்கிய நாட்டத்தையும், செயற்கரும் செயல் நிகழ்த்தும் வல்லாண்மையையும் உணர்த்த வல்லது. பதிப்புத் தொண்டே, வ. உ. சி. வாழ்க்கையின் இலக்கணத் தொண் டாகச் சமைந்து விட்டது. அதனை விரிவாக ஆய்வதே இவ் வெழுத்துரையின் நோக்கம்.[1]

1.0. படைப்பிலக்கியம், பாவலனின், உள்ளத்தினின்று பொங்குபுனலாக வெளிப்பட்டு, ஏடுகளில் இலக்கிய வாழ்வு எய்தி விடுகிறது. நூறு ஆண்டுகளுக்கு முன் பதிப்பிலக்கியம் படைப்பிலக்கியப் பணியை விடக் கடினமானதாக, சுமையான தாக இருந்தது. கிடைத்தற்கரிய ஓலைச் சுவடிகளை, தேடி அலைந்து, கெஞ்சி, கேட்டுப் பெறுவதும், 'தொட்டாற் சிணுங்கி' களாக இருக்கும், பனையோலைகளைப் புரட்டிப் பார்ப்பதும், கல்வெட்டு எழுத்துக்களாக எழுதப் பெறுபவற்றைப் படித்துப் புரிந்துகொள்வதும் மிகத் துன்பமானவை. இவற்றுள் போலி ஏடுகளை அடையாளங் கண்டுகொள்வதும், அவற்றுள் புகுந் திருக்கும் இடைச் செருகல்களைக் கூர்ந்து கண்டுபிடிப்பதும்,

---

1. கட்டுரைக்கு வேண்டிய சில பழம் பதிப்புக்கள், செய்திகள் இவற்றை அறிய உதவியாய் இருந்த, மறைமலையடிகள் நூலகர் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களுக்கும் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி நூலகர் திரு. இரா. பெருமாள் அவர்கட்கும் நன்றியுடையேன்.

வறிதாகக் காட்டப்படும் உரை மேற்கோள்களைத் தமிழ் இலக்கியக் கடலிலிருந்து தேடிப் பிடிப்பதும் எளிய செயல்கள் அல்ல.[1] இவற்றைச் செய்ய அளவிறந்த புலமையும் வேண்டும்; பொறுமையும் வேண்டும், இதற்குரிய புலமையையும், பொறுமையையும் வழக்கறிஞராக, அரசியல் அறிஞராக இருந்த வ. உ. சி. பெற்றிருந்தமை வியப்புக்குரியது. தமிழிலக்கண, இலக்கியங்களைப் பதிப்பிக்கும் வேட்கைக்குக் காரணங்கள் வேறு சிலவும் வ. உ. சி.க்கு இருந்திருத்தல் வேண்டும். அரசியலிலும், பொதுப்பணியிலும் தமிழரிடம் இருந்த செய்ந்நன்றி கொல்லும் செயற்பாட்டுத் துயரத்தினின்று வ. உ. சி. விலகி இருக்க விழைந்தார். தமது நாற்பதாண்டுக் காலப் பணியைப் பொது மக்கள் போதிய அளவு உணரவில்லையே என்ற வருத்தம் அவருக்கு இருந்திருக்கவேண்டும். அவ்வருத்தத்தைப் போக்கி ஆற்றிக்கொள்ளும் துறையாக, இலக்கியத் துறை அவருக்கு வாய்த்தது. அதுமட்டுமன்றி, நூல் படைப்பிலும், நூல் பதிப்பிலும் அவர் தம் துயரத்தை மறந்தார். அன்றியும், ஆங்கிலேயர்க்கு, எத்துறையிலும் இந்தியர் ஈடானவர், இலக்கியத் துறையிலும் ஈடானவர், மேலானவர் என்பதை உணர்த்தவும் அவர் விரும்பி இருக்க வேண்டும். தமிழுக்கு இருந்த இலக்கியப் பழைமையையும், வளமையையும், பதிப்புத்துறையின் மூலம் எடுத்துக்காட்டுதன் மூலம், "தாம் அடிமைகள் அல்லர்; ஆங்கிலேயரினும் மேம்பட்டவர்" என்ற உணர்வைத் தமிழர்க்கு ஊட்ட வ. உ. சி. எண்ணி இருத்தல் கூடும். இந்தத் தமிழ்த் தேசிய உணர்வே, வ. உ. சி.யை 1908 தொடங்கி இறக்கும் வரை, தமிழிலக்கியத் துறையில் உந்தித் தள்ளியது.

1.2. வ. உ. சி. காலத்தில் தமிழ்நூல்கள் பதிப்பிக்கப் பட்டு வரத் தொடங்கி விட்டன. தமிழர்களால் மறக்கப்பட்டு விட்ட அறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளை, பதிப்புத் துறையில் மிக ஈடுபட்டிருந்தார். அவர் தமிழ் இலக்கியப் பதிப்புத் துறையின் தந்தையாக உயர்ந்து விட்டிருந்த சமயத்தில், சில குழந்தைகளும் அத்துறையில் ஈடுபடத் தொடங்கினர். தமிழரின் பழைமையும், வளமையும் ஒருங்கு செறிந்திருந்த நூல் தொல்காப்பியம். இந்நூலுக்கு அவ்வளவாகப் பதிப்புக்கள் வெளிவரவில்லை. ஆனால் நன்னூலுக்கு மட்டும், நிரம்பப் பதிப்புக்கள், ஆங்கில மொழிபெயர்ப்புக்கள், விளக்கவுரைகள், சுருக்க உரைகள் வந்துகொண்டிருந்தன. காரணம் நன்னூல், சென்னைப் பல்கலைக்கழக எப்.ஏ.(F.A.),

---

*1. கப்பையா பிள்ளை, வ. பதிப்புத்துறையில் பட்டறிவு, செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 45 பரல். 11.*

பி.ஏ.(B.A.) வகுப்புக்களுக்குப் பாடமாக்கப்பட்டிருந்தது. அதனால் பலவேறு பதிப்புக்கள் வந்தன; விற்றுப் போயின. ஆனால் தொல்காப்பியத்திற்கு விற்பனை வாய்ப்புக் குறைவாக இருந்ததால், பதிப்புக்கள் வரவே நின்று போயிருந்தது. அப்படி யாரேனும் வெளியிட்டால் கையிழப்புக்கு ஆளாக வேண்டியிருந்தது.[1] இச்சூழலில், தொல்காப்பிய இலக்கணத்தைப் பதிப்பிக்க வ. உ. சி. முடிவெடுத்தார். காரணம்: இலக்கணமாக இருந்தாலும், இலக்கியமாக இருந்தாலும், அது பொதுமக்கள் சொத்தாக இருக்க ஆகிவிடவேண்டும். பொது மக்களால் புரிந்துகொள்ள முடியாத கடின நடை உரைகளை விட, அவர்களுக்குப் புரியத் தகும் எளிய நடை உரைகளை விரும்பினார். இந்த விருப்பமே பேராசிரியம், நச்சினார்க்கினியம், சேனவரையம் ஆகியவற்றை விட்டு விட்டு, இளம்பூரணத்தை வெளியிடக் காரணமாயிற்று. இக் கருத்தை அவரே, தம் தொல்காப்பியப் பதிப்பில் (1935 இல் வெளிவந்தது) குறிப்பிடுகிறார்.[2] "தொல்காப்பியத்தைப் படிக்கும் பாக்கியம் எனக்கு 1910 ஆம் வருடம் கிடைத்தது. அதன் பொருளதிகாரத்தை யான் படித்தபோது, அதில் வேறு எம்மொழி இலக்கணத்திலும் காணப்படாத நிலப்பாகுபாடு, நிலங்களின் மக்கள், ஏனைய உயிர்கள், மரங்கள், செடிகள், மக்கள், மக்களின் ஒழுக்கங்கள், பழக்க வழக்கங்கள் முதலியன கூறப்பட்டிருக்கக் கண்டேன். இவ்வொப்புயர்வற்ற நூலைத் தமிழ்மக்கள் படியாததற்கு ஒரு காரணம் இந்நூலிற்கு ஆன்றோர் இயற்றியுள்ள உரைகளின் கடின நடையென்று உணர்ந்தேன். இந்நூலைத் தமிழ்மக்கள் யாவரும் கற்கும்படி எளிய நடையில் ஓர் உரை எழுத வேண்டுமென்று நினைத்தேன். உடனே எழுத்ததிகாரத்தின் முதற்சில இயல்களுக்கு உரையும் எழுதினேன்................... (பின்னர்) இளம்பூரணத்தை யான் படித்தபோது அதன் உயர்வும், சிறப்பும் எளியநடையும் தொல்காப்பியத்திற்கு யான் உரை எழுதுவது மிகையென்று நினைக்கச் செய்தன". இந்த நினைப்பும், படிப்பினையுமே, தொல்காப்பிய வ. உ. சி. பதிப்புக்கு மூலகாரணங்கள்.

2.1. சிலநூற்களைப் பதிப்பித்த அளவில், முதற் பதிப்பாளர் என்ற பெருமை வ. உ. சி.க்கு உண்டு. திருக்குறள்

---

1. தாமோதரம் பிள்ளை, சி. வை. நச்சினார்க்கினியம், பொருள். பதிப்பு 1885 பதிப்புரை பக். 12.

2. சிதம்பரம் பிள்ளை, வ. உ. தொல். இளம்பூ. பொருள். மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் பதிப்புரை 1935 பக். 1.

உரையாசிரியர் மணக்குடவரையும், அவரது அறத்துப்பால் உரையையும் முதன் முதலாகப் பதிப்பித்து 1917 இல் இவர் வெளியிட்டார்.[1] இதுபோன்ற முதன்மைப் பெருமை, தொல்காப்பிய இளம்பூரணப் பதிப்பளவில், வ. உ. சி.க்கு உண்டு. 1858இல் வேப்பேரி, கிறித்தவ அச்சகத்தினின்று, தொல்காப்பிய நன்னூல் மூலமும், குறிப்புரையுமாக திரு எசு. சாமுவேல் பிள்ளை அவர்களால் பதிப்பித்து வெளியிடப்பட்டது. முழுதுமாக வெளிவந்த தொல்காப்பியத்தின் முதல் மூலப் பதிப்பு இதுதான். என்றாலும் 1847 இல், மழைவை மகாலிங்கையரால், தொல், எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியர் உரை மட்டும் பதிப்பிக்கப்பெற்றது. 1868 இல் திரிசிரபுரம் சோடசாவதானம் சுப்பராய செட்டியாரால் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணம் பதிப்பிக்கப்பட்டது. 1868 இல் புலவர் கோமளபுரம் இராசகோபால் பிள்ளையால், சேனா வரையம் முதன் முதலில் வெளியிடப்பட்டது. 1885 இல், தொல். பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் உரையோடு யாழ்ப் பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளையால் பதிப்பிக்கப்பட்டது. 1917 இல், தொல்காப்பியம் செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரை மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடப்பட்டது. ஆக தொல்காப்பிய உரைகளில் மிக எளிதான, தெளிவான இளம்பூரணம். வ. உ. சி. காலத்தில் முழுமையாக வரவில்லை.[2] இவ்வுரையின் எழுத்து, சொல் பதிப்புக்கள் வந்தால், நன்னூலின் மதிப்பு மங்கும், தொல்காப்பிய மதிப்போங்கும் என்று அவர் நம்பினார். "இந்நூலின் எழுத்ததிகாரச் சொல்லதிகாரச் சூத்திரங்களைக் கற்போர் நன்னூல் ஆதியவற்றைப் புன்னூல் ஆதியனவாகக் காண்பர் என்பது திண்ணம்"—இது வ. உ. சி. யினது தொல். எழுத்து. இளம்பூரணப் பதிப்புரை.

2.2 1868 இலேயே பூவிருந்தவல்லி சு. கன்னியப்ப முதலியார் தொல். எழுத்து. இளம்பூரணத்தைப் பதிப்பித்திருந்தார்கள். இப்பதிப்பை 1912 வரை வ. உ. சி. அறிந்திருக்கவில்லை. 1910 இல் சிறையில் இருந்தபடியே தொல்காப்பியம் பயிலத் தொடங்கிய வ. உ. சி. தொல்காப்பியத்திற்குள்ள உரை (இது பெரும்பாலும் 1847 இல் வெளிவந்த

---

*1. திருநாவுக்கரசு, க. த. திருக்குறள் நூலடைவு கையச்சேடு சென்னைப் பல்கலைக் கழகம் 1972 பக். 5 எண் : 41.*

*2. நமச்சிவாய முதலியார், கா. தொல். அகத்திணையியல், புறத்திணையியல் பதிப்பு 1920. சென்னைத் தமிழ்க் கழகத்தினர் வெளியீடு பதிப்புரை பக். 1.*

மழைவை. மகாலிங்கையர் எழுத்து நச்சினார்க்கினியம் பதிப்பாகவும், 1885 இல் வெளிவந்த சி. வை. தாமோதரம் பிள்ளை பொருள். நச்சினார்க்கினியமாகவும் இருத்தல் கூடும்), மிகக் கடினமாக இருப்பதை உணர்கிறார். இப்படிக் கடினமாக இருந்தால், பொதுமக்கள் எவ்வாறு புரிந்து கொள்வர் என்று கருதியவர், தாமே ஓர் உரை, எளியநடையில் எழுதத் தொடங்கினார். சில இயல்களுக்கு எழுதியும் முடித்தார். 1912 இல் சிறைவீடு பெற்றவர் சென்னைக்குச் சென்று தங்கினார். அங்குப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசிரியராக இருந்த திருமணம் செல்வக்கேசவராய முதலியார் எம். ஏ. அவர்களது நட்புக் கிடைத்தது. வ. உ. சி. யின் தமிழ் உணர்ச்சிக்குத் தூண்டுகோலாகவும், ஊன்றுகோலாகவும் இருந்த அவரிடம், தாம் எழுதிய, தொல். எழுத்ததிகார உரையைக் காட்டினார். அப்போது, திரு. த. கனகசுந்தரம் பிள்ளை என்பார், இளம்பூரணம் அச்சிட்ட எழுத்ததிகாரப் படி ஒன்றை இவரிடம் கொடுத்தார். இவ் வச்சுப் பதிப்பே வ. உ. சி. சுட்டிக்காட்டும் கன்னியப்ப முதலியாரின் பதிப்பாகும். அப்பதிப்பைப் படித்து முடித்தவர், அவ்வுரையின் தெளிவையும், எளிமையையும் உணர்ந்து, தாம் உரை எழுதுவதை நிறுத்திவிட்டார். 1868 இல், திரிசிரபுரம் சோடசாவதானம் சுப்பராய செட்டியாரால் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்த தொல். எழுத்து. இளம்பூரணத்தை வ. உ. சி. பார்க்கவில்லைபோலும். இதே ஆண்டில் வெளிவந்த கன்னியப்ப முதலியாரின் பதிப்பைத் தாம் பார்த்ததாகவும், தம் பதிப்புக்குப் பயன்படுத்திக் கொண்டதாகவும், 1—6—28 இலும், 15—1—1936 இலும் இருவேறிடங்களில், (தொல். எழுத்து. இளம்பூ. பதிப்பு, தொல். மெய்ப்பாட்டியல்... பதிப்பு) குறிப்பிடும் வ. உ. சி., திரு. செட்டியார்ப் பதிப்பைச் சுட்டாதது கவனிக்கத்தக்கது. முதலிலேயே பதிப்பித்த எழுத்து. இளம்பூரணத்தையே வ. உ. சி. பதித்தார் எனினும், வ. உ. சி பதிப்பில் சில புதுமைகள் இடம் பெற்றன. அவ்வாறு முதன் முதலாக இடம் பெற்ற புதுமைகள்.

3.1. பழைய பதிப்பில், பொழிப்புரையாகக் கொடுக்கப் பட்டிருந்த, இளம்பூரணத்தே, பதவுரையாகப் பிரித்துப் பதிப்பித்துள்ளார்.

3.2. கன்னியப்ப முதலியாரின் பதிப்போடு, வேறு பல ஏட்டுப் பிரதிகள் ஒப்பிடப்பட்டுத் திருத்தங்கள் செய்யப் பட்டுள்ளன.

3.3. பிரித்து, நிறுத்திப் படித்தற் கேற்ற நிறுத்தற் குறியீடுகள் முதன்முதலாகப் பேரளவில் ஆளப்பட்டுள்ளன.

3.4. இடையில் விளக்கம் பெரு இடங்கள், விளக்கப் பெற்று, அவை வ. உ. சி. யின் விளக்கம் எனப் புலப்படுமாறு பகரக் குறிகளிடையே பொறிக்கப்பட்டுள்ளன. பார்க்க: 62, 191, 390, 431, 481 ஆம் நூற்பா உரைகள்.

3.5. சில இடங்களில், வ. உ. சி. யின் நூற்பா உரை களும் கொடுக்கப்பட்டுள்ளன. பார்க்க: 14, 407 ஆம் நூற்பா உரைகள்.

4.1. இப்பதிப்பு 1920 ஆம் ஆண்டு அச்சிடத் தொடங்கப் பட்டது. இப்பதிப்புக்கு, 1—9—1928 இல், கோவில்பட்டியில் இருந்து கொண்டு, வ. உ. சி. பதிப்புரை வழங்கி இருக்கிருர். இந்நூலின் அப்போதைய விலை ரூ 1—8—0 ஆகும்.

5.1 இளம்பூரணத்தில் வ. உ. சிக்கு அளவிறந்த ஈடுபாடு. ஆதலால், இளம்பூரணம் முழுதையும் பதித்து வெளியிட வேண்டும் என்று துடித்தார். குறிப்பாக எழுத் ததிகாரத்தை வெளியிட்டவுடன் சொல்லதிகாரத்தை வெளி யிட்டிருக்கவேண்டும். சொல்லை வெளியிடவேண்டும் என்பதும் இவர்தம் திட்டங்களுள் ஒன்று. "சொல்லதிகாரமும் பொருள திகாரத்தின் பிந்திய இயல்களும் விரைவில் அச்சிட்டு வெளியிடப் பெறும்"— 1928 இல் வ. உ. சி எழுதிய வாசகம் இது. ஆனல் பொருளதிகாரத்தை முதலில் வெளியிட விரும் பினர். காரணம்: தொல். பொருள். இளம்பூரணம் தொடக் கத்தில் இல்லை என்றே கருதப்பட்டு வந்தது. இளம்பூரணர், எழுத்து, சொல்லதிகாரங்களுக்கு மட்டுமே உரை வழங்கியவர் என நம்பப்பட்டது. இந் நம்பிக்கை, 1858 இல் வெளியான திரு. எசு. சாமுவேல் பிள்ளை, தொல்காப்பிய—நன்னூல் பதிப்புரையில் குறிக்கப்பட்டுள்ளது.

"Ilambooranam, the first Commentator of Tholcapyam's work. His Commentary contains however only the எழுத்ததிகாரம் and சொல்லதிகாரம் of Tholcapyam, and of these, the orthography is better and more thoroughly explained and illustrated. This is the best of all the commentaries on the subject of Letters in Tamil. It

passes by the name of இளம்பூரணம் after the name of the author."[1]

5.2 கி. பி. 1885 வரையிலும் கூட, இளம்பூரணர் உரை முழுதும் அகப்படவில்லை. இவ்வாண்டில், தொல். பொருள். நச்சினார்க்கினியத்தைப் பதித்த திரு. சி. வை. தா. இதனைத் தம் அரிய பெரிய பதிப்புரையில் குறிப்பிடுகிறார்.[2] அம்மட்டு மன்றி, 19 ஆம் நூற்றாண்டில், தொல்காப்பியப் பொருள் அதிகாரத்தை உரையோடும் காட்டோடும் பாடம் கேட்டவர்கள் மிக அருமை. முற்றாய் இல்லை என்றே சொல்லலாம். அக் காலத்தில் தொல்காப்பியம் முற்றக் கற்றவர் வரதப்ப முதலியார் ஒருவரே. அவருக்குப் பாடம் சொல்லித் தந்தவர், அவருடைய தந்தை திரு. வேங்கடாசல முதலியார். அவருக்குத் தொல்காப்பியம் பயில ஆவல் வந்தபோது, சொல்லித் தருவார் தமிழகத்தில் யாரும் இல்லையாம். தஞ்சை மாவட்டம் பிறையூரில், திருவாரூர் வடுகநாத தேசிகர் ஒருவரே, தொல் காப்பியம் அறிந்தவர் எனக் கேள்வியுற்றுத் தம் ஊரைவிட்டுத் தாமே பொருட்செலவு செய்து, இரண்டு ஆண்டுகள், தேசிக ரிடம் தங்கிப் பாடம் கேட்டு வந்தாராம் வெங்கடாசல முதலியார். அவர், தம் மகன் வரதப்ப முதலியார்க்குத் தொல்காப்பியம் சொல்லிக் கொடுத்தாராம். தேசிகரும், முதலியாரும் மறைந்தபின், தொல்காப்பியம் முற்ற அறிந்த ஒரே ஒருவர் வரதப்ப முதலியார்தாமாம். இதனால் இவர் தொல்காப்பியம் வரதப்ப முதலியார் என்றே அழைக்கப்பட்டாராம்.

5.3. இச்சூழல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிவரை நீடித்தது. பின்னர், சி. வை. தா. அவர்களது பதிப்பு வெளிவந்தது. அஃது எளிமையாய் இல்லை. அதனால் வ. உ. சி. பொருளதிகாரத்தைப் பதிப்பிக்க எண்ணினார். அவர் காலத்தில், பொருளதிகாரம் இளம்பூரண ஏட்டுப் படி ஒன்றே ஒன்றுதான் இருந்தது. பொருளதிகாரக் கடித ஏட்டுப் படிகள் எல்லாம் மேலே கண்ட, ஓலைப்பிரதியைப் பார்த்து எழுதினவையே. பார்த்து எழுதினவர்கள் தாமாகச் சேர்த்து எழுதினதும் உண்டு. இப்படிப்பட்ட கடிதப் பிரதி ஒன்று, வ. உ. சிக்கு, திரு கனகசுந்தரம் பிள்ளை மூலம் கிடைத்தது.

---

1. Samuel Pillay, S. Tholcapya—Nannool or A Comparative Reference Edition. Madras. Printed for the Editor By D.P.L.C. Connor, at the Press of the Society for Promoting Christian Knowledge, Vepery, 1858. P. 121, 122.

2. *தாமோதரம் பிள்ளை, சி. வை. நச்சினார்க்கினியப் பதிப்புரை 1885 பக். 4.*

இது கிடைத்த ஆண்டு கி. பி. 1912 அல்லது 1913 ஆகலாம். இப்பிரதியைக் கொண்டு ஆராய்ந்து தொல். பொருள். அகத்திணையியல், புறத்திணையியல் என்ற இரண்டையும் 1920 ஆம் ஆண்டிலேயே அச்சேற்றத் தொடங்கினர். தூத்துக்குடியில் உள்ள வேலாயுதம் பிரிண்டிங் பிரசில் அந்நூல் அச்சாயிற்று.[1] என்ன காரணத்தினலோ இப்பதிப்பு 1928 ஆம் ஆண்டுதான் ரூ. 1-0-0 விலையில் விற்பனைக்கு வந்திருக்கிறது. வ. உ. சிதம்பரம் பிள்ளை, பதிப்பாசிரியன், 1928 எனும் முகப்போடு வெளியாகி இருக்கும் இப்பதிப்பில், எவ்வகைப் பதிப்புரையோ, முடிவுரையோ இடம் பெருதது கருதற்குரியது. இதனல் இப்பதிப்பெழுந்த வரலாற்றை முற்ற நாம் அறிய இயலவில்லை.

5.4. இவ்விரண்டு இயல்களோடு ஏனைய ஏழு இயல்களையும் சேர்த்து, 1836 இலும், 1954 இலும் முதற் பிரசுரிப்பாகவும் இரண்டாம் பிரசுரிப்பாக வெளியிட்ட சென்னை, வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் சன்ஸ் என்ற நூல் வெளியீட்டாளர், "பதிப்பாசிரியர் வ. உ. சிதம்பரம் பிள்ளை, எஸ். வையாபுரிப் பிள்ளை" என்று குறித்து வெளியிட்டுள்ளனர்.

6.1. தொல்காப்பியம் எழுத்தையும், அகத்திணையியல், புறத்திணையியல்களையும் பதித்த வ. உ. சி. பொருளதிகாரம். ஏனைய இயல்களையும் வெளியிடப் பேரார்வம் கொண்டார். இப் பேரார்வத்தின் வெளிப்பாடு, தொல். பொருள். அகம், புறம் பதிப்பில், விளம்பரமாக வெளிப்பட்டிருக்கிறது. அப்

1. எழுத்ததிகாரத்தையும், பொருளதிகாரத்தையும் 1920 ஆம் வருடத்தில் அச்சிடத் தொடங்கினேன். பொருளதிகாரம் அகத்திணையியல் புறத்திணையியல்கள் முன்னரே அச்சாகி வெளிவந்துள்ளன. இஃது (தொல். எழுத்து, இளம்பூ) இப்பொழுது வெளிவருகிறது என்று வ. உ. சி. தமது தொல். இளம்பூ. எழுத்துப் பதிப்புரையில், 1.6 1928இல் குறிப்பிட்டு எழுதுகிறர். இதிலிருந்து இரு செய்திகள் உறுதியாகின்றன. (1) வ. உ. சியின் பதிப்பாக முதலில் வெளிவந்தது தொல். எழுத்து இளம்பூரணம் அன்று: தொல். அகத்திணை இயல், புறத்திணை இயல் பதிப்பே முதலில் வந்ததாதல் வேண்டும். (2) 1920இல் சென்னைத் தமிழ்க் கழகத்தாரால் தொ. இளம்பூ. அகம், புறத்திணையியல் பதிப்பொன்று, கா. நமச்சிவாய முதலியாரால் பதிக்கப்பட்டு வெளியாகி உள்ளது. இப்பதிப்பை, வ. உ. சி. அறியவில்லை போலும்(?) இப்பதிப்பு வந்த இதே ஆண்டில், வ. உ. சி.யின் அகம் புறம் பதிப்பு அச்சேறிவிட்டது என்பதும், கா. நமச்சிவாயர் பதிப்பு பொழிப்புரையாகத் தரப்பட்டிருக்க, வ. உ. சி. பதிப்பு பதவுரையாகத் தரப்பட்டுள்ளது என்பதும் கருதத்தக்கன.

பதிப்பின் பின் அட்டையில், பொருளதிகாரம் மற்றைய இயல்கள், அச்சில், சொல்லதிகாரம் அச்சில் என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. அப்பொழுது ச. வையாபுரிப் பிள்ளையிடம் இளம்பூரணம் உரைப்பிரதி ஒன்று இருப்பதாகத் தெரிய வந்தது. வ. உ. சி. 1913 இல் அவருக்கு ஒரு கடிதம் எழுதினர். இக்கடிதத்திற்குப் பின், மடல் மூலமாகவே, இருவருக்கிடையே உறவும் வளர்ந்தது, நெடுங்காலத்திற்குப் பின் 1926இல், திரு. வையாபுரிப் பிள்ளை, வ. உ. சியை நேரில் சந்தித்தார். தொல். பொருள். ஏனைய ஏழு இயல்களையும் வெளியிட்டுவிட வேண்டும் என்று தம் வேணவாவை வ. உ. சி. புலப்படுத்தினர். பதிப்புக்கு உதவி செய்ய உடன் பட்ட திரு. வையாபுரிப் பிள்ளை, தம் கைவயம் இருந்த ஏட்டுப் பிரதியையும், வ. உ. சியிடம் கொடுத்தார்.[1] இதனுடன், திருநெல்வேலி இந்துக்கல்லூரி உயர்நிலைப்பள்ளியில் பணி யாற்றிய திரு. த. மு. சொர்ணம் பிள்ளை கொடுத்த கடிதப் பிரதி தி. நா. சுப்பிரமணிய அய்யரிடமிருந்து கிடைத்த கடிதப் பிரதி ஆகியவற்றை ஒப்பிட்டு ஆராய்ந்து, இளம்பூரணம் களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய மூன்றியல்களையும் 1933 ஆம் ஆண்டு வெளியிட்டார். வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் சன்ஸ்-ஆல் வெளியிடப்பட்ட இந்நூலின் அப்போதைய விலை ரூ. 1-12-0.

6.2. இதனை அடுத்து, இளம்பூரணம் மெய்ப்பாட்டியல், உவம இயல், செய்யுளியல், மரபியல்கள், 15-1-1936 ஆம் நாளிட்ட வ. உ. சி. பதிப்புரையோடு வெளியாயிற்று. இவ்வாறு தொல். பொருள். இளம்பூரணப் பதிப்புக்கள், மூன்று பகுதி களாக வெளிவந்தன. பதிப்பாசிரியன் வ. உ. சி. என்று அவருடைய பெயராலேயே வெளியாயின. எனினும், பின் வந்த ஏழு இயல் பதிப்புப்பணியில் ச. வையாபுரிப் பிள்ளைக்குப் பெரும்பங்கு உண்டு. "இவ்வேழு இயல்களுக்கும் பெய ரளவில் பதிப்பாசிரியன் நான். உண்மையில் பதிப்பாசிரியர் திரு. வையாபுரிப் பிள்ளை அவர்களே. அவர்கள் செய்த நன்றி என்னால் என்றும் உள்ளற் பாலது." பொருள், இளம்பூ, மூன்றும் பகுதியில் வ. உ. சி.யின் பதிப்புரை வாசகம் இது. தம்முடைய பதிப்புக்களைத் தமது செலவில் அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது, வ. உ. சி.யின் நண்பர் திரு. வாவிள்ள வெங்கடேசுவர சாஸ்த்ருலு தம் செலவிலேயே பதிப்பித்து வெளியிட்டிருக்

1. வையாபுரிப் பிள்ளை, எஸ். நான் கண்ட வ. உ. சி. தமிழ்ச் சுடர்மணிகள் பக். 376.

கிருர். இவரைத் தமது பதிப்புரையில், மதிப்போடு போற்று கிருர் வ. உ. சி. திருக்குறளில், வ. உ. சி.க்கு மிகப் பிடித்த அதிகாரங்கள் இரண்டனுள் 'செய்ந்நன்றி அறிதல்' ஒன்று. ('பிறிதொன்று ஊழ்')

7.1. தொல். இளம்பூரணம் முழுமையும் வெளியிட வேண்டும் என்ற வேட்கை, அவருக்கு இருந்தபோதிலும் சொல். இளம்பூரணத்தை அவரால் வெளியிட இயலவில்லை. 1927இல் காவிரிப்பாக்கம், திரு. நமச்சிவாய முதலியார், சொல். இளம்பூரணத்தை வெளியிட்டார். எனினும் இளம்பூரணத்தின் பெரும் பாகத்தைப் பதவுரையோடு வெளியிட்ட பெருமை, வ. உ. சியையே சாரும்.

8.1. ஏடுகளைப் படித்துப் பொருள் புரிந்து, மேற்கோட் செய்யுள்களின் நூற்பெயர் முதலியவற்றைத் துலக்குதல் எளிய பணியன்று. இத்துறையில் வ. உ. சி. முப்பதாண்டுகள் உழைத்திருக்கிருர்.

"This book represents the fruitful results of his arduous labours in this field carried on for more than three decades"[1] என்பது தொல். பதிப்புக்களை வெளியிட்ட திரு. வி. வெங்கடேசுவர சாஸ்த்ருலு அவர்களது முன்னுரை.

அவரது பதிப்புச் சிறப்புக்களாகக் குறிக்கத்தக்கன:

9.1. ஏடுகளிலும், அச்சேடுகளிலும் பொழிப்புரையாகக் கொடுக்கப்பட்டிருந்த உரைப்பகுதி, இவரால் பதவுரையாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

9.2. ஒவ்வோர் இடத்திலும் கற்போர் எளிதில் உணருமாறு பொருள் தொடர்பு நோக்கி, சூத்திரச் சொற்களும், அவற்றின் பொருட் சொற்களும் பிரிக்கப்பட்டு அடையாளங்கள் இட்டுப் பதிப்பிக்கப் பட்டுள்ளன. ஒவ்வோர் இடத்தில் பாடவேறுபாடுகளும், உரைவேறுபாடுகளும் பதிப்பாசிரியரால் குறிக்கப்பட்டுள்ளன.

9.3. வ. உ. சி. யின் பொருள். இளம்பூ. பின் ஏழு இயல்களில் மட்டும் காணப்படும் பாடவேறுபாடுகளின் எண்ணிக்கை வருமாறு:

---

1. Venkateswara Sastrulu, V. Publisher's Foreword, தொல். பொருள் மெய்ப்பாட்டியல்...பதிப்பு.

| | |
|---|---|
| களவியல் | 146 |
| கற்பியல் | 165 |
| பொருளியல் | 43 |
| மெய்ப்பாட்டியல் | 49 |
| செய்யுளியல் | 423 |
| மரபியல் | 58 |
| மொத்தம் | 878 பாட வேறுபாடுகள் |

[குறிக்கப்படாத இயல்களின் பதிப்பில் பாடவேறுபாடு கொடுக்கப்படவில்லை]

9.4 சூத்திர முதற் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டதுடன் இயல் அகராதி கொடுக்கப்பட்டு, இயல்தோறும் உள்ள சூத்திரங்களின் தொகையும் குறிக்கப்பட்டுள்ளது.

9.5 சில அரிய சொற்களுக்கு ஆங்காங்கே விளக்கம் கூறப்பட்டுள்ளது. எ-டு: இருநிலம் தீண்டா அரு- நீருள் கிடக்கும் அட்டை

9.6 சில இடங்களில் இளம்பூரணர் உரை சிதைந்தும், முற்றும் கிடைக்கப் பெருமலும் போயிருக்கின்றன. இப்பகுதிகளில் உடுக்குறி யிட்டு, தம் உரையை வரைந்திருக்கின்றனர். சில சூத்திரங்கட்கு, திரு. த. மு. சொர்ணம் பிள்ளை உரையும் கொடுக்கப்பட்டு அடியில் குறிக்கப்பட்டுள்ளது.

பார்க்க: வ. உ. சி. பதிப்பு: சூத்திர எண்: 30, 39, 99, 108, 116, 145, 273, 469, 478.

9.7 இளம்பூரணர் துறைகளுக்கு எடுத்துக்காட்டு நல்கும் போது பாட்டின் முதற்சீரையும் இறுதிச் சீரையுமே காட்டி விட்டுப் போகின்றனர். அல்லது ஏடு பெயர்த்து எழுதியோர் தம் சோம்பலால், உரைகாரர் குறித்த பாடல்களைக் காட்டாமல் சுருக்கத்தைக் கையாண்டிருக்கலாம். இவ்வாறு அமைந்த இடங்களில் பகரக்குறியிட்டு, பாட்டு முழுதும் தரப் பட்டிருக்கிறது.

9.8 பதிப்பு முழுவதிலும் உண்மை நாட்டம் (Sincerity) பின்பற்றப் பட்டுள்ளது. த. மு. சொர்ணம் பிள்ளை தந்த ஏட்டுப்பிரதியில் உள்ள இடைச் செருகல்கள் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. இவ்வுரையை இளம்பூரணர் தாம்

இயற்றினார் என்ற குறிப்புடைய முதல் ஏடோ, இறுதி ஏடோ தமக்குக் கிடைக்கவில்லை என்று குறிக்கப்பட்டுள்ளது.

10. இன்று வழங்கும் இளம்பூரணப் பதிப்புக்களுக்குத் தாய்ப்பதிப்பாக விளங்கும் வ. உ. சி. யின் பொருளதிகாரப் பதிப்பு, பல நெறிகளில் முன்னோடியாக இலங்குகிறது. அவரது பதிப்பில், வ. உ. சியாலேயே குறிக்கப்படும் ஒரு செய்தி அதிர்ச்சியும் கிளர்ச்சியும் ஊட்டவல்லது.

"தனிச்சிறப்புப் பொருந்திய இத்தமிழ் இலக்கணத் துள்ளும் (தொல்காப்பியம்) ஆரிய மொழிகள் சிலவற்றையும், ஆரியர் பழக்க வழக்கங்கள் சிலவற்றையும், ஆரியர் கொள்கைகள் சிலவற்றையும், இந்நூலாசிரியன் (தொல்காப்பியன்) நுழைத்திருத்தலை ஆங்காங்குக் காணலாம்"[12]

இந்திய விடுதலைப் போரில், தன்னையே ஒப்புக்கொடுத்த ஒரு தேசியத் தமிழனின் குரல் இது!

———

## சிதம்பரனாரிடங்கண்ட ஈகை யுள்ளம்

*1934 ஆம் ஆண்டில் செம்மல் சிதம்பரனார் தூத்துக்குடியில் தெற்குத் தேர்த் தெருவில் குடியிருந்தபொழுது அவர்கட்குப் போதிய வருவாயில்லாமல் நொந்துழந்த காலம். ஒருநாள் காலை நேரத்தில் தம் வீட்டு முன் கூடத்தில் ஏதோ சிந்தனையில் உலாவிக் கொண்டிருந்தார்களாம். அப்போது பார்ப்பனர் ஒருவர் தம் மகள் திருமணத்திற்குப் பொருளுதவி கேட்டு வந்தனராம். அந்த நேரத்தில் தாம் புத்தகங்களைக் கட்டுப் பெற்றஞ்ச (வி. பி. பி) வில் அனுப்பிய வகையில் அஞ்சற்காரர் ரூபா 52 செலுத்தினராம். அத் தொகையினைப் பெற்ற சிதம்பரனார், உதவி கேட்டுவந்த அப் பார்ப்பனரிடம் அதனை அப்படியே மனமுவந்து கொடுத்தனர் என்று தூத்துக்குடி சைவசித்தாந்த சபைத் தலைவர் சித்தாந்தப் பேராசிரியர் ந. சிவ குருநாத பிள்ளையவர்கள் தெரிவித்ததும்,*

*"இன்மையாற் சென்றிரந்தார்க் கில்லை*
*யென்னாது ஈந்துவக்குந் தன்மையார்"*

*என்று திருஞான சம்பந்தர் திரு ஆக்கூர்த் - தேவாரப் பதிகத்தில் வேளாளர் மக்களின் ஈகை யுள்ளத்தைப் போற்றுந் திருவாக்கு என்னுள்ளத்திலே தோன்றி எல்லையில் இன்பமளித்தது.*

*வாழ்க சிதம்பரனார்!*

வ. சு.

---

*12. சிதம்பரம் பிள்ளை, வ. உ. தொல். இளம்பூ. எழுத்துப் பதிப்புரை 1928 பக். 1.*

# வ. உ. சி. யும் தனித் தமிழும்

நாட்டு விடுதலை இயக்கம் தொடங்கிய காலத்தில் தமிழ் விடுதலை இயக்கமும் தொடங்கிவிட்டது எனலாம். தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலவாது எழுத வேண்டும் என்ற இயக்கம் இந்த நூற்றுண்டின் தொடக்கத்திலேயே தொடங்கி விட்டது. இதற்கு முன்னின்றவர் சுப்பிரமணியசிவா. துணை நின்றவர் வ. உ. சி. சிவா தாம் நடத்திவந்த 'ஞானபானு' என்ற இதழில் கூடிய வரையில் பிறமொழிச் சொற்களைக் கலக்காது எழுதினுர். அதனுல் அவருக்கும் 'சுதேசமித்திரன்' இதழுக்கும் கடுமையான கருத்துப் போர் நடைபெற்றது. 'மித்திரன்' தனித்தமிழ் நடையைச் சாடியது. அதற்காதரவான கடிதங்களைத் தன் இதழ்களில் வெளியிட்டது. அதில் ஒரு கடிதம் 'பாரத புத்திரன்' என்ற பெயரில் 'தமிழ்ப்பாஷையும் சுதேசமித்திரனும்' என்ற தலைப்பில் 1915 புரட்டாசி 16 இதழில் தனித்தமிழ் நடையை எதிர்த்து வெளியிடப் பெற்றது. அக் கடிதத்திற்கு வ. உ. சி. எழுதிய மறுப்பு 'சுதேசமித்திரன்' 29-10-1915 இதழில் வெளிவந்தது. அதிலிருந்து சில பகுதிகள் கீழே கொடுக்கப் பெற்றுள்ளன.

*"பாரதபுத்திரன்" எழுதிய நிருபத்தின் இரண்டாவது உறுப்பில் "இக்காலத்துச் செயல்களும் எண்ணங்களும் வஸ்துக்களும் 3000 வருடங்களுக்கு முன் இருந்ததில்லை. ஆகவே அவைகளுக்குத் தமிழில் பதங்கள் கிடையா. ஆகையினுல் நாம் பிற தேசத்தார் கூறும் சொற்களையே உபயோகிக்க வேண்டியிருக்கிறது. நாளாவட்டத்தில் அவை தமிழ்ப் பதங்களாய் விடுகின்றன" என்னும் வாக்கியங்கள் காணப்படுகின்றன. "அவைகளுக்குத் தமிழில் பதங்கள் கிடையா" என்பது உண்மையென்றே வைத்துக் கொள்ளினும் அவைகளுக்குத் தக்க மொழிகளை, அல்லது தொடர் மொழிகளை, நாம் தமிழில் ஆக்கிக் கொள்ளலாம். நாம் ஆக்கும் மொழிகள் அல்லது தொடர்மொழி நம்மவர்களுக்கு அர்த்தமாகாவென்று தோன்றினுல் அவற்றின் பக்கங்களில் அவர்களுக்கு அர்த்த மாகக் கூடிய பிற பாஷை மொழிகளை நாம் உபயோகிக்கலாம். நாம் இவ்வாறு செய்வதால் நம் தமிழ்ப் பாஷைக்கும் நம் தமிழ் மக்களுக்கும் ஒரு பெரிய நன்மை செய்தவர்களாவோம். எவ்வாறெனின், பிற பாஷை மொழிகளுக்குச் சரியான தமிழ் மொழிகளை உற்பத்தி செய்து நம் தமிழ்ப் பாஷையை விருத்தி

*உதவி: குமரிமலர் – ஜூலை 1968.

செய்கின்றோம். நம்மவர்களுக்குப் பிற பாஷை மொழிகளையும் அவற்றிற்கு நேரான தமிழ்ப்பாஷை மொழிகளையும் கற்பிக்கின்றோம். நாம் ஆக்கும் மொழிகளையும் தொடர் மொழிகளையும் நம் தமிழ்மக்கள் நாளடைவில் அறிந்து கொள்வார்கள். "பிற பாஷைச் சொற்கள் நாளாவட்டத்தில் தமிழ்ப் பதங்களாய் விடு" மாறு நாம் இடங் கொடுத்தல் நன்றன்று. ஏனெனின் அவை தமிழ்ப் பதங்களாளபின் அவற்றை நம் தமிழ் அகராதியிலும் இலக்கணத்திலும் சேர்த்துப் பொருள் உரைக்கவும் இலக்கணம் கூறவும் நேரிடும். ஒவ்வொரு பாஷையாளரும் தத்தம் பாஷையில் பிற பாஷைச் சொற்களை வரையறையின்றிச் சேர்த்துக் கொண்டே போவாராயின் நாளடைவில் உலகத்தின்கண் நிலவும் எல்லாப் பாஷைச் சொற்களும் ஒவ்வொரு பாஷையகராதியிலும் இலக்கணத்திலும் நுழைந்து அவற்றைக் கற்பது அசாத்தியமாக முடியும்.

"பாரத புத்திரன்" எழுதிய நிருபத்தின் மூன்றும் உறுப்பிலும் நான்காம் உறுப்பிலும் "ஜனங்களுக்கு பார்லிமெண்ட், கவர்னர், காபினெட் என்று சொன்னால் அவர்கள் எளிதில் உணர்ந்து கொள்வார்களே ஒழிய மகாமந்திரசபை, மாகாணபதி, மந்திராலயம் என்று சொன்னால் அவர்கள் தெரிந்து கொள்ள மாட்டார்கள். கொஞ்ச நாட்கள் கழிந்த பின் சாதாரண வழக்கில் இருந்து வரும் இங்கிலீஷ் பதங்களைச் சொன்னால்தான் ஜனங்கள் அவைகளின் கருத்தைக் கிரகித்துக் கொள்வார்கள். அவைகளின் தமிழ்ச் சொற்களை சொன்னால் அவர்களுக்கு இவை கிரீக் பாஷையைப்போல் தானிருக்கும்" என்னும் வாக்கியங்கள் காணப்படுகின்றன. மகாமந்திர சபை, மாகாணபதி, மந்திராலயம் என்று சொன்னால் ஜனங்கள் தெரிந்து கொள்ள மாட்டார்கள் என்பது உண்மை என்றாலும் மகா மந்திர சபை (பார்லிமெண்ட்), மாகாணபதி (கவர்னர்), மந்திராலயம்(காபினெட்) என்று சொன்னால் ஜனங்கள் அறிந்து கொள்வதில் ஏதேனும் தடையுண்டோ? இவ்வாறாகப் பிற பாஷைச் சொற்களை உபயோகிக்க நேரிடும் இடங்களெல்லாம் அவற்றின் தமிழ்மொழி பெயர்ப்புச் சொற்களையும் அவற்றின் பக்கங்களில் அப்பிற பாஷைச் சொற்களையும் சில மாதங்கள் அல்லது வருடங்கள் நாம் உபயோகித்து வருவோமானால், பின்னர் நாம் அப்பிற பாஷைச் சொற்களின்றி நம் பாஷைச் சொற்களை மாத்திரம் எழுதும்போதும் அவற்றை நம் ஜனங்கள் தெரிந்து கொள்வார்கள். ஆங்கிலம் கற்ற நம் தமிழ்ச் சகோதரர்களிற் பலருக்கும் தமிழ்ப் பாஷை இப்பொழுதே "கிரீக்" பாஷையாய் விட்டதைக் கண்டுதானே நம் தேசாபிமானிகளிற் சிலர் ஆங்கில மொழிகளைத் தமிழில்

உபயோகித்தல் தகாதென்று கூச்சலிடத் தொடங்கி யிருக்கின்றனர். "பாரதபுத்திரன்" அவர்களே நம் பாரத தேசத்துப் பாஷைச் சொற்கள் போலத் தோன்றுமாறு செய்தற்கு நீங்கள் உண்மையாக விரும்புகின்றீர்களா? இப்பொழுது நம் தமிழ் நாட்டில் வழங்கி வருகின்றனவென்று நீங்கள் சொல்லுகின்ற துலுக்குப் பதங்களுக்கும் சரியான தமிழ்ப் பதங்களைச் சிருஷ்டித்தளிப்பது உங்களைப்போன்ற பாரத புத்திரர்களுடைய கடமையன்றோ?

"பாரதபுத்திரன்" எழுதிய நிருபத்தின் ஐந்தாவது உறுப்பின் தொடக்கத்திற் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை நம்மவரில் ஒருவரும் மறுக்க மாட்டார். ஆனால், அதன் முடிவில் கூறியுள்ளபடி "குறித்த பொருளைச் சரியானபடி குறிப்பிக்க நம் பாஷையில் பதங்களில்லை" யென்று தமிழ்ப் பாஷை இலக்கண இலக்கியங்களைக் கற்றவர் எவரும் கூறார். யான் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஒரு சிலவே கற்றுள்ளேன். அவ்வாறிருந்தும் யான் அறிந்துள்ள எந்தப் பாஷையின் எந்த மொழியையும் நம் தமிழ் மக்களில் எவரும் எளிதில் அறியுமாறு (சம்ஸ்கிருத சொற்களின் கலப்பே யில்லாத) தனித் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுக்கத்தக்க திறமையை யுடையேனென்றால், என்னினும் அதிகமாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்றுள்ளவர்கள் அவ்வாறு செய்யத்தக்க திறமையையுடையவர்களா யிருப்பார்களென்பதை யான் சொல்ல வேண்டிய ஆவசியகம் இல்லை.

வ. உ. சி. யும் சிவாவும் ஆங்கிலச் சொற்களைத் தமிழ் மொழியோடு எழுத்திலும் பேச்சிலும் கலப்பதைக் கண்டிக்கவே இந்த இயக்கத்தைத் தொடங்கினர். ஆனால் வடமொழிச் சொற்களைக் கலவாதிருப்பதில் அவர்கள் கருத்துச் செலுத்த வில்லை. அதற்கு இக்கடிதமே ஓர் எடுத்துக்காட்டாகும். வடமொழிச் சொற்களையும் கலவாது எழுத வேண்டுமென்ற எண்ணம் மட்டும் அவருக்கு இருந்தது என்பதை "சமஸ்கிருத சொற்களின் கலப்பேயில்லாத தனித்தமிழில் மொழி பெயர்த்துக் கொடுக்கத்தக்க திறமையை யுடையேன்" என்று தம்மைக் குறிப்பிடுவதிலிருந்து தெரிகிறது. வடமொழிக் கலப்பினால் தமிழுக்கு ஏற்பட்ட பொல்லாங்கினை உணர்ந்த காலத்தே வடமொழிச் சொற்களையும் கலக்கக்கூடாது என்ற இயக்கத்தைத் தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் தாம் பின்னர் தோற்றுவித்திருக்கிறார்.

———

# திருநெல்வேலிக் கலகம் - 1908

*[வ. உ. சி. 1908 இல் வெள்ளையரால் வீண்பழி சுமத்தப் பெற்றுக் கைது செய்யப்பட்ட செய்தியைக் கேட்ட திருநெல் வேலி மக்கள் கொதித்தெழுந்ததை நேரில் கண்டவரும் நம்மிடையே இன்று வாழ்பவருமான திரு பெ. நா. அப்புசுவாமி அவர்கள் எழுதியது.*]*

நான் வ. உ. சி.யை முதலில் தெரிந்துகொண்ட சில ஆண்டுகளுக்குப்பின், திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் எப்.ஏ.யில் 1908இல் படித்துக்கொண்டிருந்தேன். அதற்கு முந்திய ஆண்டு, 1907இல் நான் சென்னையில் படித்து வந்த போது, பிபின் சந்திரபால், திருவல்லிக்கேணி கடற்கரையில், பெருமுழக்கப் பேருரைகளை நிகழ்த்தக் கேட்டேன். வங்காளப் பிரிவினை காரணமாகக் கொதித்தெழுந்தவர்களுள்ளும் சுதந் திரத் தீயைப் பற்றி எழச் செய்தவர்களுள்ளும் அவர் ஒருவர். 'சுதேசி' 'அயல்நாட்டுப் பண்ட பகிஷ்காரம்' என்னும் கூச்சல்கள் தமிழ்நாட்டிலும் எழத் துணை செய்தவர். இந்த உணர்ச்சி தென்னாட்டில் எங்கும் அத்தகைய மனப்போக்கு உடையவர்களிடையே பரவிற்று. வ. உ. சி.யும் அவர்களில் ஒருவர். அவர் செய்த சிற்சில செயல்களின் காரணமாக 1908ஆம் ஆண்டில் அவர் சிறைப்படுத்தப்பட்டார்.

அதைக்கேட்ட திருநெல்வேலி மக்களில் பலர் ஆவேசங் கொண்டார்கள். பெருங் கூட்டமாகத் திரண்டார்கள். கடைகளை அடைக்கச் செய்தார்கள். கற்களை வீசினார்கள். இந்துக் கல்லூரி வாயிலில் பெருங்கூட்டம் திரண்டது. கல்லூரிக்குச் சைக்கிளில் ஏறி வந்துகொண்டிருந்த ஹெர்பெர்ட் சாம்பியன் (இவர் பின்னர், சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரித் தலைவராகவும் அதன்பின் கல்வித்துறை நெறியாள ராகவும் பணிபுரிந்தார்.) 'பாரி அண்ட் கம்பெனி' அலுவலகத் திற்கு விரைந்து சென்று கூட்டத்திலிருந்து தப்பவேண்டி யிருந்தது. அன்று அக் கூட்டத்தார் அனைவரும் சிதம்பரம் பிள்ளையின் பெயரை முழங்கினார்கள். அவ்வாறு முழங்கிய வண்ணம், தெருக்களில் உள்ள விளக்குகளையெல்லாம் உடைத் தார்கள். திருநெல்வேலி டவுனில் உள்ள நகராட்சி அலுவ லகத்தையும் போலீஸ் ஸ்டேஷனையும் தீக்கு இரையாக்க முயன்றார்கள். நகராட்சி அலுவலகம் பற்றி எரிந்து, தீக்கு இரையாகிவிட்டது. போலீஸ் ஸ்டேஷன் தப்பிற்று.

---

* *தில்லித் தமிழ்ச்சங்கம்—கடர் வ. உ. சி. மலர். 1964.*

அக் கலகக்காரர்கள் எங்கள் கல்லூரி வாயிலில் கூச்சலிட, கல்லூரித் தலைவர் தப்பி ஓடிவிட, கல்லூரியின் கீழ் அதிகாரிகள் —கூட்டத்தின் விருப்பத்துக்கு, உத்தரவுக்கு, இணங்க—அதை மூடிவிட்டார்கள். நாங்கள் அச்சத்தோடு வீடு சென்ருேம். ஒவ்வோர் வீட்டின் வாயிற்கதவும் அடைக்கப்பட்டது. நான் அப்பொழுது வீரராகவபுரத்தில் இருந்தேன். எனது தந்தையின் மிக நெருங்கிய நண்பர் பி. என். வெங்கடாசலம் ஐயரின் வீட்டு இரண்டாவது மாடியில் ஏறி, அவருடைய மகனும், என்னுடைய நண்பரும், நீதிபதியாக இருந்து இப்போது ஒய்வு பெற்றிருப் பவருமான பி. வி. கிருஷ்ணசாமி ஐயருமாக ஒன்றரை மைலுக் குத் திருநெல்வேலியில் எரியும் கட்டடப் புகையைக் கண்டோம். எங்கும் கூட்டமாகச் சென்று, ஆரவாரம் செய்யும் ஓசை காதில் விழுந்தது. அன்று மாலையில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டியிருந்தது என்றும், அதனுல் சிலர் இறந்தனர் என்றும் கேட்டு வருந்தினேம். அவ்வாறு நடக்கப் போகிறது என்று வ. உ. சி. கருதவே இல்லை என்பது எங்க ளுக்கு நிச்சயம். அறியா மக்கள் (கூட்ட வெறியில்) செய்த அட்டூழியங்களே இவை என்பது அப்போதும் எங்களுடைய மனத்தில் பட்டது. அந்த நினைவுகளை ஒருநாளும் மறக்க முடியாது.

*அந்த நிகழ்ச்சியைப்பற்றித் திருநெல்வேலி மாவட்ட வரலாற்று நூலில் (Tinnevelly District Gazetteer) எச். ஆர். பேட் (H. R. Pate) என்ற வெள்ளையர் எழுதியது.*

*"இவர்கள் மேல் (வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா) வழக்கு ஒழுங்காகத் தொடருமுன்பு முன் ஏற்பாடுகள் நடைபெற்றபோது 1908 மார்ச்சு மாதம் 13வ திருநெல்வேலி யிலும் தூத்துக்குடியிலும் கலகங்கள் கிளம்பின. அவைகள் இவர்களுடைய கேட்பாருள்ளத்தே கடுஞ்சினம் மூட்டும் வேக மான பேச்சுக்களின் விளைவே. இக் கிளர்ச்சியை வேண்டும் என்றே ஒரு சங்கம் நடத்தியது என்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. வேண்டுமென்றே இதற்காகக் கிளப்பிவிடப்பட்ட ஒரு கூட்டம் வலுவந்தமாகக் கடைகளை அடைக்கச் செய்தது. திருநெல்வேலிப் பாலம் என்று சொல்லப்பெறும் வீரராகவ புரத்தில், பள்ளிப் பிள்ளைகளும் வாலிபர்களும் ஆக ஒரு கூட்டம் கூடிக் கடைகளை அடைக்கும்படி செய்து திருநெல்வேலி நகரை நோக்கிப் புறப்பட்டது. வழியில் இரண்டு ஐரோப்பியரை அடித்ததோடு சர்ச்சுமிசன் கல்லூரியிலும் சிறிது குழப்பத்தை

---

*இ. மு. சுப்பிரமணிய பிள்ளை : வீர சிதம்பரனுர்.

விளைவித்து நகரத்திலிருந்த கடைகளை அடைக்கச் செய்து தெருவிளக்குகளையெல்லாம் உடைத்து மாவட்ட நீதி மன்றத்துள் நுழைந்து நீதிபதியை அச்சுறுத்தி மன்றத்தை அடைக்கும்படி செய்து, காவலர் நிலையத்தைக் கொள்ளையிட்டு எரித்து, நகராட்சி நிலையத்தையும் அதன் பொருட் சேமிப்பு அறையையும் கொளுத்தி, அஞ்சல் நிலையத்தின் ஒரு பகுதியை எரித்து, மருந்துச் சாலையில் நுழைந்து தட்டுமுட்டுச் சாமான்களை உடைத்துப் படாதபாடெல்லாம் படுத்திவிட்டது அக் கூட்டம். கலெக்டரும் காவலர் தலைவரும் காவற்படையுடன் வந்தபோது ஊரினுள் நுழையாதபடி தாக்கப்பட்டார்கள். கலெக்டரே சுட்டுக் கூட்டத்தைக் கலைத்தார். ஐம்பத்துமூவர் பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்கள்.

———

## குணமிகுந்த நாவலோன்

**மு. ரா. அருணாசலக் கவிராயர்**

*கற்றாரைக் கற்றாரே காமுறுவ*
*ரென்றௌவை கருதிச் சொன்ன*
*சொற்றான் மெய்யாகி லொன்றுங் கல்லாத*
*வென்போல்வார் தூய நின்னை*
*யுற்றாசை மேலிட்டுப் பற்றுதலாற்*
*கற்றோரென் றுரைக்க வேண்டு*
*மெற்றாலுஞ் சிறந்தகல்விப் பொருள்படைத்த*
*சிதம்பரப்பெ ரிறைவ ரேறே.*

*கற்பகமே கேட்டதெலாங் கண்டவர்க்குக்*
*கொடுக்குமெனக் கற்றோர் சொற்ற*
*நற்பகலா வஃதெங்ங னிருப்பதென*
*வற்பகலா தலைந்து தேடி*
*பொற்பகலா நின்னிடத்தி லேவந்து*
*பெருமகிழ்ச்சி பூப்பக் கண்டே*
*னற்பலனே யினிப்பெறலாஞ் சிதம்பரசற்*
*குணமிகுந்த நாவ லோனே.*

———

# வீரச்
# சிதம்பரம் பிள்ளை

கவியோகி
சுத்தானந்த பாரதியார்,
யோக சமாசம்



(1909 முதல் சிதம்பரம் பிள்ளையை அறிவேன். சுதேசக் கப்பலுக்குப் பிடியரிசிக் கலயம் வைத்துப் பணந்திரட்டி அளித்தேன். எனது சிலம்பம், வாள் வீச்சுகளை அவர் "சவாசு பாண்டியா" என்று போற்றினர். எனது இசைப்பாடல், யோகசித்தி, பாரதசக்தி—அனைத்தையும் படித்துப் புகழ்ந்தார். தூத்துக்குடி வட்டக் கிணற்றில் அவர் தலைமையில் பலமுறை பேசியதுண்டு. அவர் நெட்டான வீரத்திருவாளர்; முறுக்கு மீசையழகர். திருக்குறளை மூச்சுப்போல ஒப்பித்துப் பேசுவார். விடுதலை மேடையில் வீரரின் இடிமுழக்கம் எங்களுக்குப் புத்துணர்ச்சி தருவது வழக்கம்.)

வீரச் சிதம்பரம் பிள்ளை—தமிழ்
வேளாளத்-தாளாள-வித்தக வள்ளல்
பாரத சக்திக் கனலைத்—தூண்டிப்
பாரெல்லாம் போற்றப் பணிநலங் காத்தான்.

திலகர் வலக்கர மாணன்—தெய்வத்
திருக்குறளே யுருக்கொண்ட நல் வாழ்வோன்
உலகப் புகழ்பெற்ற தியாகி—அவன்
உன்னதச் சைவசித்தாந்த விவேகி.

வீறு படைத்த குரலான்—நாட்டு
விடுதலைச் சிங்கம் குணத்திலே தங்கம்
ஏறுபோற் பீடு நடையான்—அவன்
எண்ணத்திற் பல்கலைக் கழகம் உடையான்.

ஏங்காத நெஞ்சுரங் கொண்டான்—அவன்
எழுந்தால் உலகம் எழுந்துபின் பற்றும்

தூங்காத விடுதலைத் தொண்டன்—பட்ட
தொல்லைகள் எத்தனையோ ! எமகண்டம் !

துன்பச் சிறையைப் பொறுத்தான்—அங்கே
தோள்கள் முறிந்திடச் செக்கும் இழுத்தான்
இன்ப விடுதலை எய்த—அவன்
எத்தனை எத்தனை தியாகஞ் செய்தான் !

நரகக் கொடுமை பொறுத்தும்—இந்த
நாட்டுக் கொடியினைத் தூக்கிப் பிடித்தான்
விரதநல் வேள்வி விளங்க—அவன்
விறிட்ட மந்திரம் வந்தே மாதரமே.

எங்கள் சுதந்தர தாகம்—தீர
எழுப்பினன் பாரதி பாடலை யீங்கே !
வங்கம் விட்டிந்துக் கடலில்—வீர
வரிசைகள் காட்டினன் வாழ்வுத் திடவில் !

சிதம்பரம் சிதம்பரம் என்றே—வீரஞ்
சிலிர்த்திடப் பாடுவோம் சேர்ந்திங்கு நன்றே
சுதந்தரக் கப்பலில் ஏறிப்—புவித்
துறைகளை யெல்லாம் துருவி யளப்போம்.

அஞ்சிடும் பேடிகள் உண்டோ—எங்கள்
அன்னையைப் போற்று அலிகளும் உண்டோ ?
நெஞ்சில் நினைத்ததைப் பெற்றேம்—வெற்றி
நீலவான் எட்டக் கொடியினை நட்டோம்.

எந்தாய் வாழ்கெனப் பாடிப்—பே
ரின்பஞ் சிலிர்த்திட வெற்றி கொண்டாடி
நந்தாக் கலங்கரை விளக்கு—நோக்கி
நம்பிக்கையான துறையினைச் சேர்வோம்.

———

## சுதந்திரம் காண்பாயோ சொல்

### கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

கைநோவக் கால்நோவக் கல்லுடைத்துச் செக்கிழுத்து
மெய்சோர்ந்தும் ஊக்கம் விடாதுநின்ற—ஐயன்
சிதம்பரம் அன்றுசிறை சென்றிலனேல், இன்று
சுதந்திரம் காண்பாயோ ? சொல்.

———

# மனைவிக்கொரு நூல்

**கவிஞர் ஆனந்தம்**

*துணை இயக்குநர்,*
*செய்தி விளம்பரத்துறை*
*தமிழக அரசு.*



செக்கிழுத்தார்; சிறைசென்றார்; தியாகம் செய்தார்;
சிங்கமெனும் ஆங்கிலேயர் பிடரி தன்னைச்
சிக்கெனவே பிடித்தாட்டும் விதமாய்ப் போட்டிச்
சிறுகப்பல் கடல்தூத்துக் குடியில் விட்டார்;
தெக்கணத்துத் திலகரெனப் புகழும் பெற்றுத்
தேசீயக் கனல்எரிய விறகாய் ஆனார்;
தக்கவர்க்குத் தக்கவாறு நினைவுச் சின்னம்
தமிழரசு சமைத்திடுநாள் திருநாள் அன்றோ ?

அரசியலில் தம்மைத்தாம் அழித்துக் கொள்ளும்
அகிம்சையெனும் அறவழியில் பலபேர் சென்றார்;
வரிசைபெறுஞ் சிதம்பரனார் துய்த்த வண்ணம்
வகையான முழுவாழ்வு வாழ்ந்தோர் ஏது ?
சிறைசென்று மீண்டவர்கள் பல்லோ ருள்ளும்
செக்கிழுத்துச் சிதைவுற்றோர் இவர்போல் உண்டா ?
கரிசனமாய்ச் சுதேசியத்தைக் காப்போம் என்போர்
கப்பலினைச் செலுத்துதற்குத் துணிவா பெற்றார் ?

இல்லறத்தில் ஈடுபட்டு வலிமை சேர்த்தோர்
எழில்மனைவி தனக்கொருநூல் இயற்றி னாரா ?
வல்லவராம் இவர்தந்த வள்ளி யம்மை
வரலாறும் உரைநூலும் அரிய செல்வம்!
எல்லையிலா மொழிப்பற்றுக் கொண்ட தாலே
எத்தனை நூல் முதன்முதலாய்ப் பதிப்பித் துள்ளார்!
'நல்ல'வர்கள் இருந்தாரே இவர்போல் உற்ற
நண்பர்தமை வறுமையிலும் காத்தோர் யாரே ?

———



# உயிர் பெற்ற தமிழம்

சாலை இளந்திரையன்
தில்லிப் பல்கலைக்கழகம்,
தில்லி.

''உடையாலும் நடையாலும் ஒருகாலத் தமிழன்—
உரையாலும் செயலாலும் பலகால மறவன்!
'அடியாமல் படியாது மாடெ'ன்ற தமிழன்—
அதனாலே புகழேணி நடைகொண்ட மறவன்!

திலகர்க்கு நிகராக நிமிர்வுற்ற தமிழன்—
சிரமென்னும் அதைஎன்றும் குனியாத மறவன்!
கலம்விட்டுப் பழமைக்கு மெருகிட்ட தமிழன்—
கலங்காத நெஞ்சுக்கே இவன்''என்ற மறவன்!

வீரத்தை வெறுஞ்சொல்லில் புதையாத தமிழன்—
வேகத்தைக் கதையாலே விழுத்தாத மறவன்!
ஈரத்தின் உருவான இதயத்துத் தமிழன்—
எதுபோதும் உயர்பண்பை இழவாத மறவன்!

தமிழ்ச்செய்யுள் தமிழ்ச்செய்யு ளாய்க்கற்ற தமிழன்
தறுகண்மை அதனாலே தலைக்கொண்ட மறவன்!
தமிழ்ச்சொல்லன் உயிர்தன்னை அறியாத நழுவல்
தனங்கட்கே எதிரான சரியான மறவன்!

தமிழென்று தமிழென்று தமிழென்று கதறித்
தமதென்ற தமதென்ற நலமொன்றில் புதையும்
எமகண்ட நடைகாண இல்லாத தமிழன்;—
என்போன்ற இதயங்கள் மறவாத மறவன்!

வ.உ.சி. வடிவாக உயிர்பெற்ற தமிழம்
மடியாது துணைநின்று காவாத தமிழ்கள்,
வ.உ.சி. பெயர்சொல்லல் மணியான நடிப்பு;—
மனம்செத்த அவர்க்குண்டா வீரத்தில் பிடிப்பு?''

# "சொல்லேர் உழவர்"

புலவர் இரா. இளங்குமரன்
மதுரை.



உந்தும் உணர்ச்சியால் வந்துள மக்காள்!
சிங்கத் தமிழீர்! மங்கா வலியீர்!
மானம் பெரிதா? மன்னுயிர் பெரிதா?
கூனல் ஒழித்துக் கூறுவீர் இதனை.
சொந்த நாட்டினை வந்தவர் ஆண்டிடச்
சிந்தை ஒய்ந்திடல் நந்தமக் கழகோ?
அடங்குதல் ஒடுங்குதல் ஆடவர்க் கில்லை;
அடிமை யாதல் மகளிர்க் கில்லை;
வீரத் தாயர் நேரிய உணர்வால்
ஊட்டிய பாலின் உணர்ச்சியை ஈங்குக்
காட்டுதல் அன்றோ கடனும் உமக்கே;
எழுமின்! விழிமின்! கிளர்மின்! கிளம்புமின்!
உரிமையே உயிராம்! உரிமையே அறமாம்!
உரிமை இன்றேல் உயிரும் விடுவோம்!
காட்டு விலங்கென வேட்டை யாடிடும்
அன்னியர்க் கடங்கி வாழ்வதே புன்மை;
சொந்த நாட்டிலும் வாணிகம் செய்ய
நந்தமக் கில்லை நண்ணிய வுரிமை;
வாணிகம் செய்தல் வந்தவர் கடனும்
கோணிகள் தூக்கும் கூலிகள் ஆதல்
நந்தம் கடனும் அந்தோ அந்தோ
"கங்கைப் பொருளும் காவிரிப் பயனும்
காழகத் தாக்கமும் ஈழத் துணவும்"
பண்ட மாற்றலால் கொண்டு மலையெனக்
குவித்த நம்திறம் அவிந்து போயதோ?
'பரிமுக அம்பி கரிமுக அம்பி
அரிமுக அம்பி' ஆய்ந்து கண்டு

வாரிகடல் ஆண்ட வீயாத் தமிழீர் !
புரிதிறம் கெட்டுப் போயதும் என்னே
இன்னே எழுவீர் ! ஏற்பன செய்வீர் ''
என்று முழங்கிய எழிற்பெருஞ் செம்மல்
செஞ்சொல் வீரர், அஞ்சாத் திறலர்,
திருக்கு மீசையர், உருக்கு மொழியர்,
இரும்பு நெஞ்சர், கல்லடி சொல்லடி
கசையடி ஏச்சு பேச்செலாம் தாங்கி
வசையற வாழும் வாழ்வையே உன்னிச்
செக்கிலே உழன்ற செம்மல் வ. உ.
சிதம்பரம் போலொரு சீரிய வீரர்
சொல்லெனும் நல்லேர் பூட்டிக் கேட்போர்
உளநிலத் தோங்கும் வளமிகு வித்தினால்
உணர்ச்சிப் பயிரை உலகுய வளர்த்திடும்
தன்மையைத் தெளிந்த வன்மையி னாலே
சொல்லேர் உழவராம் நல்லவோர் பட்டம்
நல்கினர் உழவராம் வள்ளுவச் சான்றோர்
''வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை''யென ஆய்ந்தே.

---

## சிதம்பரம் என் சற்குருவே

### சாமி சகசானந்தர்*

''தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றார் எனக்கழறும்—மாமறைக்குச்
சான்றாச் சிதம்பரம் என்தந்தை நினைக்கண்டேன்,
நான்மாறுஎன் செய்வேன் ? நவில்.''

''சாவா மருந்தெனவே தற்பரனார் வள்ளுவர்செய்
பாவா லறிவெனக்குப் பாலித்த—தேவா !
சிதம்பரமென் சற்குருவே ! சிந்தையினில் நின்னின்
பதம்பெற்றேன் என்றும் பணிந்து.''

''கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டில் என்றனக்கு
மெய்ம்மாட்டி நின்றருளும் வித்தகனே !—செம்மறையின்
பாவனைத்தும் சித்தை பதிவித்தேன் ; சிதம்பரமென்
தேவநின தின்வருளால் தேர்ந்து.';

*வ. உ. சி. சென்னையில் வாழ்ந்தபோது சாமி சகசானந்தர் நட்புக் கிடைத்தது. சாமி, வ. உ. சி. யிடம் மாணவர்போல் பத்தாண்டுகட்கு மேல் அவர் இல்லத்திலேயே வாழ்ந்து திருக்குறள் கற்றவர்.

# சீரிய கொள்கைச் சிதம்பரப் பதிகம்

தமிழ்மொழி ஞாயிறு
ஞா. தேவநேயன்
காட்டுப்பாடி.



நாட்டுப்பற் றுல்முன்னே நாய்படாப் பாடுபட்ட
ஓட்டைப் பிடார ஒளிர்மறவன்—மாட்டன்று
நன்றிபா ராட்டாத நாடொரு நூற்றுண்டு
சென்றபின் செய்யும் சிறப்பு.

ஆலைத் தொழிலாளர் ஆற்றும் பணிக்கேற்ற
கூலித் திறம்பெறுங் கொள்கையின்—மேலும்
அடிமைத் தனமில்லா ஆட்சிதன் மானக்
குடிமை சிதம்பரத்தின் கோள்.

ஆங்கிலர்நா வாய்க்குழும்பின் ஆவுருபா வோரிலக்கம்
வாங்க மறுத்து வருந்தொல்லை—ஓங்கினுமே
கொள்கை விடாது குடிமாண் சிதம்பரம்தன்
உள்கை சிறந்தான் உயர்ந்து.

தனக்குச் சமமாகத் தன்மனைவி வாழ்ந்து
மனக்கினிய மந்திரியாய் மாணுங்—கணக்காக
இல்லறம் ஆற்றினுன் ஈகைச் சிதம்பரம்தான்
வள்ளுவன் கண்ட வகை.

பிறப்பாற் சிறப்பில்லை யென்னும் பெருநூல்
அறப்பால் மனையோ டணைந்து—பிறப்பிழிந்தான்
என்னும் ஒருவனை இல்லம்வைத் துண்பித்தான்
மன்னும் சிதம்பரத்தின் மாண்பு.

தாய்நாடே போற்றியெனுந் தக்கவங் கத்தொடரை
வாய்மொழியாற் கண்டித்த வன்தண்டல்—நாயகற்கே
வாயுள்ள நாளும் வலித்துரைப்பே னென்றுரைத்தான்
பாயும் சிதம்பரவேங் கை.

மாடுபோற் செக்கிழுத்து மட்டிபோற் கல்லுடைத்து
வேடுபோற் கேடா யுடையுடுத்துப்—பாடுபட்டான்
கேழ்வரகுக் கூழுண்டு கீழ்விலங்கிற் கீழ்விலங்கின்
தாழ்வுறுதற் கேசிதம்ப ரம்.

கொலையுங் கடுஞ்செயலுங் கூடாது வேற்றரசு
குலையும் வகையெதிர்க்குங் கொள்கை—தலையாகக்
கொண்டான் சிதம்பரம் கூற்றுலும் ஆசுகொலை
கண்டோம் அவன்கண்ட ளம்.

ஆற்றும் பணிமீட்டான் ஆங்கில னேனுமவன்
வேற்று மொழிப்பெயரை வேட்புடன்தன்—பேற்றுமகன்
பேராக இட்ட பெருந்தன்மை பாராட்டும்
சீராம் சிதம்பரம் செப்பு.

தொல்காப் பியப்பகுதித் தொல்லுரையும் ஒண்குறளின்
மல்கா வுரையொன்றும் மாண்டமிழ்க்கே—அல்காத
இன்னிலைப் புத்துரையும் ஏனைப் பதிப்புகளும்
துன்னிய வ. உ. சி. தொண்டு.

———

## தமிழகத்தார் மன்னன்

### பாரதியார்

வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதைவிரைவிற் கேட்பாய்நீ
வருந்தலைஎன் கேண்மைக் கோவே!

தாளாண்மை சிறிதுகொலோ யாம்புரிவேம்
நீஇறைக்குத் தவங்கள் ஆற்றி
வேளாண்மை நின்துணைவர் பெறுகெனவே
வாழ்த்துதிநீ வாழ்தி! வாழ்தி!!

———

# கப்பல் ஓட்டிய காவல! கழகத் தமிழ்போல் வாழி!




வித்துவான்
கோ. வே. பெருமாள்,
எம். ஏ., பி. டி.
இந்துக் கல்லூரி, நெல்லை.


1. நூற்ருண்டை எட்டிவிட்ட நுண்ணுணர்வுப் பேரறிஞ
மாற்ருரும் போற்றுகின்ற மாண்பாள—சாற்றுகின்ற
தென்னுட்டுத் தீந்திலக தேர்வீர, வ. உ. சி.
என்னுளும் வாழ்வீர் இனிது.

2. பங்கம் இல்லா வேளாளர்
பழுதுரு உலக நாதபிள்ளை
தங்கம் போன்ற பரமாயி
தாங்கிய நோன்பின் தவப்பயனே!
எங்கும் நிறைந்த பேரருளே
எழிலார் செந்தில் முருகென்று
பொங்கும் இன்ப இறையன்பே
பூண்டு வாழ்ந்தீர், சிதம்பரமே!

3. நெல்லை இந்துக் கல்லூரி
நேர்மைச் சேவியர் உயர்பள்ளி
கல்வி திருச்சிக் கலைசட்டம்
கற்க வைத்த செவிலியராம்;
வல்லை ஓட்டப் பிடாரநகர்
வழங்கி வளர்த்த நற்ருயாம்;
சொல்லைப் பெற்ற சிதம்பரனர்!
சோர்வே யற்றீர் தொழுகின்ரேம்.!

4. விளங்குந் தூய தமிழறிஞ!
வீர வ. உ. சிதம்பரனே!
களங்கம் அற்ற காராள!
கல்வி வல்ல நூலாள!

பளிங்கு போன்ற பண்பாள!
பாறை போன்ற நெஞ்சாள!
துளங்கும் வழக்குத் துணிவாள!
துறைகள் அறியும் நாவாள!

5. உங்கள் வாழ்க்கை வரலாற்றை
உவந்தே கற்றோம் ஒன்றுகண்டோம்
சிங்க மறச்செயல் திறத்தாலே
செழிப்பும் வளமும் சேர்ப்பதற்கே
துங்க விடுதலை தோற்றுதற்கே
துடித்தே நின்றீர், அஃதொன்றோ!
மங்காத் தமிழின் மாண்பியலை
மண்டி யாய்ந்ததும் உரங்கண்டோம்.

6. பாட்டுப் புனைந்த பாவலரே!
பகரும் குறள்நூல் ஆய்ந்தவரே!
கேட்போர் வியக்க மொழிபெயர்த்தீர்;
கிழமைத் தொன்னூல் பதிப்பித்தீர்;
நாட்டுக் குழைத்த நற்பணிமேல்
வீட்டு மொழியாம் செந்தமிழின்
ஏட்டுக் குழைத்த நற்றொண்டை
என்றும் வியந்தே போற்றுவமே!

7. தன்னாட்டுப் பற்றின்றித் தன்மான
உணர்வுமின்றி மாக்கள் போல்
இன்னாட்டில் பலர்வாழ்ந்தார்! இழிநிலைக்கே
இலக்கானார்! விழிப்புக் கொள்ளத்
தென்னாட்டில் எழுச்சியுற்ற தலைவர்களில்
சிதம்பரமே! உம்மைப் போல
தன்னாட்டுப் பற்றூன்றித் தாய்மொழிமேல்
செழுமைகாண உழைத்தோர் யாரே?

8. மன்றோரம் சாற்றுத மாவீர!
மாசற்ற எளியோர் வாழ்வை
பொன்றாதே பேணவல்ல புகழாள!
பொதுவாழ்வில் நின்று தேயும்
கொன்றன்ன சாதிகளின் கொடுமைகளைக்
களைவதற்கே வழக்குகள் உரைத்தீர்;
குன்றன்ன எந்தலைவ! கொள்கைவீர!!
கும்பிட்டோம், நும்பணி குறித்தே!

9. ஒப்பிலா வுயிரைப் பணயம்
வைத்தே செக்கை இழுத்தோய்
எப்பா லவரும் வியக்க
எழில்சேர் 'செந்தமிழ்ச் செல்வி'
செப்பும் விழாமலர் சிறக்க
செய்கப் பையா வாழி
கப்பல் ஓட்டிய காவல
கழகத் தமிழ்போல் வாழி.

---

## குலவு பிள்ளைச் சிதம்பரம்

### நாமக்கல் கவிஞர்

பேசிவிட்டே சுயராஜ்யம் பெறலாம் என்று
பெரியபல தீர்மானக் கோவை செய்து
காசுபணப் பெருமையினால் தலைவ ராகிக்
காங்கிரசை நடத்தியதைக் கண்டு நொந்து
'தேசநலம் தியாகமின்றி வருமோ?' என்று
திலகர்பிரான் செய்தபெருங் கிளர்ச்சி சேர்ந்தே
ஓசைபடா துழைத்தசில பெரியோர் தம்முள்
உண்மைமிக்க சிதம்பரனும் ஒருவ னாகும்.

உழுதுபல தொழில்செய்தே உழைப்போ ரெல்லாம்
உணவும்உடை வீடின்றி உருகி வாடப்
பழுதுமிக அன்னியர்க்குத் தரக ராகிப்
பசப்புகின்ற வீணருக்கோ சுகங்கள்! என்றே
அழுதுருகித் தொழிலாளர் இயக்கம் கண்டே
அந்நாளில் சிதம்பரன்முன் நட்ட வித்தாம்
விழுதுபல விட்டபெரு மரமாய் இன்று
வெவ்வேறு கிளைகளுடன் விளங்கக் காண்போம்.

கள்ளமற்றுக் கலகலத்த பேச்சுக் கேட்கும்;
கறுப்பெனினும் சிரிப்புமுகம் கருணை காட்டும்;
குள்ளமென்னும் ஓர்உருவம் இருகை கூப்பிக்
குண்டெடுத்துக் கடைந்ததெனக் குலுங்க நிற்கும்;
வெள்ளையன்றி வேறுநிறம் அறியா ஆடை
வேதாந்த சித்தாந்த ஒளியே வீசும்;
கொள்ளைகொள்ளை சிறைபிருந்த குறிகள் தோன்றும்
குலவுபிள்ளைச் சிதம்பரத்தை நினைவு கூர்ந்தால்.

---



# உரிமைக்கப்பல் ஓட்டிய சிதம்பரம்

புத்தனேரி ரா. சுப்பிரமணியம்
பொதுப்பணித்துறை,
தமிழக அரசு, சென்னை.

உரிமைக் கப்பல் ஓட்டிய சிதம்பரம்
பெருமையை நினைப்போமே !—அவர்
ஒருநூ ருண்டுத் திருநாள் எண்ணி
இருகை குவிப்போ மே !

சுதந்திரம் நமது பிறப்புரிமை எனத்
துடித்தெழச் செய்தா ரே !—வ. உ.
சிதம்பரம் என்றால் சிங்கக் கனவெனத்
திணறினர் பரங்கிய ரே !

திலகர் வழியில் விடுதலைப் புரட்சித்
தீயினை வளர்த்தா ரே !—வீரத்
திலகம் சிதம்பரம் கோவைச் சிறையில்
செக்கினை இழுத்தா ரே !

விடுதலைப் போரில் தமிழரின் வீரம்
விளங்கிடச் செய்தா ரே !—நாட்டின்
அடிமை விலங்கை அறுத்திட உடல்பொருள்
ஆவியும் ஈந்தா ரே !

இலக்கியத் தென்றல் ; அரசியல் புயலென
இலங்கிய வ. உ. சி.—எதிரியைக்
கலக்கிய வீரப் பெருவர லாற்றுக்
காவியம் படைப்போ மே !

கூனனும் நிமிர்ந்தெழுவான் !—கருத்துக்
குருடனும் விழிபெறுவான் !—சிறு

பூனையும் புலியாய்ச் சீறிடும் வீரம்
பொங்கிடும் வரலாறே !—நாட்டு
மானம் பெரிதென மதித்தவர் சிதம்பரம்
மாபெரும் வரலாறே !—புகழ்…….

வளர்த்திடும் வரலாறே !
—உரிமைக் கப்பல் ஓட்டிய சிதம்பரம்
பெருமையை நினைப்போமே !

———

## செந்தமிழ் தேர் சிதம்பரவேள்

### சேற்றூர் இராமசாமிக் கவிராயர்

இந்தவொரு தரைமீதே ரெயிலோட
வதிசயத்தோ டினிதாய்ப் பார்த்து
வந்தவரே யதுபெரிதா வந்தரெயிற்
கெண்மடங்கா வருவே கஞ்சே
ரந்தமிகுங் கப்பலையே யுங்களுக்கு
முன்னீரி லணியா யோடச்
செந்தமிழ்தேர் சிதம்பரவேள் செய்துமுடித்
ததுபெரிதா செப்பு வீரே.

ஒன்றியெழு பதுவெள்ளங் கவிகளிலக்
குவன்மற்றோர்க் குயிருண் டாக
வன்றுதழை யிலையுறுசஞ் சீவியைமா
ருதிகொணர்ந்த தரிதோ மேலா
மன்றமதி சிதம்பரவேள் கோடான
கோடியெனு மனுபி ழைக்க
வின்றுநவ மணிவிளைகப் பலைக்கொணர்ந்த
னிதுபெரிதோ வியம்பு வீரே.

———

# சிதம்பரம் பிள்ளை தியாகப்பூக் கொல்லை

## கவிஞர் முத்துலிங்கம்

*முரசொலி, சென்னை.*

வெள்ளையரை முதன்முதலில் விரட்டுதற்கு
விதைத்திட்ட தமிழ்நாட்டில், பரங்கியர்க்குக்
கொள்ளிவைக்க வேண்டுமென்ற கட்டப் பொம்முக்
கோன்ஆண்ட நெல்வேலிச் சீமை தன்னில்
பிள்ளையொன்று அவனைப்போல் வேண்டு மென்று
பெற்றோர்கள் தவமிருக்க; தமிழர்க் கெல்லாம்
பிள்ளையெனத் தோன்றியவர் இந்தப் பிள்ளை
பேர்சிதம் பரம்பிள்ளை ! சைவப்பிள்ளை !

நடக்கின்ற சிறுவயதில் இந்தப் பிள்ளை
நடைவண்டி இழுத்தபிள்ளை ! எனினும் வீழ்ந்து
கிடக்கின்ற பாரதத்தாய் நிமிர்ந் தெழுந்து
கீழ்த்திசையில் சுதந்திரமாய்த் தனது காலால்
நடப்பதற்குச் செக்கிழுத்து நடந்த பிள்ளை !
நாம்தமிழர் எனும் உணர்வைத் தந்தபிள்ளை !
திடமான திலகர்வழிக் காங்ரஸ் மீது
சிந்தை வைத்துச் சிறைசென்ற வீரப் பிள்ளை !

ஏகாதி பத்தியத்துக் கப்பலுக்கு
எதிர்க்கப்பல் ஓட்டியவர் இந்தப் பிள்ளை !
ஆகாயம் கவிந்துள்ள இந்த மண்ணில்
அவரைப்போல் ஒரு பிள்ளை கிடைப்பதில்லை !
வாகான சுதந்திரத்தைப் பெறுவ தற்கு
வடநாட்டார் பலதியாகம் செய்தபோதும்
ஏகாதி பத்தியத்திற் கெதிர்ப்புக் கூறி
எதிர்க்கப்பல் விட்டவர்கள் வடக்கே இல்லை !

கோவைநகர்ச் சிறைதனிலே கைதி கட்கு
குறள்கூறி அறிவுதந்த பிள்ளை ! கம்பன்
பாவைமிக விழைந்தபிள்ளை ! ஆங்கி லத்தைப்
படித்துவிட்டுத் தாய்மொழியை மறந்து விட்ட

தேவையில்லாத் தமிழர்களை உமிழ்ந்த பிள்ளை !
தேசபக்தி கொண்ட பிள்ளை ! பொருள்திரட்ட
நாவைஉப யோகிக்க நினையாப் பிள்ளை !
நறுந்தமிழ்க்கே உபயோகம் செய்த பிள்ளை !

பிள்ளைத்தமிழ் கேட்கையிலே பெற்றோர்க்குப்
பெருகிவரும் பேரின்பம்! ஆனால் இந்தப்
பிள்ளைதமிழ் கேட்கையிலே தேச பக்தி
பெருகியது நாட்டினிலே! இப்பிள்ளை மேல்
பிள்ளைத்தமிழ் நான்பாடப் பலநா ளாகப்
பெருவிருப்பம் கொள்கின்றேன் : ஆனால் இங்கே
வெள்ளைத்தாள் இதற்குமேல் சுமக்கா தென்று
விளைகின்ற என்பாட்டில்'தளை' செய்கின்றேன்.

---

## தருமத்தின் பேருரு

### திருவாரூர் வைத்தியநாத சுவாமி

தருமமும் பொறையும் வாய்மையும் வீரத்
தன்மையும் ஒழுக்கமும் நடுவுந்
திருநற் குணமுந் திருந்துபே ரழகுஞ்
சிறப்புமொண் கீர்த்தியுங் கொடையும்
அருளுமா தவமும் புனிதமும் அன்பும்
அறிவுமோர் உருவுகொண் டாழி
இருநில முதித்தால் என்னவந் துதித்தான்
என்னருஞ் சிதம்பரப் பெயரோன்..

---



# சிதம்பரனார் அடிச்சுவடு

நெல்லை
ந. சொக்கலிங்கம், எம்.ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
குமரகுருபர சுவாமிகள்
கலைக்கல்லூரி,
திருவைகுண்டம்

'யாராண்டால் நமக்கென்ன' என்றிருந்த
ஏமாளித் தனமான நிலையால் நாட்டைக்
கூருக்கிப் பிரித்தாள எண்ணி வந்த
கும்பினியார் கூட்டத்தின் கொட்டம் சுக்கு
நூருக்கிப் பொடிபடுத்தப் புலியாய்ச் சீறி
நுரைகடலைக் கலக்குதற்காய் முன்வந் தார்கள் !
சேற்றுக்குள் அழுந்திச்சாம் ஏழை மக்கள்
சீர்பெறவே சிறைசென்ருர் சிதம்பர ஞர்தாம் !

செத்துத்தான் பிழைத்தார்கள் ஏழை மக்கள் !
செந்தமிழர் சிங்கமெனச் சீறிப் பாய
மெச்சுபுகழ் விடுதலைக்குத் தலைமை தாங்க
மிகவிரும்பி முன்வந்தார் சிதம்பர ஞர்தாம் !
'அச்சமில்லை' அயலவரின் குண்ட டிக்கே
ஆண்மையுடன் எதிர்த்திடுவோம் என்று ரைத்துத்
தத்துகடல் மீதினிலே கப்பல் விட்டுத்
தமிழ்மக்கள் உரிமைதனைக் காக்க வந்தார் !

எல்லையிலாத் துன்பங்கள் இழைத்து வந்தார் ;
ஏனென்று கேட்டாரைச் சிறையில் தள்ளித்
தொல்லைக்குள் ஆழ்த்திடுவார் அந்த நாளில் !
தொல்லுலக மக்களுக்காய்த் தொண்டு செய்ய
நல்லறிஞர் சிதம்பரனார் தென்ன கத்தின்
நாவாயை நடுக்கடலில் செலுத்தி விட்டார்
வல்லடிமை வெள்ளத்தைத் தடுக்க எண்ணி
வழக்கறிஞர் பணிவிட்டு வரிப்புலி ஆனுர் !

கதிரவனை மறைவதில்லை என்று சொல்லிக்
கடுகிவந்து முழக்கமிட்ட ஆதிக்கத் தீயை,
முதிர்ந்துவிட்ட வெங்கொடுமைச் சூட்டை, மாற்ற
முனைத்தெழுந்த இளங்கதிராய்த் தமிழர் நாட்டில்
அதிர்த்துவரும் ஒளிமின்னல் கீற்றாய்த் தோன்றி
ஆதிக்கத் திமிரதனை அடக்கு தற்கே
பதுங்கிநின்று பாய்கின்ற வேங்கை போலப்
பாய்ந்திட்டார் ; பரங்கியர்தம் வீழ்ச்சி காண ! 4

கடல்கடந்து கால்நாட்டி ஆட்சி செய்த
கும்பினியார் கொட்டத்தை அடக்க வென்றே
அடலேறாய்ச் சிதம்பரனார் ஆர்த்தெ ழுந்தார் ;
ஆங்கிலரின் ஆட்சியினால் அல்லற் பட்டுக்
கெடல்கண்டார் ; கேடுநீக்கக் கிளர்ந்தெ ழுந்தார் ;
கிழக்குதித்த செங்கதிராய்க் கிளர்ந்தெ ழுந்து,
சுடர்விட்டார் ; சோம்பேறி மக்கள் தம்மைச்
சுடர்முகத்தைத் தூக்கிநடை போடச் செய்தார் ! 5

ஊமைகளாய்க் குருடர்களாய்ப் போனார் இங்கே !
ஊக்கமெலாம் இழந்துவிட்ட தமிழர் நாட்டில்
ஏமாற்றும் எத்தர்களாம் ஆங்கி லேயர்
எடுபிடியாய் இருந்தபேர்கள் வாழ்ந்தார் இங்கே !
ஏமாளி மக்களுக்காய் எடுத்துச் சொல்லி
எழுச்சியுறச் செய்தவர்தாம் சிதம்பரப் பேரர் !
நாமாள வேண்டுமிந்த நாட்டை என்று
நாவாயை முடுக்கியவர் நற்பேர் காப்போம் ! 6

ஊர்திரண்டு விழாவெடுக்கும் இந்த நாளில்
ஊக்கமிகக் கொண்டுழைப்போம் உறுதி பூண்டு !
சீர்மிகுந்த சிதம்பரனார் செக்கி ழுத்த
சிறப்புரைத்துச் சிந்தனையில் தேக்கி வைப்போம் !
பேர்சிறக்கப் புகழ்நிலைக்கப் புதுமை செய்வோம் !
பெரும்புலவர் சிதம்பரனார் அடிச்சு வட்டில்
ஆர்த்தெழுவோம் ! ஆக்கங்கள் குவியும் தன்னால் !
அணிவகுப்போம் பணிமுடிப்போம் இனிமை பூக்க ! 7

———

# வாராய், சிதம்பரமே! வா

அ. இளம்வழுதி,

*தமிழ்த்துறைத் தலைவர், குருநானக் கல்லூரி, சென்னை.*

(கலிவெண்பா)

ஒப்பரிய தாய்நாட்டின் ஓங்கு புகழ்காத்துச்
செப்பரிய வீரமதைச் செய்த சிதம்பரரின்
நூற்றாண்டைக் கொண்டாடும் நோக்கமுடன் தாயகத்தார்
போற்றி விழாக்கோலம் பூண்டார்கள் ; ஆதலினால்
தூத்துக் குடியிலன்று தோரணங்கள் தொங்கவிட்டு
மூத்தோர் இளையரெல்லாம் முன்வந்து வீதிகளில்
வாழையை நாட்டி வரிசையாய்ப் பந்தலிட்டார் ;
ஆழிசேர் அந்நகரம் ஆர்ப்புடனே அன்றைக்குக்
கோலம் திருவிழாப்போல் கொண்டதுகாண் ; சால்புடைய
சீலம் பொருந்து சிதம்பர னார்சிலையைத்
தூத்துக் குடியின் துறைமுகத் தேநிறுவி
வாழ்த்தி அவர்புகழை வாய்மலர்ந்தார் சான்றோர்கள் ;
கூட்டத்தில் ஆங்கே குழுமிய பல்லோரில்
கேட்டான் அவர்பெருமை கீழ்வளவுப் பாண்டியனும்
வீறுடனே அந்நாளில் வீர சிதம்பரனார்
சீறிப் பரங்கியர்க்குத் தீயாகி நின்றதுவும்,
ஆர்க்குங் கடலிடத்தே ஆங்கிலேயர் தாம்பதற
தேருக்கு நேர்கப்பல் சீர்பெறவே விட்டதுவும்,
தூத்துக் குடியதனில் துன்புற்ற ஏழையர்தம்
மூத்த வறுமை முறிய நெசவாலை
நாட்டி எளியோரின் நண்பனாய் நின்றதுவும்,
சட்டம் படித்துணர்ந்து தாம்பிறந்த நன்னகராம்
ஓட்ட பிடாரத்தே உள்ளூரார் கொண்டாட
ஏழைசொல் அம்பலத் தேறாத காலத்தில்
வாழ்விக்க வந்த வழக்கறிஞ ராயதுவும்,
வெள்ளைத் துரைவிஞ்சின் வீணுரையைத் தம்செவியில்
கொள்ளாமல் பாளைக் கொடுஞ்சிறைக்குச் சென்றதுவும்,
கோவைச் சிறையில் கொடுங்கோல் முறிப்பதற்குச்
சாவைப் புறம்போக்கிச் செக்கிழுத்த சால்பதுவும்,
வையம் வணங்கியே வாழ்த்தும் திருக்குறளை
ஐயமற ஆய்ந்துணர்ந்தே ஆங்கிலத்தி னும்பெயர்த்துப்
பொய்யில் புலவன் புகழைப் பரப்பியதும்

தக்காங்கு சான்றோர்கள் சாற்றினர் ; அன்னவெல்லாம்
பக்குவமாய்க் கேட்டானப் பாண்டியனும் ; அந்நிலையில்
உள்ளத்தில் ஒன்றை உணர்ந்தான் ; அதனைத்தன்
கிள்ளை மொழியாட்குப் போயுரைத்தான் : "அன்பேகேள் ;
வாட்டும் சிறையில் வதிந்தாலும் காலமெல்லாம்
நாட்டுப்பற் றேயன்றி நற்றமிழ்ப் பற்றுமிக்க
வீர சிதம்பரம்போல் வீட்டுக் கொருபிள்ளை
ஊரெல்லாம் தோன்றுவரேல் உண்டோ குறை"யென்றான் ;
ஆங்கதனைக் கேட்ட அவன்மனையாள் கூறலுற்றாள் :
"நல்லதத்தான் ! என்வயிற்றில் நாலைந்து திங்களின்பின்
செல்ல மகன்பிறப்பான் ; சீரோடு தாமவனைச்
செக்கிழுத்த செம்மல் சிதம்பரம்போல் வீரமுடன்
பக்குவமாகப் பயிற்றி வளர்ப்ப மென்றாள் ;"
பாண்டியன் அப்போது பாவையைச் சேர்த்தணைத்து
மூண்ட பெருமகிழ்ச்சி முந்த அவள்வயிற்றைத்
தொட்டுத் தடவியே தோகை முகஞ்சிவக்க
"வாராய் சிதம்பரமே ! வா"வென்றான் ; அவ்வளவில்
நேரே நிமிராமல் நின்று நிலங்கவிழ்ந்து
முன்னே சிவந்தமுகம் இன்னும் சிவந்ததெல்லாம்
என்னே இயம்பிடுவேன் இங்கு !

---

## சிதம்பரப் பேர் மன்னன்

### திருவைகுண்டம் ஆறுமுக தேசிகர்

கல்வியிற் செல்வந்தன்னிற் கருணையிற் புகழ்பெற் றோங்குஞ்
செல்வனுஞ் சிதம்பரப்பேர் மன்னனைச் சென்று கண்டா
லல்லல்செய் வறுமைதானு மகன்றுபோய் நீங்கிற் றன்றே
மல்குதாம் புறுதல்லூச லெனச்சுழல் மடமை நெஞ்சே.

---



# செக்கிழுத்தார் வ. உ. சிதம்பரனுர்

புலவர் குழந்தை

**பல்லவி**

செக்கிழுத்தார் வ. உ. சிதம்பரனுர்—கோவைச்
சிறையில் மாடு போலச்—செக்

**பல்லவி எடுப்பு**

மிக்க அடிமை விலங்கறுத் திந்நாட்டு
மக்கள் விடுதலை பெற்றுநல் வாழ்வுறச்—செக்.

**கண்ணிகள்**

வெள்ளையர் இந்நாட்டை விட்டுக் கப்பலேறி
மேற்குநோக் கியோட—அரசியல்
விடுதலை பெற்றிந்நாட் டுமக்க ளெல்லோரும்
மேம்பட வாழ்வதற்கா—அன்றி
வெள்ளைய ராட்சியே மேலென வேமக்கள்
வெறுக்கும் படியாகத்—தங்கள்
வேட்டைக்கா டாகஇந் நாட்டைக்கொண் டொருசிலர்
மேம்பட வாழ்வதற்கா—செக். 1

உரிமை மறுத்த வெள்ளையரை நாட்டைவிட்
டோடுக கப்பலேறி—என
ஓதுங் குறிப்பி லவர்க்கெதி ராக்கப்பல்
ஓட்டிய குற்றத்திற்கா—அன்றி

---

குறிப்பு : 1. வாழ்வதற்கா - வாழ்வதற்கு ஆ - ஆக. வாழ்வதற்காக வ. உ. சிதம்பரனுர் செக்கிழுத்தார். ஆக என்பது, ஆ எனக் குறைந்தது. வாழ்வதற்காகவா செக்கிழுத்தார்? இல்லை. ஆ - வினவொடு எதிர்மறை. இவ்வாறே ஏனை ஐந்து கண்ணிகட்கும் பொருள் கொள்க.

உரிமை மறுத்த வெள்ளையரை நாட்டைவிட்
டோட்டிய நாட்டுமக்கள்—பிறப்
புரிமை மறுத்தே ஒருசிலர் மன்னர்போல்
உரிமையாய் வாழ்வதற்கா—செக். 2

செந்தமி ழன்னையவ் வாங்கில அடிமைச்
சிறையினின்று மீண்டு—முன்போல்
திசைதொறுந் தன்பே ரிசைபர வச்சீருஞ்
சிறப்புடன் வாழ்வதற்கா—அன்றி
இந்தியிந் நாட்டின் அரசிநான் காணென்
றிறுமாப் புடன்கூற—அவ்
இந்திக் கடிமையாய் எந்தமிழ்த் தாயிருந்
தேவல் புரிவதற்கா—செக். 3

இல்லா ரெவருமிங் கில்லாம லேமக்கள்
எல்லாருஞ் செல்வர்களாய்—நாளைக்
கென்செய்கோம் என்னும் கவலைய தில்லாமல்
இன்புற்று வாழ்வதற்கா—அன்றி
இல்லாரெல் லாரையுஞ் செல்வராக் குகின்றோம்
என்றுநம் நாட்டிலுள்ள—செல்வர்
எல்லாரையு மில்லா ராக்கிநம் நாட்டினை
ஏழைநா டாக்குதற்கா—செக். 4

நாட்டுரி மைப்போருக் கேற்ற வுணர்வினை
நாட்டுமக் கட்கூட்டி—அயல்
நாடரை நாட்டைவிட் டோட்டிநா மேநம்
நாட்டினை யாள்வதற்கா—அன்றி
போட்டிபோட் டுக்கொண்டு புதுப்புதுக் கட்சிகள்
புற்றீசல் போல்தோன்றி—ஒற்றுமை
புறங்கொடுத் தோடநம் நாட்டையுள் நாட்டுப்
போர்க்கள மாக்குதற்கா—செக். 5

சாதி சமயச் சழக்கினைப் போக்கித்
தாழ்வுயர் வென்பதின்றி எல்லோரும்
சரிநிக ராக இழந்த உரிமை
தாமுற வாழ்வதற்கா—அன்றி
சாதி சமயச் சழக்கொ டரசியல்
சாதியொன் றுதோன்றி—இவர்
தம்மவர் அல்ல ரிவரென ஒரினத்
தன்னைப் பிரிப்பதற்கா—செக். 6

# வ. உ. சி. பிள்ளை

## கவிஞரேறு வாணிதாசன்

1. வான்தழுவும் பனிபடர்ந்த வெள்ளிமலை
வளர்ந்துநீண்டு வடக்கில் நிற்கும்!
கூன்தழுவும் நீளாறு வற்றாது
குளிர்மைதேக்கிக் குதித்துப் பாயும்
மான்தழுவும் கன்னியர்கள் மறத்தோளர்
வாழ்ந்திருந்த வளமார் எங்கள்
தேன்தழுவும் தாய்நாட்டை அயல்நாட்டார்
சூழ்ச்சியினால் சிதைத்தார் முன்னாள்.

2. பிள்ளையென்றால் உலகத்தில் தாய்வயிற்றை
விட்டகன்று பிறப்போர் எல்லாம்
பிள்ளைகளா? வ. உ. சி. ஒருவனை நான்
என்றென்றும் பிள்ளை என்பேன்!
கள்ளத்தை அறியாதான்! பன்மொழியைக்
கற்றுணர்ந்தோன்! கடல்போல் வற்றா
உள்ளத்தில் தாய்நாட்டின் பற்றொன்றே
என்றென்றும் ஊறிப் போனோன்!

3. அல்லுடைத்த செஞ்சுடர்போல் இந்தியத்தாய்
அடிமைநிலை அற்றுப் போக
சொல்லுடைத்து வழக்காடித் துயர்கண்ட
இடமெல்லாம் துணையாய் நின்று
நெல்லுடைத்த அரிசியென உண்மைநெறி
பன்னாளும் நிலைக்கச் செய்தோன்
கல்லுடைத்தான் சிறையினிலே தாய்நாட்டின்
கால்விலங்கைக் களைவ தற்கே!

4. மனைதுறந்து வளமைபல வழங்குகின்ற
செயல்துறந்து மனைவி மக்கள்
துணைதுறந்து துயர்துறந்து தோள்கொடுத்து
நிற்கின்ற சுற்றத் தோர்கள்
இணைதுறந்து தனைஈன்ற தாயகத்தின்
விடுதலையின் ஏற்றத் திற்கே
தனைதுறந்து கலம்விட்டோன் செக்கிழுத்தோன்
சிதம்பரனார் தமிழ்மே லோனே!

5. அடலேறு சிதம்பரனர் அவனன்றே
இந்நாளில் ஆன்றோர் போற்றும்
உடலுயிரில் என்றென்றும் ஊறிப் போன
தாயகத்தின் உயர்ந்த பிள்ளை !
கடலிடையில் கலம்விட்டான் ; கடுஞ்சிறையும்
கசையடியும் கண்டான் ; செக்கை
நடமாடு மாட்டைப்போல் இழுத்திழுத்து
நலிந்தான் ; தாய் நாட்டிற் கென்றே !

6. முன்னளில் தாம்பிறந்த தாய்நாட்டின்
கால்விலங்கை முறிப்பதற்கே
தென்னட்டுத் திலகராய்ச் சிதம்பரனர்
வ. உ. சி. திகழ்ந்தார் ; அன்னேர்
முன்பாட்டின் நல்விளைவே நாம்பெற்ற
விடுதலையாம் ! மூத்தோன் வாழ்த்திப்
பொன்போலக் காத்திடுவோம் ; புதுப்பொலிவில்
வாழ்ந்திடுவோம் ! புகழ்சேர்ப் போமே !!

---

## தனிமுதல் தமிழ எம்மான்

சேலம் வீரராகவ ஐயங்கார்

பெற்றநந் தாயும் பிறந்தபொன் னடும்
பெட்புறு தாய்மொழி மூன்றும்
நற்றவ வானில் நனிசிறந் தனவா
மௌனமன நன்குறத் தேர்ந்து
கற்றவ னகங் கேசரி திலகன்
களிக்குமெய்த் துணைவனய்த் துலங்கி
உற்றதன் னடைங் குய்வகை தேர்ந்தே
ஒழிவிலா துழைத்துயிர் சிறந்தோய்.

பண்டைநந் தமிழர் பழுதறப் புரிந்த
விரிகடல் செல்வக்க வணிகம்
எண்டிசை யோரு மேங்கிடப் புரிந்த
தனிமுதற் றமிழஎம் மானே
உண்டிடுக் கண்ணென் றுளதெனக் கண்ட
சிறுமை யோர் கரவதனலே
கொண்டதை யிழந்தும் கொண்டதின் வீரம்
குறைபடா துயர்ந்தது வியப்பே.

---

# உலக மாகவிஞர் வீர சிதம்பரனுர்

(புலவர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை)

உலகப் பேரரசாகிய ஆங்கிலப் பேரரசை எதிர்த்து வீரத்தோடு போரிட்ட வ. உ. சிதம்பரம் பிள்ளை வீர சிதம்பரனுர் என்று புகழ்மாலை சூட்டப் பெறுகிருர். சிதம்பரம் பிள்ளையும் தம்மைத் ''தேசபக்தர்'' என்றுதான் அழைத்துக் கொண்டார்.

உலக மொழிகள் ஒவ்வொன்றிலும் மாகவிஞர் பலர் இருந்திருக்கிருர்கள். நம் வீர சிதம்பரனுர் அத்தகைய உலக மாகவிஞர்களில் உலகத் தாய் மொழியாம் தமிழ்மொழியில் ஒரு மாகவிஞர். இந்த உண்மையைத் தமிழ்ப் பெரும் புலவர்களிலும் பலர் நன்ருக அறியாதுளர்.

**இவருடைய திருக்குறள் விருத்தியுரை**

இவர் திருக்குறளுக்கு விருத்தியுரை எழுதி அச்சிட்டிருக்கிருர். அச்சாகும்போது நான் பிழை திருத்தித் தந்தேன். அப்போது இவர் எனக்கு எழுதிய கடிதத்தின் சரியான படி பின் வருவது:

தூத்துக்குடி
5—4—1936

அன்பார்ந்த தம்பியவர்களே,

தாங்கள் சங்கரன் கோவிலிலிருந்து எழுதியனுப்பிய கடிதத்தால், தங்களுக்கு அருமை மகன் பிறந்திருப்பதும், அவனுக்கு நம் தந்தையவர்கள் பெயரிட்டிருப்பதும் தெரிந்து பெரிதும் மகிழ்ந்தோம் நானும் தங்கள் மதினியும்.

நான்குநேரியிலிருந்து திருத்தப்பட்ட புருபுடன் குறள் சம்பந்தமாகச் சில குறிப்புகளும் விளக்கங்களும் எழுதியனுப்பியிருந்ததைப் பார்த்து அன்று முதல் இன்று வரையில் பேரானந்தம் அடைகின்றேன். ''தம்பியுடையான் படைக்கஞ்சான்'' என்னும் பழமொழியைப் பலமுறை கேட்டுள்ள நான் ''அறிவுடைய தம்பியுடையான் யார்க்கும் அஞ்சான்'' என்று உணர்கின்றேன். இனித் திருக்குறளைப் பற்றி எப்புலவரும்

எவ்வகையான குற்றமும் சொல்ல முடியாது என்று உணர்கின்றேன். வெறும் எழுத்துப் பிழை, அடையாளப் பிழைகளை மாத்திரம் திருத்துவதில் எனக்குத் திருத்தியில்லை. தாங்கள் எடுத்துக் காட்டிய பிழைகளைத் திருத்துவது தான் எனக்குத் திருத்தி. தாங்கள் குறிப்பிட்ட படியே முந்திய பாரத்தில் எல்லாத் திருத்தங்களும் செய்துள்ளேன். தங்கள் பெயரைத் தமிழுலகம் போற்றும் படியாகத் தங்கள் நன்றியை எடுத்து எழுதுவேன்.

தங்களன்புள்ள
வ. உ. சிதம்பரம் பிள்ளை

இவருடைய வீரப் பாடல்களில் ஒன்று பின் வருமாறு:

"என் மனமும் என் உடம்பும் என் சுகமும் என் அறமும்
என் மனையும் என் மகவும் என் பொருளும்—என் மதியும்
குன்றிடினும் யான் குன்றேன் கூற்றுவனே வந்தாலும்
வென்றிடுவேன் காலால் மிதித்து"

உலகப் பெருங்கவிஞர்

வீர சிதம்பரனார் புகழ் உலகமெங்கும் ஓங்கி விளங்குக.

———

## தூத்துக்குடியில் வ. உ. சி. நூற்றாண்டு விழா

தமிழக அரசியல்வானில் விடி வெள்ளியாகத் திகழ்ந்த செக்கிழுத்த செம்மல் சிதம்பரனாரின் நூற்றாண்டு விழா அவர் வாழ்ந்து மறைந்த தூத்துக்குடியில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. நெல்லை மாவட்டமே திரண்டு எழுந்தது போன்ற சிறப்புடன் நடைபெற்ற இவ்விழாவின் தலையாய சிறப்பு இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையாரே இவ்விழாவில் கலந்துகொண்டு விடுதலைக்குழைத்த தமிழ் மறவரை வாழ்த்தியதேயாகும். சிதம்பரனாரின் திருவுருவச் சிலை நூற்றாண்டுவிழா நினைவாகப் புதிதாக உருப்பெற்றுவரும் தூத்துக்குடித் துறைமுகத்தின் வாயிலில் அமைக்கப்பெற்றுப் பிரதமரால் திறந்துவைக்கப்பெற்றது. வ. உ. சி.யின் உருவம் பொறித்த அஞ்சல்தலையும் பிரதமரால் வெளியிடப்பெற்றது.

சிலை திறப்பு விழாவுக்குத் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர், கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமைதாங்கிச்

சிதம்பரப் பெரியாரின் சிறப்புக்களை எடுத்துக் கூறினார். ''வெள்ளையனை எதிர்த்து முதல் முதலாக ஒரு தமிழ்ப் பெருமகன் கப்பலோட்டிக் காட்ட முடியுமென்று நெஞ்சுயர்த்தி, அதற்கென ஒரு நிறுவனத்தை அமைத்துக் கப்பலோட்டிக் காட்டியவர் சிதம்பரனார். இந்த நாட்டின் விடுதலைக்காகக் கோவைச் சிறைச்சாலையிலே செக்கிழுத்து—கல்லுடைத்துத் துன்ப முற்றார் வ. உ. சி.

இந்த நேரத்தில் சென்னையிலுள்ள சார்ச்சுடவுன் சிதம்பரனார் நகராக மாறும் என்கின்ற அறிவிப்பை மகிழ்ச்சி யோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வ. உ. சியினுடைய பெயர் என்றும் நின்று நிலவக்கூடிய பெயர் வ. உ. சி.—வ-வழக்கறிஞர்; உ-உரிமைக்காக வாதாடிய வழக்கறிஞர், சி - உரிமைக்காக வாதாடி—சிறைபுகுந்த வழக்கறிஞர்.''

வ. உ. சியின் சிலையைத் திறந்துவைத்த இந்தியப் பிரதமர் மாண்புமிகு இந்திராகாந்தி அம்மையார் வ. உ. சியின் நாட்டுத் தொண்டையும் தமிழ்நாடும், மற்ற தென் மாநிலங் களும் நாட்டு விடுதலைக்கு ஆற்றிய பாங்கையும் பாராட்டிப் பேசினார். தூத்துக்குடித் துறைமுகத்திற்கு வ. உ. சி. பெயர் வைக்கப்படும் என்றார்.

வ. உ. சி. கொண்டிருந்த தேசிய உணர்வை அவர் குறிப்பிட்டார். வெளிநாட்டுச் சரக்குகளின் சந்தைக் கடையாக இந்தியா இருப்பதை வ. உ. சி. போன்றவர்களால் பொறுக்க முடியவில்லை. தொழில் துறையிலும் பொருளியல் துறையிலும் தன்னிறைவுடைய ஓர் இந்தியாவை உருவாக்க வேண்டு மென்று அவர்கள் கனவு கண்டார்கள்.

அந்த உணர்வுடன்தான் வ. உ. சி. கப்பல் ஓட்டத் தொடங்கினார்கள். இன்று இந்தியா தனக்கு உரிமையாகப் பல கப்பல்களைப் பெற்றிருப்பதை வ. உ. சி. உயிரோடிருந் திருந்தால் கண்டு மகிழ்ச்சியடைந்திருப்பார் என்று பிரதமர் பேசினார்.

பின்னர், தமிழக ஆளுநர் மாண்பமை கே. கே. ஷா அவர்கள் வ. உ. சி. வாழ்க்கையையும் அவர் செய்த தியாகங் களையும் எடுத்துக்கூறி வ. உ. சி. நூற்றாண்டு விழா மலரை வெளியிட்டார்.

———

## விடுதலைப் போரில் வ. உ. சியின் தமிழ்*

[சிலம்புச் செல்வர் ம. பொ. சி.]

திலகர் சகாப்தத்திலே, தமிழகத்தின் தளபதியாக தென்னாட்டுத் திலகராக விளங்கிய பெருமை கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனாருக்கே உரிமை...வ. உ. சி. பெரியார் தம் தாய் மொழிக்கு ஆற்றியுள்ள தொண்டினைத் தமிழர் மறந்தாலும் உயிருள்ள தமிழ் மறவாது.

திலகர் சகாப்தத்திலே தமிழகத்தில் வாழ்ந்த பெருந் தலைவர்களிலே தமிழ் மொழிக்குத் தொண்டாற்றியவர்களின் பெயர்களைப் பட்டியல் தொகுத்தால், வ. உ. சிதம்பரனார் பெயர் அதிலே சிறப்பிடம் பெறும்.

சுருங்கச் சொன்னால், தமிழ்—ஆங்கிலம் ஆகிய இரு மொழிப் புலமையும்; சங்க இலக்கியங்கள், ஐம்பெருங் காப்பியங்கள், புராண—இதிகாசங்கள், நீதி நூல்கள், வேதாந்த நூல்கள் ஆகியவற்றில் ஞானமும் பெற்று பெருஞ்சிறப்புடன் விளங்கிய நிலையில்தான் வ. உ. சி. நாற்பதாண்டு சிறைத் தண்டனை பெற்றார். விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்ற பெருந் தலைவர்களிலே வேறெவரும் இத் தகுதிகளைப் பெற்றிருக்கவில்லை. திலகர் சகாப்தத்திலும் சரி; காந்தி சகாப்தத்திலுஞ் சரி; விடுதலைப் போரில் கலந்து சிறைசெல்லத் தமிழ்ப் புலவர்களிலே அதிகம் பேர் முன்வரவில்லை. ஒரு சிலரே அந்தப் பேற்றினைத் தமிழ் மொழிக்குத் தேடித் தந்தனர். அவர்களிலே முதல்வர் வ. உ. சிதம்பரனார்.

---

## தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி வெள்ளிவிழா

இக் கல்லூரியை நிறுவியவர் தமிழ்நாடு இந்திரா காங்கிரசுக் கட்சித் தலைவர் திருவாளர் ஏ. பி. சி. வீரபாகு அவர்களாவர். இவர்கள் வ. உ. சி. அவர்களுக்கு முதன் முதல் செய்த ஒப்பற்ற விழாவுக் குறியதும். தூத்துக்குடியில் கடற்றுறைக் கல்விக்கென ஒரு பல்கலைக்கழகம் வ. உ. சி. பெயரால் நிறுவுதல் வேண்டுமென்ற இவர்களுடைய சீரிய கருத்து நிறைவேறத் திருவருளை வேண்டி இவர்களை உளமார வாழ்த்துவோம்.

* விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு பக். 97 - 99.

## உயர்திரு நாவலர்
## ச. சோமசுந்தர பாரதியாரவர்கட்கு
## 12-9-1935இல் எழுதிய கடிதம்

அன்பார்ந்த நண்பரவர்களே !

தங்கள் "புதுமனை புகு விழா அழைப்புக்கள் வரப் பெற்றேன். விழாவின் பிற்பகுதிக்கு நான் வந்து சேருவேன். ஒவ்வொரு காலையிலும் மணி 7 முதல் 9 வரையிலும் இவ்விடம் கீழவூர் மகா-ா-ா-ஸ்ரீ அ. செ. சு. கந்தசுவாமி ரெட்டியாரவர்கள் வீட்டில் மதுரை ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடத்தின் தற்கால அதிபதி ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள் துறவிகளும் இல்லாரு மாகிய 25 பேர்களுக்கு 'ஞானவாசிட்டம்' சொல்லி வருகிறார்கள். அவ்விருபத்தைந்து பேர்களில் நான் ஒருவன்.

ஆதலால் விழாவின் முற்பகுதிக்கு நான் வர இயலாதவனா யிருக்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் அருளால் விழா சிறப்பாக நடைபெறும். நான் அங்கு வந்த பின்னர் நேரிலும் தங்களுக்கு என் வாழ்த்தைச் சமர்ப்பிப்பேன். நமது அருமை நண்பர் "பண்டிதமணி" அவர்களுக்கும் ஏனைய புலவர் களுக்கும் நான் விழாத் தினம் மாலை 4 மணிக்கு முன்னர் அங்கு அவர்களைத் தரிசிப்பேன் என்று சொல்லுக.

தங்கள் அருமை மகளும், தேசபக்த சிரோன்மணியாகிய திரு L. கிருஷ்ணசாமி பாரதியாரவர்கள் மனைவியுமாகிய ஸ்ரீமதி இலக்குமி அம்மாளை இங்குக் கண்டேன். க்ஷேமம் விசாரித்தேன், என் மனைவி மக்களை அறிமுகம் செய்து வைத்தேன். அவ்விரு வரையும் விழாத் தினத்தில் அங்குக் காணும் பாக்கியம் பெறுவே னென்று நம்புகிறேன். கடவுள் துணை.

அன்புள்ள

(ஒப்பம்) வ. உ. சிதம்பரம்

**பின் குறிப்பு :** சிவஞான போதத்திற்கு ஓர் உரை எழுதித் "தினமணி" வருஷ அனுபந்தத்திற்கு அனுப்பியுள்ளேன். ஸ்ரீ சிவஞான சுவாமிகள் உரையைக் கண்டித்தால், சைவர் பலர் மனம் நோகுமென்று கருதி அது செய்யாது விடுத் துள்ளேன். என் உரை சுவாமிகள் உரைக்குப் பல இடங்களில் வேறுபட்டும் மாறுபட்டுமுள்ளது. இதற்குஞ் சைவர் குழாம் நிந்தித்தல் கூடும். அந்நிந்தனையை வந்தனையாகவே கொள் ளும் மனநிலையுடையேன் யான் தற்காலம். கடவுள் துணை

வ. உ. சி.

# வ. உ. சி. அவர்கள் கடிதம்

(வ. சுப்பையா)

திருநெல்வேலி திருவாளர் என். இராமலிங்கம் பிள்ளையவர்கள் தமது இல்லத்தில் திருக்கோயில் கொண்டிருக்கும் சித்தி விநாயகர் பெருமானுக்கு 31-1-1933இல் நடைபெற்ற ஆண்டு நீர் ஆட்டு விழாவிலே பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமையில் தூத்துக்குடி வழக்கறிஞர் திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் ''திருவள்ளுவர்—திருக்குறள்'' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். அவ்விழாவில் யானும் என் அருமைத் தமையனார் திரு வ. திருவரங்கனாரும் கலந்து கொண்டோம். தமிழிசை வாணர் சா. சுந்தர ஓதுவாமூர்த்தியவர்கள் இன்னிசைக் கருவிகளுடன் திருமுறை ஓதினார்கள்.

உயர்திரு வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் தூத்துக்குடியிலிருந்து 14-1-1933இல் திரு என். இராமலிங்கம் பிள்ளையவர்கட்கு எழுதிய கடிதம் வருமாறு :

அன்பார்ந்த சகோதரரவர்களே,

தாங்கள் 9-1-33இல் எழுதியனுப்பிய இங்கிலீஷ் கடிதம் வரப்பெற்றேன். எனது விருத்தாப்பியத்தாலும், வேலை மிகுதியாலும் நான் அயல் இடங்களுக்கு உபந்நியாசம் செய்யப் போவதை நிறுத்திவிட்டேன். ஆயினும் தாங்களும் நமது அருமை நண்பர்* K. S. பிள்ளையவர்களும் நான் 31—1—33ல் அவ்விடம் வந்து ஓர் உபந்நியாசம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறபடியால், நான் தங்கள் விருப்பப்படி செய்யச் சித்தமாயிருக்கிறேன். எனது உபந்நியாச விஷயம் ''திருவள்ளுவர் திருக்குறள்'' என்று குறித்துக்கொள்ளுங்கள்.

நமது அருமை நண்பர் பண்டிதமணி திரு மு. கதிரேசன் செட்டியாரவர்களுக்கு நான் 31—1—33 மாலையில் அங்கு அவர்கள் தலைமையின்கீழ் 'திருவள்ளுவர் திருக்குறள்' என்னும் பொருள்பற்றிப் பேச ஒப்புக்கொண்டிருக்கிறதாகவும், அவர்கள் தலைமை வகிக்க வரமுடியவில்லை என்று தந்தி கொடுப்பதாயிருந்தால் அவ்வாறே நானும் தந்தி கொடுத்து விடுவேன் என்று தங்களுக்கு எழுதியிருப்பதாகவுந் தெரிவியுங்கள்.

அன்புள்ள

(ஒப்பம்) வ. உ. சிதம்பரம் பிள்ளை

---

# வ. உ. சியின் திருக்குறள் பரப்பும் தொண்டு

[திரு. தி. கா. அறம்வளர்த்தநாதன்]

ஓட்டப்பிடாரம் ஒரு சிறிய கிராமம். அக்காலத்தில் தாலுகா அலுவலகம் கோவில்பட்டிக்கு மாற்றப்பட்டிருந்தது. ஒரு நடு நிலைப்பள்ளிதான் இருந்து வந்தது. ஆகையால் நாங்கள் ஏறக்குறைய 30 பேர்கள்தாம் குறள் பாடவகுப்பில் படித்து வந்தோம். எங்கள் ஆசிரியர் திரு. பிள்ளையவர்கள், மிக்க ஆர்வத்தோடு பாடம் நடத்துவார்கள். பெரும்பாலும் 'மணக் குடவர்' உரையைத் தழுவியே அவர்கள் விளக்கம் இருக்கும். பரிமேலழகர் சிறந்த உரையிலும் பல இடங்களில் மாறுபட்ட கருத்தும், விளக்கங்களும் கொடுப்பார்கள். தமது ஆராய்ச் சியின் பயனால் சொந்த விளக்கங்களும் கொடுப்பார்கள். அவர்கள் பாடவகுப்பில் அநேக ஐயங்களும் விளக்கங் களும், கேட்பது நான்தான். அதனால், அநேக குறள்கள் ஒருநாளில் நடக்காமலும் போகும். ஆனால், நான் கேட்கும் பல ஐயங்களையும், மிக்க அன்புடன் வரவேற்பார்கள். சிறிதளவும் சினமோ, வெறுப்போ கொள்ளாமல் ஊக்கத் துடன் பதில் சொல்லுவார்கள். அன்று போதுமானபடி விளக்கம் கொடுக்கமுடியாத குறள்களுக்கு, வீட்டில் சென்று ஆராய்ந்து, மறு பாட வகுப்புகளில் விளக்கம் கொடுப்பார்கள். ஆகவே நான் ஒருநாள் குறள் வகுப்புக்குச் செல்லமுடியாது போனால் பாடவகுப்பு ஊக்கமாய் இல்லையென்றும், தமக்கே பாடவகுப்பு நடத்த ஓடவில்லையென்றும் சொல்லுவார்கள். ஒரு சமயம் ''வாழ்க்கைத் துணை நலம்'' என்ற அதிகாரத்தில்.

> ''பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
> புத்தேளிர் வாழு முலகு''

என்ற குறளுக்கு அவர்கள் ஒரு பாடபேதம் சொன்னார்கள். ''பெறிற்பெறுவர்'' என்பது ''பேணிற் பெறுவர்'' என்று பாடமாய் இருந்திருக்கலாம். ஓலைச்சுவடியில் இருந்து மாற்றி எழுதும்போது ''பேணிற்'' என்ற வார்த்தை ''பெறிற்'' என்று எழுதப்பட்டிருக்கலாம் என்றும், பேணில் என்ற பாடத்தை வைத்துப் படித்தால், பொருள் மிக எளிதாய் விளங்கும் என்றும் உரையாசிரியர் ''பெறிற் பெறுவர்'' என்ற வார்த்தையை வைத்துக்கொண்டு சுற்றிவைத்துப் பொருள் சொல்லுகிறார்கள் என்றும் சொன்னார்கள். இம்மாதிரியாக, மிகத்துணிந்து சில குறள்களுக்குப் பாடபேதம் சொல்லுவார்கள். அவைகளைப் பண்டிதர்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், சில பாடபேதங்கள் தமது அறிவுக்கு ஏற்றுக் கொள்ளக்கூடியன வாகவே இருந்தன. இதேமாதிரியாக, குறளுக்கு விளக்கம்

சொல்லுவதிலும் துணிவாக, பரிமேலழகர் உரைக்கும் மாறுபட்ட சில கருத்துக்களைச் சொல்லிக்காட்டுவார்கள். அவைகளில் சில, அப்பொழுது மிகப் பழக்கத்தில் இருந்த, பரிமேலழகர் உரைக்கு மாறுபட்டதாக இருந்த போதிலும் பின்வந்த உரையாசிரியர்கள் திரு. பிள்ளையவர்களுடைய கருத்தை ஒட்டியே எழுதியுள்ளார்கள்.

(ஏ - டு) புகழ் என்ற அதிகாரத்தில் வேது பாடலை

> "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
> தோன்றலின் தோன்றாமை நன்று."

இதற்கு "ஒரு மனிதர் உலகத்தில் பிறந்தால், புகழோடு தோன்றவேண்டும். இல்லையெனில் பிறவாமல் இருப்பதே நன்று" என்று சாதாரணமாகச் சொல்லப்படுகிறது. ஆனால், திரு. பிள்ளையவர்கள் மனிதன் பிறக்கும்போதே புகழோடு பிறப்பது, அவன் கையில் இல்லை. அந்தப் பொருள் அவ்வளவு பொருந்தாது. யாராவது ஒரு மனிதர் தம் இச்சையாக ஒரு காரியத்திலோ, பொதுப்பணியிலோ, ஒரு வியாபாரத்திலோ சம்பந்தப்பட்டு முன்வருவாரானால் அவர் அத்தொழில்களைத் தமக்குப் புகழ்வரும்படியாகப் பணியாற்றவேண்டுமேயன்றித் தம் தொழிலுக்குப் பங்கம் ஏற்படுமானல் அவர் அத்தொழில்களில் ஈடுபடாமல் இருப்பதே நன்மையென்று சொன்னார்கள். ஐம்பது ஆண்டுகளுக்குமுன்பே இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். பின் வந்த தற்காலப் பெரிய உரையாசிரியர்கள் இக்கருத்துக்கு இணங்கவே உரைசெய்துள்ளார்கள்.

மேலும் ஒருநாள் பொருட்பாலில் மடியின்மை என்ற அதிகாரத்தில் முதல் பாட்டாகிய,

> "குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
> மாசூர மாய்ந்து கெடும்"

என்ற குறளுக்கு விவரமாய் நான் அவர்களிடம் விளக்கம் கேட்டேன். புத்தகத்தில் உள்ள உரை போதிய விளக்கம் தருவதாக இல்லை. ஆகவே திரு. பிள்ளையவர்கள் ஒருபடியாக விளக்கம் தரலானார். ஆயினும் அஃது எனக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவர்களும் அதை உணரலானார்கள். அதைச் சிந்தித்துக்கொண்டு இருந்தார்கள். ஒருநாள் அவர்கள் திருநெல்வேலியைச் சேர்ந்த வண்ணார்பேட்டையில் தம் நெருங்கிய நண்பர் ரசிகமணி திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் வீட்டில் இரவு தங்கியிருந்தார்கள். அப்போது இரவில் சுமார் 1½ மணிக்கு அக் குறளுக்குத் தெளிவான விளக்கம் தெரிந்ததாம். உடனே மகிழ்ச்சியுடன் எழுந்து தூங்கிக் கொண்டிருந்த திரு. டி. கே. சி. அவர்களைத் தட்டி எழுப்பி, 'ஒட்டப்பிடாரம் உதவிப் பதிவாளர், மாப்பிள்ளை திரு.

அறம்வளர்த்தநாதபிள்ளை அவர்கள் இக்குறளுக்கு விளக்கம் கேட்டார்கள். எனக்கு அவர்களுக்குத் திருப்தியாகப் பதில் கூற முடியவில்லை. இப்போது மிகத் தெளிவான விளக்கம் தெரியலானேன்' என்று மகிழ்ச்சியோடு சொல்லிவிட்டு, மறுநாள் காலையில் எனக்கு அங்கிருந்து விளக்கத்தையும், நடந்த நிகழ்ச்சியையும் தெளிவாக எழுதினார்கள். ஓர் எண்ணெய்விளக்கு எரியும்போது கரண்தட்டினால் விளக்கு அணைந்துவிடும். அதே மாதிரி ஒரு குடித்தனத்திற்கு மடி (சோம்பல்) யென்ற கரண் வந்தால் அக்குடி கெட்டுவிடும் என்ற முறையில் அவர்கள் விளக்கம் இருந்தது. பல ஆண்டுகளாகக் குறள் ஆராய்ச்சி செய்த பெரியார், சிறியனாகிய குறள் கற்கும் தான் கேட்ட ஐயத்திற்கு அதையே நினைத்து நினைத்துத் தூக்கத்தில் இரவு 1½ மணிக்கு, தாம் சாதாரண விளக்கம் காணவும், அதைக் காலைவரை பொறுத்திராமல், மற்றொரு புலவர் சிகாமணியாகிய திரு. டி. கே. சி. அவர்களைத் தட்டி எழுப்பிச் சொல்லவும், மறுநாள் காலையில் அதை விபரமாக எனக்கு எழுதியிருந்தது, அவர்கள் ஆராய்ச்சியில் எவ்வளவு ஈடுபட்டிருந்தார்கள் என்பதும் பிறர்க்கு எவ்வாறு விளக்கம் கொடுக்க வேண்டும் என்ற ஒரு பரிவும், ஆர்வமும் உள்ளவர்கள் என்பதும் இச்சிறிய நிகழ்ச்சியால் நன்கு விளங்குகின்றன.

---

## சென்னைத் திருமயிலையில் வ. உ. சி. நூற்றாண்டு விழா

*தமிழ்நாட்டு நல்வழி நிலையத்தின் சார்பில் சென்னைத் திருமயிலையில் 5-9-72இல், தமிழ் மாவீரர் வ. உ. சிதம்பரனார் அவர்களின் நூற்றாண்டு விழா, பேராசிரியர் டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் தலைமையில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.*

*அன்று காலை நாதசுர இசை அரங்கும் பின்னர் கோத்தமங்கலம் சுப்பு அவர்கள் தலைமையில் கவியரங்கும் நடைபெற்றன. அடுத்து இறை வணக்கப் பாடல் பாடப்பட்டபின், தமிழ்நாட்டு நல்வழி நிலையத் தலைவர் திரு. நெல்லை இராசானந்தம் அவர்கள் வரவேற்புரை வழங்க மாண்புமிகு டாக்டர் நாவலர், மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் ஆகிய தமிழக அமைச்சர்களும், சிலம்புச் செல்வர் ம. பொ. சி, அவர்களும் மற்றும் பேராசிரியர்கள், அறிஞர் பெருமக்கள் ஆகியோரும் பங்கேற்று வ. உ. சி. அவர்களின் மாண்பு குறித்து அரிய சொற்பொழிவாற்றினர்.*

*25 ஆண்டுகளாகத் தமிழ் மொழிக்கும் நாட்டுக்கும் நல்வழிகாட்டும் வண்ணம் தொண்டாற்றி வரும் நெல்லை இராசானந்தம் அவர்கட்குத் தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். கவிஞர் வெற்றி யழகன் பாமாலை சூட்டிச் சிறப்பித்தார்.*


*இவ்விழாவில் குழந்தைகள் நிகழ்ச்சி, மாணவர் சிறப்புரை, விகடம் ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றமை குறிப்பிடத் தக்கது. மாலை 6 மணி முதல் 8 மணிவரை டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் தலைமையில் அரியதொரு கருத்தரங்கு நடைபெற்றது. இங்ஙனம் நாள் முழுதும் நடைபெற்ற இவ்விழா இரவு 9 மணி யளவில் சிறப்பாக முடிவுற்றது.*

---

## சென்னைத் திருமயிலையில் 5-9-72 இல் நடைபெற்ற வ. உ. சி. நூற்றாண்டு விழா



மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்
அவர்கள் உரையாற்றுகிறார்.



திரு. இராசானந்தம் அவர்கட்கு நாவலர் அவர்கள்
பொன்னாடை போர்த்திச் சிறப்பிக்கிறார்.

# வ. உ. சிதம்பரம்பிள்ளை
## காலக்கணக்கு

1872 செப். 5 பிறப்பு; பெற்றோர்: உலகநாதபிள்ளை—பரமாயி அம்மையார். ஊர்: ஒட்டப்பிடாரம்; திருநெல்வேலி மாவட்டம்.

1891 தூத்துக்குடி புனித சவேரியர் உயர்பள்ளி – மெட்ரி குலேசன் தேர்வு.

1894 வ. உ. சி. — முதல் மனைவியார் வள்ளியம்மை திருமணம்.

,, திருச்சி, சட்டக்கல்வி தேர்வு. ஒட்டப்பிடாரத்தில் வழக்குரைஞர் பணி தொடக்கம்.

1900 தூத்துக்குடிக்கு மாற்றம்.

1901 மனைவி வள்ளியம்மையார் மறைவு.

1906 அக். 16 தூத்துக்குடியில் 'சுதேசிக் கப்பல் கம்பெனி' பதிவு.

,, சென்னையில் பாரதியாருடன் சேர்ந்து 'சென்னை மக்கள் சங்கம்' அமைத்தல்.

,, திசம்பர் கல்கத்தா மாநகரக் காங்கிரசுக் கூட்டத்தில் கலந்து கொள்ளல். பம்பாய்க்குக் கப்பல் வாங்குதற்குச் செல்லல்.

1907 மே பம்பாயிலுருந்து தூத்துக்குடி திரும்புதல்.

,, சூரத் காங்கிரசில் கலந்து கொள்ளுதல்.

1908 'நெல்லை தேசாபிமான சங்கம்' தொடக்கம்.

'' மார்ச் 9 நெல்லையில் பிபின சந்திர பாலர் விடுதலை விழாவில் சிவாவுடன் கலந்து கொள்ளுதல்.

,, மார்ச் 12 வ. உ. சி.—சிவா கைது. அரசுக்கெதிராக மக்களைத் தூண்டி விட்டதாகக் குற்றம் சாற்றப் பெறுதல்.

,, மார்ச் 13 நெல்லைக் கலகம்.

1908 மார்ச் 28 வழக்கு விசாரணை தொடக்கம்.

,, சூலை 7 நடுவர் பின்கே தீர்ப்பு—வ. உ. சிக்கு 40 ஆண்டுகள் தீவாந்தரத் தண்டனை.

,, சூலை 9 கோவைச் சிறைக்கு மாற்றம்.

,, அக். 13 சென்னை உயர்நீதி மன்றத்தில் வ. உ. சியின் மேன்முறையீடு.

,, நவ.4 நடுவர்கள் மன்ரோ, அர்னால்டு தீர்ப்பு · ஆறாண்டு களாகச் சிறைத்தண்டனை குறைப்பு.

1911 கண்ணனூர்ச் சிறைக்கு மாற்றம்—தத்துவ அறிஞர் சேம்சு ஆலன் நூல்களை மொழி பெயர்த்தல்.

1912 திசம்பர்—வ. உ. சி. விடுதலை.

1913 குடும்பத்தாருடன் சென்னை யடைதல்.

1914 'அகமே புறம்' 'மெய்யறம்' நூல்கள் வெளியீடு.

1915 'மெய்யறிவு' 'பாடற்றிரட்டு' 'வள்ளியம்மை சரித்திரம்'— நூல்கள் வெளியீடு.

1917 குறள் மணக்குடவர் உரை—இன்னிலை விருத்தி உரை பதிப்பு.

1920 கல்கத்தா காங்கிரசில் கலந்து கொள்ளுதல் (கொள்கை மாறுபாடு காரணமாகக் காங்கிரசிலிருந்து விலகல்).

1924 வழக்குரைஞர் உரிமையைப் பெற்றுக் கோவில்பட்டிக்குச் செல்லல்.

1934 'திருக்குறள் விருத்தியுரை' திருச்செந்தூரில் அரங் கேற்றம்.

மீண்டும் தூத்துக்குடியில் குடியேற்றம்.

1936 நவ. 18 பேரா இயற்கை.

———

## மறைமலையடிகள் நூல்நிலையம்
## 14 ஆம் ஆண்டு நிறைவு

மறைந்த தமிழ்ப் பேரறிஞர் மறைமலையடிகளார் பெயரால் சென்னை, இலிங்கிச் செட்டித் தெருவில் நடைபெற்று வரும் 'மறைமலையடிகள் நூல்நிலையம்' தொடங்கப் பெற்று 24-8-72 உடன் பதினான்கு ஆண்டுகள் நிறைவுற்றன. மறைமலையடிகள் தம் ஆராய்ச்சிக்கெனத் தொகுத்து வைத்த நான்காயிரம் நூல்களுடன் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சேர்த்து வைத்திருந்த ஐயாயிரம் நூல்களையும் சேர்த்து இந்நூல் நிலையத்தைக் கழகம் சிறப்பாகத் தொடங்கியது.

கடந்த பதினான்கு ஆண்டுகளில் நூலகத்தில் புதிதாக 16,522 நூல்கள் சேர்க்கப் பெற்றன. இவற்றைச் சேர்த்து இன்று நூலகத்தில் சுமார் 26,000 நூல்கள் உள்ளன.

பல்கலைக்கழக, கல்லூரிப் பேராசிரியர்களும் ஆசிரியப் பெருமக்களும் ஆராய்ச்சியாளர்களும் இதனை நன்கு பயன் படுத்துகின்றனர். தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இந் நூலகத்தைப் பயன்படுத்த அறிஞர்கள் வருகின்றனர். மேனாட்டினரும் அவ்வப்போது நூலகத்திலுள்ள அரிய நூல்களை ஆராய வருவர்.

1971-72 ஆம் ஆண்டில் இந்நூலகத்தைப் பயன்படுத்திய வர்கள் 22,497. படித்த நூல்கள் : 10,739; தமிழ்: 7,414; ஆங்கிலம்: 3,325. இவ்வாண்டில் புதிதாகச் சேர்க்கப் பெற்ற நூல்கள் : 2,351. நூல்களை வீட்டிற்கெடுத்துச் சென்று படிப்பதற்காக வழங்கும் பகுதி தனியாக இயங்கி வருகின்றது. இதில் 3,891 நூல்கள் உள்ளன. சுமார் 400 உறுப்பினர்கள் இப்பகுதியைப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாண்டு நூலகத்தில் இரண்டாம் மாடியில் 300 பேர் அமர்ந்து சொற்பொழிவு கேட்பதற்கு ஏற்றவகையில் 'வள்ளலார் திருவருள் மண்டபம்' புதிதாக அமைக்கப் பெற்றது. 29-3-72ல் வள்ளல் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் தமிழகக்

கல்வி அமைச்சர் மாண்புமிகு நாவலர், டாக்டர் இரா. நெடுஞ் செழியன் அவர்களால் இந்த மண்டபம் திறந்து வைக்கப்பெற் றது. நூல் வெளியீடுகளும் பரிசுச் சொற்பொழிவுகளும் இம் மண்டபத்தில் நடைபெறுகின்றன.

இவ்வாண்டில் இந்நூலகத்தைப் பார்வையிட்ட பெரு மக்களுள் குறிப்பிடத் தக்கோர் தமிழக அமைச்சர் மாண்புமிகு க. இராசாராம் அவர்கள், தமிழ் வளர்ச்சி இயக்குநர் கே. எஸ். மகாதேவன், சங்கரி பிரசாத் பாசு, கல்கத்தாப் பல்கலைக் கழகம்; உமேஷ் சர்மா, கனடா; டாக்டர் ஆர். கே. சேத், தில்லிப் பல்கலைக் கழகம்; சி. சிவகுருநாதன், யாழ்ப்பாணம்; நூலகத் தனி அலுவலர் ச. சரோஜினி; குடந்தை துணை நீதிபதி தே. பெ. சு. பழனிசாமி முதலியோர் ஆவர்.

இந்நூலகம் நாடோறும் காலை 8 முதல் 11 மணி வரையிலும் மாலையில் 4 முதல் 8 மணி வரையிலும் திறந்திருக்கும். பொது மக்கள் அனைவரும் இந்நூலகத்தைப் பயன்படுத்தலாம்.

---

## நெல்லை—குமரி இரயில் பாதை

இந்தியாவின் தென் கோடியான குமரிமுனை இதுவரை இரயில் பாதையால் பிற ஊர்களோடு இணைக்கப்படாதிருந்தது, இப் பெருங்குறையை நீக்கும் வகையில் 6-9-72 அன்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் திருநெல்வேலி — நாகர்கோயில் — கன்னியாகுமரி — திருவனந்த புரம் இவற்றை இணைக்கும் புதிய இரயில் பாதையை அமைப் பதற்கு அடிக்கல் நாட்டினர். இந்நிகழ்ச்சி கன்னியாகுமரியில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடை பெற்றது.

இப்புதிய இரயில் பாதையினல் நாங்குனேரி, வள்ளியூர் பனகுடி போன்ற ஊர்களுள் இரயில் தொடர்பு பெறுவதுடன் பல வகைகளில் இவ்வூர் முன்னேற்றம் அமைய வாய்ப்பு ஏற்பட் டுள்ளது. தமிழகத்தில் இரயில் தொடர்பு இல்லாத ஒரே மாவட்டமாக இருந்த கன்னியாகுமரிக்கு அக்குறை நீங்கப் பெற்றது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

# நாமக்கல் கவிஞர் மறைவு

'தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா' என்று பாடித் தமிழினத்தைத் தட்டி யெழுப்பிய காந்தியுகக் கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் 24 - 8 - 72 அன்று பேரா இயற்கையெய்தினார். புரட்சிக் கவிஞர், கவிமணி போன்ற பெருங்கவிஞர்களின் தலைமுறையின் கடைசிக் கவிஞர் ஆவர்.



நாமக்கல்லார் கவிஞர் மட்டுமல்லர்; சிறந்த ஓவியர், பேச்சாளர், அரசியலாளர், எழுத்தாளர், கதை ஆசிரியர், உரையாசிரியர், ஆராய்ச்சியாளர், இசைப் பேரறிஞர் என்று இன்ன பலவாறு அவர்தம் திறமைகளை அடுக்கிச் செல்ல இயலும்.

பாரதிக்குப் பின் நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்ட மாபெருங் கவிஞர் நாமக்கல்லார். சிதம்பரனாருக்குப் பின் விடுதலைப் போரில் சிறைக்குச்சென்ற தமிழறிஞர் நாமக்கல்லார். அரசியலில் தாம் மட்டும் ஈடுபட்டதோடு நின்றுவிடாது 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது' என்று தாய்நாட்டு மக்கள் அனைவருக்குமே விடுதலை வேட்கையை ஊட்டியவர் கவிஞர். 'தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவற்கொரு குணமுண்டு' என்று தமிழினத்தின் தனிப்பண்பை உலகுக்கு எடுத்துக் காட்டியவர் கவிஞர். சிந்தையினால் வாக்கதனால் செய்கைதன்னால் தேசத்திற் கோயாது தொண்டு செய்தவர் கவிஞர். 'நீர் ஒரு புலவன், ஐயமில்லை' என்று வரகவி பாரதியாரால் புகழ்ப் பெற்றவர் கவிஞர்.

'ஏட்' வெங்கடராம பிள்ளைக்கும் அம்மணி அம்மையாருக்கும் எட்டாவது குழந்தையாகத் தோன்றியவர் நாமக்கல் கவிஞர். பிறந்த நாள் 19 - 10 - 1888. இளமைக் கல்வி—கோயமுத்தூர் உயர்நிலைக் கல்வி; 1907 இல் மெட்ரிகுலேசன் தேர்வில் கவிஞர் தேர்வு பெற்றார். 1908-09 ஆண்டுகளில் திருச்சி எஸ். பி. ஜி. கல்லூரியில் எப். ஏ., படிப்பு.

1909 இல் கவிஞர் திருமணம் செய்து கொண்டார். தீராத காது வலியால் படிப்பை விட்டுவிட்டுப் பண்டுவம் பார்க்கச் சென்னைக்குச் சென்றார். வலி போயிற்று, அத்துடன் காதில் விழுந்த ஒலியும் மங்கிற்று.

தந்தையார் விருப்பத்திற்காகச் சிறிது காலம் வட்டாட்சியாளர் அலுவலகத்தில் வேலை பார்த்தார். அதை விட்டுவிட்டு ஓவியம் வரைவதில் ஈடுபட்டு ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்குப் பாரதத் தாயே முடி சூட்டுவது போல ஓவியந்தீட்டி அவரிடமிருந்தே தங்கப் பதக்கம்

பெற்றார். இதற்கு உதவியாக இருந்தவர் பா. வே. மாணிக்க நாய்க்கர். இருவரும் வடநாட்டுத் தலங்கள் முழுவதும் கண்டு களித்தனர்.

காந்தியின்பால் கொண்ட ஈடுபாட்டால் காங்கிரசில் சேர்ந்து 1921 முதல் 1930 வரை தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று பாடியும் பேசியும் காங்கிரசின் கொள்கைகளைப் பரப்பினார். 1932 இல் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஓராண்டு சிறை சென்றார். 1937 இல் சேலம் நகராண்மைக் கழக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். தொடர்ந்து அப்பதவியில் பலகாலம் தொண்டாற்றினார். விடுதலைக்குழைத்த வீரராக அவர் விளங்கியதால் நாடு விடுதலை பெற்றபின் தமிழகத்தின் 'அரசவைக் கவிஞர்' ஆனார். 'பத்மஸ்ரீ', 'பத்மவிபூஷன்' என்னும் பட்டங்களையும் பெற்றுப் புகழுடைந்தார்.

அரசியலிலும் கவிதை எழுதுவதிலும் ஈடுபட்டாலும் சிறந்த புதினங்களையும் ஆராய்ச்சி நூல்களையும் எழுதியுள்ளார். திருக்குறளுக்கு இவர் எழுதியுள்ள உரை புதுமையானது.

நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் மிக்க நாமக்கல் கவிஞரின் மறைவு நம் நாட்டிற்குப் பேரிழப்பாகும். அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தார்க்கு நம் ஆறுதலைக் கூறி அமைதி காண்போம்.

---

## இந்தித் திணிப்பு - கேரள இதழாசிரியர் எச்சரிக்கை

மீண்டும் மொழிப்பிரச்சினை தலைதூக்காதிருக்க வேண்டுமானால் இந்தி பேசாத மக்களின் ஆத்திரத்தைத் தூண்டவேண்டாம் என நடுவண் அரசைக் கேரள இதழாசிரியர் கே. பி. கேசவமேனன் எச்சரித்துள்ளார்.

நடுவணரசு அண்மையில் நடைபெற்ற விடுதலை வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் நாட்டு விடுதலைப் போரிலீடுபட்டவர்கட்குச் செப்புப்பட்டயம் வழங்கியது. இதைப் பெறுவதற்குத் திரு மேனன் தில்லிக்குச் சென்றிருந்தார்.

இந்தி பேசாத மக்களின் கவலையைப் புதுப்பிக்கும் வகையில் பட்டயம் வழங்கு விழா நடைபெற்றது என்றார். விழா ஒத்திகை பெரும்பாலும் இந்தியிலேயே விளக்கப்பட்டதாம். பிரதமர் பட்டயத்தை வழங்குமுன் இந்தியில் நீண்டநேரம் பேசினாராம். சுருக்கமாக ஆங்கிலத்தில் பேசினாராம். ஆனால் சவான், பகுகுணா போன்ற அமைச்சர்களோ இந்தியில் மட்டுமே உரை நிகழ்த்தினார்களாம். எல்லாவற்றிற்கும் மேலாக, செப்புப் பட்டயத்தில் இந்தியில் மட்டுமே விருதின் விளக்கம் பொறிக்கப்பட்டுள்ளது.

செங்கோட்டையில் பேசிய இந்திரா அம்மையார் இந்தியில் மட்டுமே பேசினார். ஆங்கிலத்தில் பேசவே இல்லை. இத்தகைய நிகழ்ச்சிகள் இந்தி வெறியர்களின் உண்மை உருவைக் காட்டுகின்றது.

இந்நிலையில் தேசிய ஒருமைப்பாட்டுக்கு உழைக்க நாம் மனப்பூர்வமான உறுதியுடன் இருக்கிறோமா என்ற ஐயம் எழுவதாகத் திரு. மேனன் குறிப்பிடுகிறார். நடுவணரசு இந்தியைத் திணிக்கும் வேகமும், பிடிவாதமும் தேசிய ஒற்றுமைக்குத் தீங்கு உண்டாக்கக் கூடும் என்ற கருத்து வளர்கிறது என்கிறார் திரு. கேசவ மேனன்.

# செய்திகளும் குறிப்புக்களும்

## இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் உயிர்க்கொடை தந்தவர் குடும்பங்கட்குத் தமிழக அரசினர் தரும் உதவிக்கொடை

*1965 ஆம் ஆண்டில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது செந்தமிழ் காக்க வெந்தீயக்குத் தம்மை இரையாக்கிய தமிழ் வீரர்கள் ஒன்பதின்மர் குடும்பங்கட்குத் திங்கள் ஒன்றுக்கு 100 ரூபா உதவித்தொகை(மானியம்) வழங்குவதென்றும், அதனை 1972 ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து கணக்கிட்டு அளித்தல் வேண்டும் என்றும் தமிழக முதல்வர் கடந்த மார்ச்சுத் திங்கள் 30 ஆம் நாள் சட்டப் பேரவையில் அறிவித்தார். அதனை இப்போது செயல்படுத்துவதென முடிவெடுத்து, அந்த ஒன்பது குடும்பங்கள் பற்றிய செய்திகள் தொகுக்கப் பட்டுள்ளன. இச் செய்தி அண்மையில் வெளிவந்த அரசு அறிக்கை மூலம் தெரிய வருகிறது. இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் "உயிர் தமிழுக்கு—உடல் மண்ணுக்கு" என்று உயிர்க்(தியாகம்)கொடை தந்த அந்த ஒன்பதின்மர் பெயர்களும், அவர்கள் சார்பில் அரசின் உதவித் தொகை பெறக் கூடிய உரிமையுடையோர் பெயர்களும் வருமாறு :*

1. **விருகம்பாக்கம் அரங்கநாதன் :** *திருவாட்டி மல்லிகா (மனைவி).*
2. **அய்யம்பாளையம் வீரப்பன் (ஆசிரியர்) :** *நல்லப்பன் செட்டியார் (தந்தை).*
3. **கீரனூர் முத்து :** *டி. நடேசன் (தந்தை).*
4. **விராலிமலை சண்முகம் :** *இராமையா முதலியார் (தந்தை).*
5. **கீழப்பழூர் சின்னச்சாமி :** *திருவாட்டி கமலம் (மனைவி).*
6. **சாத்தமங்கலம் முத்து :** *திருவாட்டி பார்வதி (அன்னை).*
7. **மாணவர் தண்டபாணி, பீளமேடு :** *மாரியப்ப முதலியார் (தந்தை).*
8. **மாயவரம் சாரங்கபாணி :** *கலியாண சுந்தரம் (தந்தை).*
9. **சிவலிங்கம், தேவூர் :** *(இவர் குடும்பம் பற்றிய ஆணை தனியே பின்னர் வெளியிடப்படும்).*

*இங்ஙனம் இந்தி எதிர்ப்பில் உயிரீந்த உத்தமர் குடும்பங்கட்கு அரசினர் செய்யும் இவ்வுதவி பெரிதும் பாராட்டத்தக்கது. வாழ்க தமிழ்! வளர்க தமிழக அரசின் தமிழ்ப்பற்று!*

## இந்தியின் பிடி இறுகுகிறது!

*இனி இந்தி பேசும் மாநிலங்கட்குக் கடிதங்கள் எழுதும்போது நடுவண் அரசின் அலுவலர்கள் இந்தியிலேயே எழுத வேண்டுமாம். பிற மாநிலங்கட்கு எழுதும்போது இன்றியமையாத கலைச்சொற்கள், சுற்றறிக்கைகள் ஆகியவற்றில் ஆங்கிலத்தில் எழுதலாம் என விதி விலக்குக் கூறியுள்ளனர். ஆனால் கோப்புக்களில் குறிப்புக்கள் எழுதும் போது ஆங்கிலம் வேண்டும் என்ற கட்டாய மில்லை எனவும் இந்தி*

யிலேயே எழுதலாம் எனவும் அறிவித்துள்ளது. ஆங்கிலத்தையும் பயன் படுத்தலாம் என்றும் அதே நேரத்தில் குறிப்புக்களை இந்தியில் எழுதவும் இடமளித்தால் இந்தி வெறியர்கள் இந்நிலைத்தானே விரும்புவர். இதை ஏனோ அரசினர் உணரவில்லை? ஆக மொத்தமாகப் பார்க்கின்றபோது இந்தியின் பிடி இறுகுகிறது என்பது தெளிவாகிறது.

## திராவிட மொழியியல் ஆராய்ச்சி

திராவிட மொழிகளின் இலக்கணம், இசை, நாட்டுப் பாடல்கள், உச்சரிப்பு ஆகியவற்றிடையே காணப்படும் பொதுத் தன்மை ஆகியன பற்றி ஆராயத் திருவனந்தபுரத்தில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாராய்ச்சியில் ஈடுபடும் முதுபெரும் புலவர்கள் நால்வர், பயிற்சி பெறும் இளங் கலைஞர் நால்வர் ஆகியோர்க்கு உதவிச் சம்பளம் வழங்கு வதென அக்குழுவினர் ஒரு திட்டம் வகுத்துப் பணியாற்றுகின்றனர். இத்திட்டத்திற்குத் தமிழக அரசு இவ்வாண்டு நாற்பதினாயிரம் ரூபா உதவித்தொகை வழங்கியுள்ளது. முதுபெரும் ஆராய்ச்சியாளர்க்குத் திங்களொன்றுக்கு இரண்டாயிரம் ரூபாவும், இளங் கலைஞர்க்கு ஐந்நூறு ரூபாவும் உதவித் தொகையாக வழங்கப்படுமாம். இத்தகைய ஆராய்ச்சி யின் பயனாகச் சிதறிக் கிடக்கும் திராவிட மொழிகளும், நாகரிகமும் வளம்பெற்றுத் திராவிடர்களுக்கிடையே ஒரு பொதுத் தன்மையும் சிறப்பும் வளர வாய்ப்பு ஏற்படும் என இத்திட்டக் குழுவின் செயலாளர் பேராசிரியர் டாக்டர் திரு. வி. ஐ. சுப்பிரமணியம் அறிவிக்கிறார்.

## திருவள்ளுவர் கோயில் சீர்திருத்தம்

மயிலையிலுள்ள திருவள்ளுவர் கோயிலை 9-9-72 இல் தமிழக முதல்வர் கலைஞர், டாக்டர் திரு. மு. கருணாநிதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு என். வி. நடராசன், அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு கண்ணப்பர் ஆகியோர் பார்வை யிட்டனர். அதுகாலை அக்கோயிலைச் சீர்திருத்த வேண்டியதன் இன்றி யமையாமையினை உணர்ந்த கலைஞர் அவர்கள், அதற்கென ஒரு திட்டம் தந்துள்ளார். அதனை, அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கண்ணப்பர் அவர்கள் பின்வருமாறு செய்தியாளரிடம் தெரிவித்தார் :

பூம்புகாரில் ஓவியங்கள் சிற்பங்கள் மூலமாகச் சிலப்பதிகாரம் சித்திரிக்கப் பட்டிருப்பதுபோல் மயிலைத் திருவள்ளுவர் கோவிலிலும் திருக்குறள் பற்றியும், திருவள்ளுவர் பற்றியும் விளக்கும் சிற்பங்களும் ஓவியங்களும் கொண்ட கலைக்கூடம் ஒன்று நிறுவப்படும். இப்பணியினை மேற்கொள்ள ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் புரவலராகக் கலைஞர் அவர்களும், தலைவராகத் தவத்திரு குன்றக்குடி யடிகளாரும், செயலாளராகக் கோவை நா. மகாலிங்கம் அவர்களும் அமர்ந்தப் பெற் றுள்ளனர்.

---

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2/140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில்
திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

பதிவு எண்: M. 4899

XVC: 23

## பிற பதிப்பாளரின் வெளிய...

| | | |
|---|---|---|
| தமிழ் மொழி வரலாறு —பேரா. மோசசு பொன்னையா, எம். ஏ. | 4 | 00 |
| புதுத் தமிழ் முதல்வர்கள் —டாக்டர் சாலை இளந்திரையன் | 3 | 50 |
| நாவல் இலக்கியம் —மா. இராமலிங்கம், எம். ஏ. | 4 | 00 |
| நினைவின் நிழல்கள் —நா. பார்த்தசாரதி | 4 | 50 |
| மனக்கண் ,, | 4 | 00 |
| தெய்வக் கற்பினள் கைகேயி —தி. மாணிக்கவாசகம், எம். ஏ. | 1 | 00 |
| ஆய்வு மலர் —தொகுப்பு: டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் | 10 | 00 |
| சுடர் விளக்கு —கோமகள் | 3 | 00 |
| அலைகடலில் —ராஜம் கிருஷ்ணன் | 3 | 00 |
| நான்கண்ட ஜெர்மனி —மேரி மாசிலாமணி, எம்.ஏ., எல். டி. | 4 | 50 |
| இதயம் பேசுகிறது —மணியன் | 2 | 50 |
| சொல்லாஞ்சலி —கவிஞர் என். வி. கலைமணி | 4 | 25 |
| மௌனப் புன்னகை — ஆர். வி | 7 | 50 |
| புதிய தமிழ்க் கவிதை —டாக்டர் சாலை இளந்திரையன் | 3 | 00 |
| கண்ணதாசன் கவிதைகள் —கவிஞர் கண்ணதாசன் | 3 | 00 |
| குருபீடம் — ஜெயகாந்தன் | 3 | 50 |
| திருக்குறள் அமைப்பும் முறையும் —(சென்னைப் பல்கலைக் கழகம்) | 12 | 50 |
| கப்பலோட்டிய சிதம்பரனார் —ம. பொ. சி. | 3 | 50 |
| The Great Patriot V. O. Chidambaram Piliai, MA. P.O.S I. (ஆங்கில ஆக்கம்: சௌந்திர மகாதேவன்) | 2 | 50 |

## திரு வ. உ. சிதம்பரனார் இயற்றிய நூல்கள்

| | | |
|---|---|---|
| மனம் போல வாழ்வு | 1 | 25 |
| அகமே புறம் | 1 | 00 |
| வலிமைக்கு மார்க்கம் | 1 | 75 |
| சாந்திக்கு மார்க்கம் | 1 | 75 |
| மெய்யறிவு | 1 | 50 |

அப்பர் அச்சகம், சென்னை-1.